# ஈழத்தமிழர் வரலாற்றுச்சுவடுகள்



நா.நவநாயகமூர்த்தி

942.1
நவநா
SL/PR

# ஈழத் தமிழர் வரலாற்றுச் சுவடுகள்

நா.நவநாயகமூர்த்தி

வானதி வெளியீடு

வானதி பவனம்
பனங்காடு
அக்கரைப்பற்று
2002

## சமர்ப்பணம்

மூன்று குலத்தமிழ் மன்னர்
மூண்ட நல்லன்பொடு நித்தம் வளர்த்து
ஆன்ற மொழிகளினுள்ளே உயர்
ஆரியத்திற்கு நிகரென வாழ்ந்த
என் அன்னை தமிழுக்கு
இந்நூல் சமர்ப்பணம்

- ஆசிரியர்.

**வானதி வெளியீடு - 5**

**பதிப்புத் தரவுகள்**

**தலைப்பு** : ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள்

**வகை** : ஆய்வு

**ஆசிரியர்** : நா.நவநாயகமூர்த்தி (ஆய்வார்வலர்)

**மொழி** : தமிழ்

**வெளியீடு** : வானதி வெளியீடு
வானதி பவனம் , பனங்காடு
அக்கரைப்பற்று

**அச்சுப்பதிவு** : மல்ட்டி ஓப்செற் அச்சகம்,
அக்கரைப்பற்று

**கணனிப் பதிவு** : மா.லோகநாதன்
அக்கரைப்பற்று

**வெளியிட்ட நாள்** : 14-04-2002

**பக்கங்கள்** : 127

**விலை** : ரூபா 150/=


இந்நூலை வெளியிடவேண்டும் என்ற எனது எண்ணம் ஈடேற மூலகர்த்தாவாகவிருந்த அருட்கவியரசு விஸ்வப் பிரம்மஸ்ரீ வை. இ. எஸ். காந்தன்குருக்கள் ஐயா அவர்களை சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன்.

- ஆசிரியர்.



# பொருளடக்கம்

| | |
|---|---|
| வாழ்த்துப்பா | 6 |
| சிறப்புரை | 10 |
| அணிந்துரை | 13 |
| என்னுரை | 16 |
| இவர்களுக்கு எனது இதயபூர்வமான நன்றி | 19 |
| 1. ஈழத்தின் பூர்வகுடியினர் | 21 |
| 2. மனு மன்னன் | 37 |
| 3. தீகவாபி வளர்ச்சியில் தமிழ் மன்னர்களின் பணி | 43 |
| 4. அனுதரபுர ஆட்சியில் ஐந்து தமிழ் அரசர்கள் | 53 |
| 5. தென் கிழக்கிலங்கையில் சோழர் ஆட்சி | 58 |
| 6. பொலநறுவை ஆட்சியில் தமிழும் சைவமும் | 65 |
| 7. மூன்றாம் குலோத்துங்கனின் ஈழப்படையெடுப்பு | 71 |
| 8. கி.பி.1505ல் இலங்கையில் நிலைத்திருந்த சுதந்திர அரசுகள் | 77 |
| 9. கண்டி மன்னர் காலத்தில் தமிழ் இலக்கியம் | 83 |
| 10.சம்மாந்துறையில் தமிழர் நாகரீகம் | 88 |
| 11.ஆதிக்குடியினர். | 115 |



**அகில இலங்கை தர்மோதய ஸ்தாபகர் பிரம்மாதின குருகுல பீடாதிபதி**
**சித்தாந்தவித்தகர், செஞ்சொற்கொண்டல், பல்கலைப்புலவர், அருட்கவியரசு,**

## விஸ்வபிரம்மஸ்ரீ வை.இ.எஸ்.காந்தன் குருக்கள்

**(கண்மணிதாசன், ஏரூரான்) அவர்கள் உவந்தளித்த வாழ்த்துப்பா**

கந்தபாணத்துறை கந்தன் கைவேல்
எந்தநாளும் நின்துணையாகுக!
அவ்வருளாலே,
நிந்தனின் திறன்தனை நெஞ்சினில் ஏற்றி
சிந்தனை செய்தேன், நின்சிறப்புகள் தோன்றின;
தோன்றியவகையில்,
தொல்பொருள் ஆய்வுகள், வல்லமைத்திறனும்
நல்லோய், உன்னிடம் நானறிந்ததுவே.
மறைந்துபோன பல்வகை மறைவுகள்
முறையாய் ஆய்ந்த முயற்சியினாலே
எத்தனை உண்மைகள், எத்தனை புதுமைகள்
அத்தனையும் நீ ஆய்ந்த முத்துக்கள்
தம்பிலுவில் எனும் தன்னார்பதியில்
அம்மன் அருளும், அழகன் கருணையும்
தவமாய்ப் பூத்து தமிழாய்ப் பிறந்தாய்!



உவந்தனம், உன்புகழ் உளந்தனில் ஏற்றி
நித்தலும் நின் உளம் விந்தையே புரிய,
சித்தமே தெளிந்து, தெளிந்த ஆய்வுகள்
காலம் செய்த கோலத்தன்மையால்
ஞாலம் தன்னில் தமிழர்தம் சான்றுகள்
மண்ணில் புதைந்து மறைபொருளாயின
எண்ணினாய் அ∴தினை, இயற்றினாய் நூல்கள்
கண்ணியம் மிக்க
கனித்தமிழ் ஆய்வாளா!
முருகனின் ஆணையை முன்னதாய்க் கொண்டு
கருதிய கருமம் உறுதியாய்ப் பற்றினாய்!
இறுதியும் முடிவும் இல்லான் இந்நகர்ப்பதியான்
அறுதியாய் உகந்தையில் அமர்ந்தநல் வேலோன்!
உன்னைக் காப்பான் உன்பணிக்கென்றும்
நன்நிழலாக நாடுவான் தினமும்
ஆதலால் மன்னோ
வாழிய நீவீர்
ஈழத்தமிழனின் வரலாற்றுண்மையை
ஆழச்சுவடாய் தந்தனைபோதா
இன்னும் பலநூல் காலத்தின் தேவை
நன்மனமுடையோர் உதவுவார் அதற்கு
எந்நாளும் நீ இப்பணி செய்க
அந்நாள் வரைக்கும் அடியேனின் ஆசியே.

**இவ்வண்ணம்,**
**விஸ்வப்பிரம்மஸ்ரீ காந்தன் குருக்கள்**

**பிரம்மாதினக் குருக்கள்**
**ஸ்ரீகாளிபுரம், பெரியபோரதீவு**
**2001-12-14**

# ஆசியுரை

மரக்கோட்டம் தீர்க்கும் நூல் அஃதே போல் மாந்தர் மனக்கோட்டம் தீர்ப்பதற்காகவே நூல் அமையவேண்டும் என்பதே நன்னூல் ஆசிரியர் வகுத்த வரைவிலக்கணமாகும்.

நூல் அறிவை ஒளியுடையதாக்கி அதனை அகலமுறச் செய்து அவ்வகன்ற ஒளிவிளக்கத்தின் கண்ணே முன்னர் காணப்படாததும் உலப்பிலா இன்பந் தருவதுமான நுண்பொருள் கண்டு இன்புறச் செய்வதுமாயிருக்க வேண்டும் என்பதே பண்டிதமணி கதிரேசன் செட்டியாரின் கருத்தாகும்.

நாடறிந்த ஆய்வாளர் திரு.நா.நவநாயகமூர்த்தி அவர்கள் தன்னை ஓர் 'ஆய்வார்வலர்' என அழைத்துக் கொள்வது அடக்கம் என்னும் பண்பின் அடிப்படையில் என்பதே உண்மையாகும். இது ''அறிஞர்க்கு அழகு ஆய்ந்தறிந்து அடங்கல்'' என்பதற்கு அமைவாக அமைவது போற்றற்குரியது.

''ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள்'' என்னும் இவ்வாய்வு நூல் திரு.நவநாயக மூர்த்தியின் அறிவாற்றலுக்கு மேலும் மெருகூட்டும் ஓர் ஆய்வுப் படைப்பு என்பதில் ஐயமில்லை. இந்நூல் உண்மையை உணர்த்தி அறியாமையை அகற்றிக் கற்போர் மனக்கோட்டம் நீக்க வல்லது என்பது மகிழ்ச்சிக்குரியது.

உண்மை வெளிக்கொணரப்படும் வரை மக்கள் பொய்யினை மெய்யென்று மயங்கி இருட்டிலே குருட்டாட்டமாடி இன்னலுறுவது இயல்பே. ''ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள்'' என்னும் இந்நூல் ''வந்தேறு குடிகள்'' என்ற வதந்தியைப் போக்கி ஈழத்தில் தமிழரே பூர்வீகக் குடிகள் என்பதை நிறுவ உதவும் தாக்கமான சான்றாய் அமையும் பெற்றியது என்பது எனது பணிவான கருத்தாகும்.



பாடசாலை என்பது படிக்கப் படிக்கும் இடம். கற்றலின் அடிப்படை நுட்பங்களைத் தம்பிலுவில் மகாவித்தியாலயத்தில் மிக்க ஆர்வத்தோடு கற்றுக் கொண்ட ஆய்வாளர் திரு.நா.நவநாயகமூர்த்தியின் அறிவுத்தேடலின் ஆர்வம் பாடசாலை மட்டத்திலேயே இனங்காணப்பட்டு ஊக்குவிக்கப்பட்டமை பெரும் பயன் தருவது கண்டு பெருமகிழ்ச்சி அடையும் வழிகாட்டிகளுள் நானும் ஒருவன் என்பதை எண்ணி மகிழ்கிறேன்.

''வரலாறு, சமயம், பட்டறிவு என்பன மனிதனின் முன்னே அறிவுப் புத்தகத்தைத் திறந்து வைக்கின்றன. ஆனால் மனிதன் அதனை வாசிப்பதில்லை'' என்பதே நாம் காணும் நிலை. ''கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன்'' என்பதை நாம் கருத்திற் கொண்டு கற்றுக் கற்றபடி நிற்கும் விருப்பை விருத்தி செய்து பெரும்பயன் பெற்று நாம் வரும் போது இருந்ததை விட இந்த உலகைச் சிறந்த இடமாக்கிச் செல்வதே பிறவிப் பெரும் பயன்.

ஆய்வாளர் திரு.நா.நவநாயகமூர்த்தியின் அறிவாற்றல் தரும் படையல்களைச் சிந்தனைக்கு விருந்தாகக் கொள்வோர் பெரும் பயன் பெறுவர் என்பதால் அவர் ஆய்வு முயற்சிகள் தொடர இறைவன் திருவருள் பாலிக்கவேண்டும் என வேண்டி அமைகின்றேன்.

**R.S.நடராஜா**

R.S.Nadarajah. M.A., Dip.in.Ed.. S.L.A.E.A.S
(Emeritus PRICIPAL , PALALY T.C)
30 - 5/3 Nelson Place,
Wellawatte
COLOMBO-06

# சிறப்புரை

நால்வகை நிலங்களுள் முல்லை, மருதம், நெய்தல் ஆகிய மூன்று நிலவளங்களையும் முழுதாகப் பெற்றுள்ள கிராமம். முதுபெரும் தமிழ்க்குடிகள் வரையறுத்துக் கூற முடியாதுள்ள கால எல்லையைக் கடந்து வாழ்ந்து வரும் கிராமம். தனக்கென தனிப்பாரம்பரியத்தை தாங்கி தழைத்து வந்த கிராமம். அதுதான் ''தம்பிலுவில்'' எனும் எழில் பொங்கும் கிராமம். சோலை வனப்பும், சொரியும் பால் தயிர் நெய் வளமும், காலைக் கதிரவனைக் குளிப்பாட்டி அனுப்பும் கடல் வளமும், சேலாடும் சேறாட, செறிந்து பொலி செந்நெல் வயல் வனப்பும் மெருகூட்ட ஊருக்கே உவப்போடு சோறிடும் உளம் கொண்டோர் வாழ்ந்துவரும் வனப்புமிக்கது அந்தச் சிறிய கிராமம்.

இந்தக் கிராமம்தான் இந்த ஆய்வாளனை உருவாக்கியது. தவழ்ந்தது அங்கேயே, தன் கல்வியைத் தொடர்ந்ததும் அங்கேயே. ஆய்வுக்கான அடித்தளம் கண்டதும் அங்கேயே. நான் ஏன் இப்படி அடித்துக் கூறுகிறேனென்றால் நான் பிறந்து வளர்ந்து கற்றுத் தேறியதும் அதே சூழல்தான். அதனால் அமுதினும் இனிய மொழியை நாவடக்கத்தோடு பேசும் நவம், நவக்கிளி எனச் செல்லமாக அழைக்கப்படும் நவநாயகமூர்த்தியோடு அறிவு தெரிந்த காலம் முதல் எழுபதுகளின் முன்னரைப் பகுதிவரை மிக நெருக்கமாக உறவாட முடிந்தது.

அறுபதுகளின் முன்னரைப் பகுதியில் வயல்களும், கோயில் குளங்களும், கடற்கரைத் தென்னந்தோப்புகளும் எங்கள் காலடி உறுத்தல்களால் திணறிப் போயின. அந்தளவுக்கு பாடசாலை தவிர்ந்த நேரங்கள் முழுவதும் எங்கள் வாசம் இதுபோன்ற திறந்த வெளியரங்குகளிலேயே. அந்த நாட்களில் தொடர்ந்து வாசிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொண்ட நவம் எந்த விடயத்திற்கும் கேள்வி எழுப்பித் துளைத்துக் கொண்டிருக்கும் பாங்கினையும் வளர்த்துக் கொண்டார்.



இவரைத் தொல்லியல் ஆய்வுக்கும் பழமையைப் புரட்டி புகுந்து பார்க்கும் உந்தலுக்கும் உரம் போட்டவை, சூழலும் சுபாவமுமே. இக்காலத்தே எங்கள் கோயில் தரிசனங்களின் போது அவரால் எதனையும் அப்படியே சும்மா பார்த்துக் களித்துவிட்டு வரமுடியாத அப்படி ஒரு மனநிலை. அப்போதைய நிகழ்வுகளில் ஒரேயொரு சம்பவத்தை மட்டும் நினைத்துப் பார்க்கிறேன்.

போக்குவரத்து அப்பகுதிக்குள் விரிவடையாத காலம். தம்பிலுவில் கிராமத்திற்குத் தெற்கே எட்டு மைல் தொலைவிலுள்ளது, வரலாற்றுப் பெருமை மிக்க சங்கமான்கண்டி காட்டுப்பிள்ளையார் ஆலயம். இதற்கு மாட்டு வண்டியில் தான் தம்பிலுவிலிலிருந்து பெரும்பாலானோர் அதிகாலையில் புறப்பட்டு அவல் படைக்கவும் மதியபூசைக்கு பொங்கல் செய்யவும் பிரயாணம் மேற்கொள்வது வழக்கம். அக்காலத்தே ஒரு நாள் இருவேறு குடும்பங்களாக சங்கமான்கண்டி சென்றோம். நாம் சிறுவர். பெரியோர் பொங்கலுக்கான ஆயத்தங்களில் ஈடுபட, நாம் ஒரு சிறு சந்தினூடே சில்லூறுச்சத்தம் கானக சுத்தை வழங்க களைப்பை மறந்து நடக்கத் தொடங்கினோம். குறிப்பிடத்தக்களவு தூரம் காட்டு வழியே சென்றதும் முற்றுமுழுவதும் கருங்கற்களாலான ஒரு காவலரணும் மாளிகையும் மிகவும் சிதைந்த நிலையில் எம் கண்களில் பட்டன. அன்று திரு.நவநாயக மூர்த்தியின் விழியிலும் நினைவிலும் எழுந்த கேள்விகளும் அவரோடு ஊறிக் கிடந்த துருவி அறியும் மனப்போக்கும் இன்றுவரை அவர் வாயிலாக வெளிவந்து கொண்டிருக்கும் பல்வேறுபட்ட ஆய்வுக் கட்டுகரைகளும் அதன் வழியோடிய நூலாக்கங்களும் நமக்குக் கிடைக்க வழிகோலின என்பது எனது அபிப்பிராயமாகும்.

கடந்த பதினைந்து ஆண்டுகளாக மொழி, வரலாறு, சமயம், இலக்கியம், கலை, பண்பாடு ஆகிய பல்வேறுபட்ட துறைகளுள்ளும் நுழைந்து அவற்றுள்ளே தான்தேடிப் பெற்றவற்றை மற்றையோரும் துய்த்துணரும் வண்ணம் தொடர்ச்சியாக படைத்தளித்து வருகின்றமை பாராட்டத்தக்கதாகும். நாம் வெறுமனே மனத்துதித்த உணர்வுகளை வார்த்தையால் பாராட்டினாலும் இப்பாராட்டுக்கள் பல்வேறுபட்ட மட்டங்களிலும் கனதியம் பெறுமானமுமுள்ளதாக அமைந்துள்ளமை இவ்வாய்வாளனுக்கு மட்டுமல்ல நமக்கும் உள்ளம் பூரிக்க வைக்கிறது.

அவ்வவ்போது வடக்குக் கிழக்கு பிரதேச மட்டத்தில் வெளிவரும் விசேட மலர்களில் இடம் பிடித்ததுடன் ஒரு தசாப்தத்துக்கு மேலாக வீரகேசரி, தினகரன், தினக்குரல், தினக்கதிர் ஆகிய தேசிய தமிழ் நாளிதழ்களிலும் நவநாயகமூர்த்தியின்

படைப்புக்கள் வெளிவந்துள்ளமை யாவரும் அறிந்ததே. ''தமிழரும் முருகவழிபாடும்'' என்ற இந்து மத புராண நிகழ்வுகளை ஊடறுத்து வாழ்வியலோடு தொடுத்துக்கொண்ட நூல் முதலாய் ''தொல்லியல் சிந்தனைகள் '', ''பண்டைத் தமிழர் பண்பாட்டுக் கோலங்கள்'' , ''பண்டைய ஈழத் தமிழர்'' , ''தம்பிலுவில் கண்ணகி வழிபாடு'' ஆகிய பல்வேறு துறை சார்ந்த நூல்களை அச்சு வாகனமேற்றி தமிழ் கூறு நல்லுலகுக்கு விருந்தளித்துள்ளார்.

அறிவுப் பசியும் ஆய்வு வேகமும் இணைய ஆரம்ப காலத்தே துடிப்போடு தொடங்கிய இவர் பணிக்கு சிறந்ததோர் ஏர்மங்கலமாக இந்நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதல் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனா அவர்கள் 1993இல் வழங்கிக் கௌரவித்த ''ஆய்வார்வலர்'' என்ற பட்டம் அமைந்திருந்தது. அவர் நாமத்தோடு அது இன்றும் ஒட்டி உறவாடுகின்றது. 1996ஆம் ஆண்டிலே இந்து சமய கலாசார திணைக்களம் நடாத்திய அருள்நெறி விழாவிலே இவரது சமயத்துறை சார்ந்த எழுத்துக்களை மதித்து இவரைத ''இந்து சமய நூலாசிரியராக'' கௌரவித்ததோடு பணப்பரிசும் சான்றிதழும் வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

1999 ஆம் ஆண்டிலே இவர் வெளியிட்ட ''கண்ணகி வழிபாடு'' என்ற சமய நூல் இந்து கலாசார திணைக்களத்தினால் சிறந்ததோர் சமய நூலாக தேர்ந்தெடுக்கப்பட்டு பணப்பரிசும் பாராட்டுதலோடு கூடிய சான்றிதழும் வழங்கப் பட்டது. இதே நூல் வடக்குக் கிழக்கு மாகாண சபையினாலும் 1999 இல் வெளிவந்த சமய நூல்களில் சிறந்த சமய நூலாக தேர்ந்தெடுக்கப்பட்டு சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றது.

வாழ்க இவர் நீடுழி வளர்க இவர் எழுத்துப் பணி

**சே.சீவரெத்தினம்**
பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
மட்டக்களப்பு பிராந்தியம்.
2002-02-05



# அணிந்துரை

இவ்வரலாற்று நூலுக்கு அணிந்துரை எழுத முற்படும் இக்கணத்தில், ஏறத்தாழ ஒரு வருடத்திற்கு முன்பு ஓர் ஆய்வு விடயந்தொடர்பாக திருக்கோயில் பிரதேசத்திற்கு நான் சென்றிருந்தபோது இந்நூலாசிரியரான திரு.நா.நவநாயக மூர்த்தியின் வீட்டிற்குச் சென்ற நினைவு கிளர்கின்றது......

குறுகிய நேரமே நூலாசிரியருடன் உரையாட முடிந்ததாயினும் அன்னார் புலமைத் தாகமும் வேகமும் துடிப்பும் 'பிடிப்பு'ம் கொண்டவரென்பதை உணர்ந்து கொள்வதற்கு அது போதுமாயிருந்தது.

இவ்விடத்தில் அதுபற்றியெல்லாம் குறிப்பிடுவதற்கு ஒரு தேவையுண்டு. ஏனெனில் நவநாயகமூர்த்தியின் அத்தகைய ஆளுமையும் ஆற்றலும் ஈழத்துத் தமிழ் ஆய்வாளர்களுக்கு அவசியம் வேண்டப்படுகின்றனவாகின்றன. எத்தகைய ஆய்விற்குமான மூலச்சான்றுகள், துணைச்சான்றுகள் என்பன பகீரதப் பிரயத்தனத் தின் பின்னரே ஈழத்தமிழ் ஆய்வாளர்களுக்குக் கிடைக்கின்றதான அவலநிலை - யதார்த்தநிலை - அவப்பேறானநிலை ஈழத்து ஆய்வுலகிலே நிலவி வருகின்றது. அதற்கு, ஈழத்து அரசியல் நிலைமை, சமூகநிலைமை, அசமத்துவ வளர்ச்சி நிலைமை முதலான பொதுக் காரணங்களும் ஆய்வாளரின் அசமந்தபோக்கு, அவசரப்போக்கு முதலான தனிப்பட்ட காரணங்களும் வாய்ப்பாகி விடுகின்றன.

மேற்கூறிய ஆரோக்கியமற்ற ஈழத்தமிழ் ஆய்வுச் சூழலின் மத்தியில் குறிப்பாக கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் நீண்டகாலமாக வரலாற்றாய்வுத் துறையில் ஈடுபட்டு வந்துள்ளவரான நவநாயகமூர்த்தி, நம்பிக்கைக்குரியதோர் வரலாற்றாய்வாளராக பரிணமித்துள்ளாரென்பதனை இந்நூலிலுள்ள ஆய்வுக் கட்டுரைகள் உறுதி செய்கின்றன.

மேலும் ஈழத்துத்தமிழ் ஆய்வாளர்களைப் பொறுத்தவரையிலே இவ் ஆய்வாளர்களை, தொழில்சார் ஆய்வாளர்கள் (எ-டு: பல்கலைக்கழகம் சார்ந்தோர்), விருப்புநிலை ஆய்வாளர்கள் (வெளியே இருப்போர்) என இருவகைப்படுத்தலாம். (இவ்விருப்புநிலை ஆய்வாளரையும் உயர்கல்வி கற்றோர், சாதாரணகல்வி கற்றோர் எனப் பாகுபடுத்தமுடியும்) இத்தகைய இருபிரிவினரிடமும் பலங்களும் பலவீனங்களும் காணப்படுகின்றமை இயல்பே. உதாரணமாக, தொழில்சார் ஆய்வாளர்களுக்கு ஆய்வு முறையியல் (Methodology ) தெரிந்திருக்க, விருப்புநிலை ஆய்வாளர்கள் அதிக தகவல்கள் அறிந்திருப்பர்.

எவ்வாறாயினும் கடந்த சில வருடங்களாக ஈழத்து தமிழ் ஆய்வுச் சூழலை உன்னிப்பாக அவதானிக்கின்ற போது விருப்புநிலை ஆய்வாளர்களே ஆய்வுத்துறையில் அதிக ஆர்வத்துடன் ஈடுபட்டுவருவது கண்கூடு. இடையறாத தேடல், எழுதும் முயற்சி, எழுத்துப்பயிற்சி, என்பவற்றினால் அத்தகையோருட் சிலர் தமது பலவீனங்களைத் தாமே அறிந்து, தம் குறைகளைந்து கொண்டு தொடர்ந்து எழுதி வருகின்றமையும் தெளிவு. விருப்புநிலை ஆய்வாளரான இந்நூலாசிரியர் இறுதியாகக் குறிப்பிட்ட ஆய்வாளர்கள் வரிசையில் முக்கியம் பெறக்கூடியவரென்பதையும் இந்நூலிலுள்ள ஆய்வுக் கட்டுரைகள் மெய்ப்பிக்கின்றன.

இனி இந்நூலிலுள்ள 11 கட்டுரைகளுக்குள்ளே இறங்கிநின்று அவதானிக் கின்றபோது இவற்றை இவ்வாறு வகைப்படுத்திப் பார்க்கமுடியும் :

i. கிழக்கு மாகாணம் சார்ந்தவை (எ-டு: மட்டக்களப்பு, சம்மாந்துறை, தீகவாபி பிரதேசங்கள் பற்றியவை)
ii. அனுராதபுரம், பொலன்னறுவை சார்ந்தவை
iii. (பொதுவாக) ஈழத்தமிழரது ஆதி வரலாறு சார்ந்தவை

மேற்கூறியவாறு வகைப்படுத்தி நோக்குகின்றபோதுதான் இவற்றின் இன்றைய முக்கியத்துவமும் சிறப்பும் வெளிப்படுகின்றன. அதாவது இன்றைய அரசியல், சமூகச்சூழலில் குறிப்பாக கிழக்கு மாகாணத் தமிழரது வரலாறு பற்றியும், ஈழத்தமிழரின் பூர்வீகம் பற்றியும் பல்வேறு கோணங்களில் - இயன்றளவு ஆதார பூர்வமான முறைகளில் - பல விடயங்களை இக்கட்டுரைகளூடாக சிலவேளைகளில் அகன்றதளத்தில் நின்றும் சிலவேளைகளில் ஆழமான தளத்தில் நின்றும் உரத்துப்பேச முற்படுகின்றமை பாராட்டிற்கும் கவனத்திற்கும் உரிய விடயமாகின்றது.



இவற்றுள் சில கட்டுரைகள் முதன் முயற்சிகளாகவுமுள்ள சிறப்பினைப் பெறுகின்றன. (உ-ம் : சம்மாந்துறையில் தமிழர் நாகரிகம் ) அனைத்தையும் விட ஈழத்தமிழ் பல்கலைக்கழகங்கள் பலவற்றிலே கற்கைநெறியாக வரலாறு ஒரு பாடமாக இல்லாத துர்ப்பாக்கிய நிலையில் - வரலாற்றாய்வாளர்களின் முயற்சிகள் போதாத நிலையில் - வரலாற்றறிவு குன்றிவரும் நிலையில் - வெகுசனப்பத்திரிகை பரப்பிவருகின்றவரென்ற விதத்திலும் இந்நூலாசிரியரது பணி முக்கியம் வாய்ந்ததொன்றாகின்றது.

எனினும் இந்நூலாசிரியர் தமது கட்டுரைகளைத் தாமே மீள்வாசிப்பு செய்வது அவசியம் என்பதையும் கூறியாகவேண்டும். உதாரணமாக, 'வியத்தகு இந்தியா' நூலின் ஆசிரியர் பசாம் அனுராதபுரத்தினை ஆட்சி செய்த மன்னர்கள் பலரைப் பற்றி எடுத்துரைக்கின்ற போது, இந்நூலாசிரியர் ஐந்து மன்னர் பற்றி மட்டும் குறிப்பிடுகின்ற விடயம் இவ்விடத்தில் கேள்விக்குரியதாகின்றது. (ஒரு வேளை விரிவஞ்சியோ பத்திரிகையாளரது நிர்ப்பந்தமோ காரணமாயிருத்தலுங் கூடும்.) எனவே, எளிதில் கிடைக்கக்கூடிய, வரலாறு தொடர்பான பழைய நூல்களை தேடிச்செல்லவேண்டிய அவசியத்தை இவ்விடயம் உணர்த்தி நிற்கின்றது. அதே வேளையில் புதிய நூல்களை நாடுதலும் ஏனைய ஆய்வாளர்களை விட வரலாற்றாய்வாளருக்கு மிக இன்றியமையாததொன்றாகின்றது.

தவிர ஒவ்வொரு கட்டுரையின் பின்னுள்ள குறிப்புகளையும் ஆய்வு முறையியலுக்கு அமையத்தருவது மிக அவசியமானது. நம்பிக்கை நட்சத்திரமான நவநாயகமூர்த்தி தமது வரலாற்றாய்வுகளை மேலும் நுணுக்கமாக நிகழ்த்த வேண்டுமென்ற 'ஆசைபற்றி அறையலுற்ற' இறுதியாக மேலுள்ள குறிப்புகளை அன்னார் புரிந்துணர்வுடன் ஏற்றுக்கொள்வாரென்றே நம்புகின்றேன்.

வாழ்த்துக்களுடன்,

**கலாநிதி. செ.யோகராசா**
தலைவர்,
மொழித்துறை,
கிழக்குப்பல்கலைக்கழகம்
18-02-2002

# என்னுரை

1948ம் ஆண்டு அந்நியரது ஆட்சியின் கீழிருந்து இந்நாடு சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து இங்கு இடம் பெற்று வரும் அரசியல் நிகழ்வுகள், வன்முறைகள் ஆகியனவற்றின் பயனாக, ஈழத்தமிழர் வாழ்வியல் கூறுகள் சிதைக்கப்பட்டுச் சின்னாபின்னப்படுத்தப்பட்டுள்ளன. ஈழத்தமிழரது தனித்துவமான கலாசாரம், பண்பாடு, சமயமரபுகள், பாரம்பரியக் கலைகள் என்பன பெரும் பாதிப்புக்குள்ளானதுடன் தொன்மைமிகு ஈழத்தமிழர் வரலாறும் திரிபுபடுத்தப்பட்டுள்ளது.

பூர்வீகக் குடியினரான ஈழத்தமிழர் வந்தேறு குடியினர் என்ற மாயத் தோற்றத்தை மக்களிடையே சித்திரிக்கும் வகையில் சிங்கள வரலாற்றாசிரியர்கள் சிலர் தங்கள் மனம் போனவாறு ஈழவரலாற்றை உருவாக்கி வருகின்றனர். இத்தீவு சுதந்திரமடைந்த ஆரம்ப காலத்தில் அபிவிருத்தி, குடியேற்றம் என்ற போர்வையில் அக்காலத்தில் காடாகவும், வயலாகவும் இருந்து வந்த பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்கள் ஆக்கிரமிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து பிற்காலத்தில் தமிழர்களின் பூர்வீக வாழ்விடங்கள் பல அழிக்கப்பட்டுத் தமிழர் தாயகக் கோட்பாட்டை சிதைக்கும் பணியில் பேரினவாத அரசுகள் ஈடுபட்டு வந்து ஓரளவு வெற்றியும் கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நமது இன்றைய இளந்தலைமுறையினரிடையே மட்டுமன்றி பெரும்பாலான தமிழ் அரசியல்வாதிகளுக்குக் கூட ஈழத்தமிழர் வரலாறு பற்றிய சிந்தனை, தேடல், அறிவு மிகக்குறைவாகவே உள்ளதென்பதும் கண்கூடாகும். தமிழ் அரசியில்வாதிகளைப் பொறுத்த வரையில் ஒரு மாற்றத்தைத் தற்போது காண முடிகின்றது. இது வரவேற்கத்தக்க தொன்றாகும். இந்நிலை தொடரவேண்டும். இவர்களிடையே தமிழ் தேசிய வாதம் நிலைபெறவேண்டும் என்பதே தமிழ் மக்கள் விருப்பமாகும் எனலாம்.



இத்தீவின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்து வரும் ஈழத்தமிழர்கள் இத்தீவையே தங்கள் பூர்வீக தாயகமாகக் கொண்டு வாழ்ந்து வந்த ஈழத்தவர்களின் வழித்தோன்றல்கள் ஆவர். சிங்கள மக்கள் இத்தீவில் எக்காலந்தொட்டு வாழ்ந்து வருகின்றனரோ அக்காலந்தொட்டு ஈழத்தவர்களான தமிழர்களும் இங்கு வாழ்ந்து வருகின்றனர். ஒரு காலத்தில் ஈழம் முழுவதையும் தங்கள் தாயமாகக் கொண்டிருந்த இவர்கள் பிற்காலத்தில் வடக்கு, கிழக்கைத் தங்கள் தாயகமாகக் கொண்டிருந்ததுடன் அரசுகள் நிறுவிச் சிறப்புடனும் வாழ்ந்து வந்தனர். ஆங்கிலேயரது ஆட்சிக் காலம் வரை வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழர் ஆட்சியே நிலைத்திருந்தது.

சுமார் இரண்டாயிரத்து முன்னூறு வருடங்கள் வரலாற்றினைக் கொண்ட இலங்கைத் தீவானது ஒற்றையாட்சியின் கீழ் என்றுமே இருந்ததில்லை. பண்டைக் காலம் தொட்டுப் பல இராச்சியங்கள் இங்கு இருந்து வந்துள்ளன. கி.பி.1505ல் அந்நியர்களான போர்த்துக்கேயர் இத்தீவில் முதன் முதலில் காலடி எடுத்து வைத்தவேளை மூன்று பெரிய இராச்சியங்கள் இருந்துள்ளன. அவற்றில் ஒன்று வட இலங்கை யாழ்ப்பாண இராச்சியமாகும். இவ்வேளை வன்னிப் பெருநிலப் பரப்பிலும் கிழக்கிலும் தமிழ் சிற்றரசுகள் சிறந்திருந்தன. ஆங்கிலேயரே இத்தீவு முழுவதையும் ஒற்றையாட்சியின் கீழ் கொண்டு வந்தனர். இது வரலாற்றுண்மையாகும்.

பண்டைக் காலத்தில் குறிப்பாக கிழக்கிலங்கையில் தமிழர் வாழ்விடங்களாகவும் ஆட்சிப் பிரதேசமாகவும் விளங்கியிருந்த பல பிரதேசங்களை தமிழ் மக்கள் இன்று இழந்துள்ளனர். இந்த இடங்களில் தமிழர்கள் வாழ்ந்தமைக்கான சான்றுகளே இல்லாதவாறு இந்த இடங்களிலிருந்த தமிழர் வரலாற்றுச் சுவடுகள் அழிக்கப்பட்டுள்ளன. இத்தீவு சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து காலத்துக்குக் காலம் இடம் பெற்று வந்த வன்முறைகள் அபிவிருத்தி என்ற போர்வையில் மேற்கொள்ளப்பட்டு வந்த குடியேற்றங்கள் தமிழர் மீதான அழுத்தங்கள், நில ஆக்கிரமிப்புக்கள், புதிய நிர்வாக மாவட்டம், பிரதேச எல்லை மாற்றங்கள் ஆகியன இதற்குப் பிரதான காரணிகளாக அமைந்தன.

இந்நிலையில் மறைந்து போன நமது பாரம்பரியப் பெருமைகள், மறைக்கப்பட்ட ஈழத்தமிழர் பற்றிய வரலாற்று உண்மைகள் பதிவு செய்யப்பட்டுப் பாதுகாக்கப் படவேண்டும் என்ற நோக்கில் ஓர் அங்கமாக இந்நூல் வெளிவருகின்றது. ஏற்கனவே வெளிவந்த ‘தமிழரும் முருகவழிபாடும்’, தொல்லியல்

சிந்தனைகள், பண்டைத் தமிழர் பண்பாட்டுக்கோலங்கள், பண்டைய ஈழத்தமிழர், தம்பிலுவில் கண்ணகி வழிபாடு ஆகியன இந்நோக்கில் அச்சில் வெளிவந்த எனது ஏனைய நூல்களாகும். இவற்றைத் தொடர்ந்து வெளிவருவதே 'ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள்' என்ற இந்நூலாகும்.

இந்நூலில் பதினொரு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இவற்றில் ஆதிக்குடியினர் (தொல்லியல்) , ஐந்து தமிழ் அரசர்கள் ஆகிய இரு கட்டுரைகள் தவிர ஏனைய ஒன்பது கட்டுரைகளின் சுருக்கப் பிரதிகள் ஏற்கனவே வீரகேசரி, தினக்குரல் தினக்கதிர் ஆகிய நாளிதழ்களில் பிரசுரமாகியுள்ளன. இவை வாசகர்களின் பாராட்டுதல்களையும் பெற்றவை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இக்கட்டுரைகள் விரிவாக்கம் பெற்று நூல்வடிவாக வெளிவருவது காலத்தின் கட்டாய தேவையாகவுள்ளது. நமது எதிர்காலச் சந்ததியிரைக் கருத்தில் கொண்டே இதனைக் குறிப்பிடுகின்றேன்.

*'வானதி பவனம்'* **நா.நவநாயகமூர்த்தி**
*பனங்காடு ,அக்கரைப்பற்று.*
*03-04-2002*



## இவர்களுக்கு எனது இதயபூர்வமான நன்றி

- இந்நூலுக்கு உவகையுடன் வாழ்த்துரை வழங்கியருளிய அருட்பெருங்கடல் விஸ்வப் பிரம்மஸ்ரீ வை.இ.எஸ்.காந்தன் குருக்கள் (கண்மணிதாஸன்) ஐயா அவர்கள்.
- கல்லூரியில் மாணவமானவிருந்த காலத்தில் அமிழ்தினும் இனிய தமிழை செம்மையுறக் கற்பித்துத் தமிழியல் மீது எனக்குத் தணியாத தாகத்தைத் தோற்றுவித்தவரும் அன்புடன் ஆசியுரை வழங்கியவருமான எனது மாபெரும் மதிப்புக்குரிய தமிழ் ஆசான் திரு.ஆர்.எஸ்.நடராசா (M.A., P.G.D.E., S.L.E.A.S) ஐயா அவர்கள்.
- சிறப்புரை வழங்கிய எனது பேரன்புக்குரிய அத்தான் திரு.எஸ்.சீவரெத்தினம் பீ.ஏ. (சிறப்பு) பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, மட்டக்களப்பு.
- இந்நூலுக்கு அணிகலனானச் சீரிய முறையில் அணிந்துரை வழங்கிய தமிழறிஞர் கலாநிதி செ.யோகராசா அவர்கள் (மொழித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்)
- எனது நூல் வெளியீடுகளில் வேண்டிய ஆலோசனைகள் வழங்கி உறுதுணையாகவிருந்து வருபவரும் இந்நூலுக்கு புருப் திருத்தி உதவியவருமான எனது அன்புக்கினிய நண்பர் திரு.மா.லோகநாதன் (ஆசிரிய ஆலோசகர்) அவர்கள்.
- தமிழக அறிஞர் பலரின் அன்பும் ஆதரவும் எனக்குக் கிடைக்கக் காரண கர்த்தாவாகவிருந்த ஈழத்துப் பெரியார் ஸ்ரீமான் எஸ்.ஐ. சுப்பிரமணியஐயர் (விஷ்ணுபுரி, மல்கஜ்கிரி, ஹைதரபாத்) ஐயா அவர்கள்.
- எனது இலக்கியப் பணியினைப் பாராட்டி ஊக்கம் அளித்துவரும் பெருமதிப்புக்குரிய தமிழக அறிஞர் பேராசிரியர் டாக்டர்.வா.செ. குழந்தைசாமி (மதுரை காமராசர் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர், முன்னாள் அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தர்) ஐயா அவர்கள்.
- தான் எழுதிய 'ஈழம் தமிழரின் தாயகம்' நூலினை சிரமம் பாராது அன்புடன் எனக்கு அனுப்பி உதவிய தமிழக அறிஞர் டாக்டர் க.ப. அறவாணன் (உபவேந்தர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம்) ஐயா அவர்கள்.

- எனது இலக்கியப் பணிக்கு பல்வகையிலும் உதவிவரும் இலக்கிய நெஞ்சங்கள் இரா.நாகலிங்கம் (அன்புமணி) ஐயா, சகோதரி செல்வி.க. தங்கேஸ்வரி (மட்- மாவட்ட கலாசார உத்தியோகத்தர்) , திரு.எஸ். ஜோன்ராஜன் (திருவோணம்) ஆகியோர்.
- இந்நூலின் மூலப் பிரதியை போட்டோப் பிரதி செய்து தந்துதவியவரும் எனது எழுத்துப்பணி , நூல்வெளியீடு, விற்பனை ஆகியவற்றில் பக்கத் துணையாக விருந்து வருபவருமான அன்பு மைத்துனர் திரு.ச.சாந்தகுமார் அவர்கள்.
- எனது எழுத்துப்பணிக்கு பல்வகையிலும் ஆதரவு நல்கி பேருதவியாக மிளிர்ந்து வரும் இனிய இதயங்கள் சித்தப்பா திரு.எம்.சிவராசா (தம்பிலுவில்) தமபி. செ. முத்துராசா (தம்பிலுவில்) ஆகியோர்.
- ''சித்திரவேலாயுதர் திருக்கோவில்'' ''ஸ்ரீ வள்ளி தெய்வானை சமேதரரான சித்திரவேலாயுதர்'' வண்ணப் படங்களை உவந்தளித்த சிவஸ்ரீ நீ. அங்குசநாதக் குருக்கள் (திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயம்) சகோதரர் திரு.ஆ.கணேசமூர்த்தி (திருக்கோவில்) ஆகியோர்.
- எனது நூல் வெளியீடுகளில் ஆதரவு நல்கி விற்பனையில் பேருதவி புரிந்து வரும் இனிய தமிழ்நெஞ்சங்கள் திரு.க.பொன் கோபால் (தம்பிலுவில்) திரு. ஒலிவர் பிரபாகரன் (திருக்கோவில்) திரு.ச.சாம்பசிவம் (திருக்கோவில்) ஆகியோர்.
- இந்நூலை அழகுற அச்சிட்டுத்தந்த 'மல்ட்டி ஒப்செற்' அச்சக உரிமை யாளர், ஊழியர்கள்.
- எனது எழுத்துப்பணி, நூல்வெளியீடு, விற்பனை ஆகியனவற்றிற்குப் பக்கத்துணையாகவிருந்து தங்கள் பூரண ஆதரவினை நல்கிவரும் அன்பு இதயங்களான பணியாள சோதர, சோதரிகள் (அ.பற்று தெற்கு ப.நோ.கூ. சங்கம், திருக்கோவில் - தம்பிலுவில்)
- எனது எழுத்துக்குப் பின்னால் நின்று ஊக்கம் அளித்துவரும் அன்புத் துணைவி , மக்கள்.
- இந்நூலின் வாசகர்களாக விளங்கப்போகின்ற அனைத்து இனிய இதயங்கள்

**- ஆசிரியர்.**



# ஈழத்தின் பூர்வகுடியினர்

'**ப**ண்டைய ஈழநாகரீகம் கி.மு.ஐந்தாம் நூற்றாண்டளவில் விஜயன் வருகையுடனேயே தொடங்குகின்றது. இதற்கு முன்னர் இத்தீவில் மனிதர்கள் எவரும் வாழ்ந்திருக்கவில்லை. மாறாக, பாம்புகளும் பேய்களுமே இங்கு வாழ்ந்து வந்தன. ஈழநாகரீகத்தைத் தோற்றுவித்தவர்கள் வடஇந்தியாவிலிருந்து இங்கு வந்து குடியேறிய விஜயனும் அவனது எழுநூறு தோழர்களுமேயாவர்.' இவ்வாறு பௌத்த பாளி நூல்களான மகாவம்சம், தீபவம்சம் என்பன குறிப்பிடுகின்றன. இதேவேளை கி.மு.483ல் விஜயனும் அவனது எழுநூறு தோழர்களும் இலங்கைத் தீவில் காலடி எடுத்து வைத்தவேளையில் இங்கு நாகர், இயக்கர் என்ற திராவிடக் குடியினர் நாகரீகச் சிறப்புடன் வாழ்ந்திருந்தனர் என்பதனை பழந்தமிழ் இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

இதனை வரலாற்றாசிரியர்களும் உறுதி செய்கின்றனர். மேலும், விஜயன் காலடி எடுத்து வைத்த காலத்தில் இங்கு வாழ்ந்து வந்தவர்கள் தென்னிந்தியரான திராவிடரே என்பதையும் இதேகாலப் பகுதியில் தென்னிந்தியா போன்றே திராவிடவியல் சார்ந்த பெருங்கற்கலாசாரம் இங்கு நிலவியிருந்ததென்பதையும் ஆய்வுகள் உணர்த்துகின்றன. குறிப்பாக அண்மைக் காலங்களில் இலங்கையின் பல பாகங்களிலும் மேற்கொள்ளப்பட்டுவரும் அகழ்வுகள் மூலமாகக் கண்டெடுக்கப் பட்ட சின்னங்கள், தொல்லியல் சான்றுகள், எச்சங்கள் ஆகியன இதனை நன்கு தெளிவுறுத்துகின்றன.

இந்நிலையில் வரலாற்று இலங்கையின் முதல் மன்னன் என்று சிங்கள வரலாற்றாசிரியர்களால் புகழ்ந்துரைக்கப்படும் விஜயன், ஈழத்தில் காலடி எடுத்து வைத்த காலத்தில் இத்தீவில் வாழ்ந்து வந்தவர்களான பூர்வகுடிகள் பற்றி விரிவாக நோக்கவேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகவுள்ளது. இதற்கான காரணம் இத்தீவின் பூர்வகுடிகள் பற்றி அண்மைக்காலங்களில் சிலர் குறிப்பிட்டு வரும் கருத்துக்கள் எனலாம்.

## விஜயன் வந்த காலத்தில் வாழ்ந்த மக்கள், அரசியல் நிலை

இலங்கைத் தீவின் வரலாறு விஜயன் என்னும் மன்னன் காலத்துடன் ஆரம்பமாகின்றது. வடஇந்தியாவைச் சேர்ந்த இவன் கி.மு.483ம் ஆண்டளவில் இலங்கைக்கு வந்தான் என ஈழவரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. இக்காலத்தில் நாகர், இயக்கர் ஆகிய குடியினர் ஈழத்தில் வாழ்ந்து வந்தனர். இவர்கள் நாகரீகச் சிறப்புடன் வாழ்ந்து வந்ததுடன் நீதிநெறிகள் நிறைந்த ஒழுங்கான அரசமைப்பையும் கைக்கொண்டிருந்தனர். மேலும் இவர்கள் இந்துமத வழிபாட்டு நெறிகளையும் பின்பற்றி இருந்தனர். இதனை சேர் வில்லியம் ஜோன்ஸ்கிளப், பெக்கலோச்சி பென்னற் ஆகிய வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.[1] இவர்கள் இந்தியா விலிருந்து வந்து இதற்கு முன்னர் இத்தீவில் குடியேறிய மக்கள் என்றும் இவர்கள் மேலும் குறிப்பிடுவர்.

கி.மு.ஐந்தாம் நூற்றாண்டில் விஜயன் காலடி எடுத்து வைத்த வேளையில் இத்தீவில் பல நாடுகள் இருந்துள்ளன. அவை நாகர் குடியினராலும் இயக்கராலும் ஆட்சிசெய்யப்பட்டு வந்தன. வடபகுதியில் மாந்தையிலும் (மன்னார்) குதிரைமலை யிலும் (புத்தளம்) கதிரைமலையிலும் (கந்தரோடை) நாகர்குல மன்னர்கள் ஆட்சி புரிந்து வந்தனர். இதனை அகநானூறு (36, 105, 143, 211) புறநானூறு (71, 158, 163, 168, 176) பாடல்கள் கூறும். மேற்கிலங்கையில் அமைந்திருந்த 'கல்யாணி'நாட்டை (களனி) நாகவேந்தன் ஆட்சி புரிந்து வந்தான். மேலும், இத்தீவில் அக்காலத்தில் தெற்கே திசமாறகமை, கிழக்கே கிரிநுவர, மாத்தளைக்கு வடக்கே லெனாதொறை ஆகியன ஏனைய நாகர் இராசதானிகளாகும்.[2]

இவ்வேளையில் முல்லைத்தீவு பகுதியை (முள்ளுத்தீவு) நாகர்குல சிற்றரசன் ஆட்சி புரிந்து வந்ததாக அறியமுடிகின்றது.[3] இது தவிர மண்டூர், திருக்கோவில் (நாகர்முனை), நாகமேடு (களியோடை), சங்குமன்கண்டி, உகந்தை ஆகிய இடங்கள் நாகர் குடியினரின் வாழ்விடங்களாகவும் ஆட்சிப் பிரதேசங்களாகவும் (குறுநில அரசுகள்) மிளிர்ந்து வந்தன. கதிர்காமம், லக்கல, விந்தன, மஹியங்கனை, கிறிஸ்துவத்த ஆகிய இடங்களில் இயக்கர் குடியினர் பெருமளவில் வாழ்ந்து வந்ததுடன் இந்த இடங்களில் இயக்கர் குலத்தவரின் சிற்றரசுகளும்

1. தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயர் ஆய்வும் - பக்.5. கதிர்தணிகாசம் - 1992
2. நாம் தமிழர் - பக்.23 . பா.சங்கரப்பிள்ளை - 1991
3. மட்டக்களப்பு மான்மியம் - பக். 14-15. பதிப்பாசிரியர்: எப்.எக்ஸ்.நடராசா - 1962



நிலைத்திருந்தன. மேலும் லகுகலை, சம்மாந்துறை, போரதீவு ஆகிய இடங்கள் இயக்கர் குடியினரின் வாழ்விடங்களாக இருந்து வந்தன என்பதையும் அறிய முடிகின்றது.

இவ்வாறு இலங்கையில் அக்காலத்தில் நாகரீகச் சிறப்புடன் வாழ்ந்து வந்த நாகர், இயக்கர் குடியினர் மட்டுமன்றி நாகரீகமடையாத வேடர்களும் வாழ்ந்திருந்தனர். இவர்கள் குறிப்பாக இன்றைய வடமத்திய, ஊவா, கிழக்கு மாகாணங்களின் சில இடங்களில் வாழ்ந்து வந்தனர். வேட்டையாடுதலை பிரதான தொழிலாகக் கொண்டிருந்த இவர்களிடையே தென்புலத்தார் வழிபாடு நிலவியிருந்தது. வேடர் என்னும் இச்சாதியார் தென்னிந்தியாவிலிருந்து வந்து இங்கு குடியேறிய மக்களாவர். இன்று நீரினால் சூழப்பட்ட தீவாகக் காணப்படும் இலங்கை தென்னிந்தியாவுடன் இணைக்கப்பட்ட நிலப்பரப்பாக இருந்த காலத்தில் தோணி, மரக்கலம் முதலியவற்றின் துணையின்றி தென்னிந்தியாவிலிருந்து நிலப்பாதை வழியாக இலங்கைக்கு நடந்து வந்து குடியேறியவர்கள் இவர்கள் ஆவர்.[4] இவர்கள் முண்டர் குடியினராவர். விஜயன் இலங்கைக்கு வந்த காலத்தில் இங்கு வாழ்ந்து வந்தவர்கள் நாகர், இயக்கர், முண்டர் ஆகிய குடியினர்கள் ஆவர்.

## விஜயன் ஆட்சிக்காலத்தில் இலங்கை அரசியல் நிலை

கி.மு.483ல் விஜயனும் அவனது எழுநூறு நண்பர்களும் தம்பபன்னி (தாமிரபர்ணி) யில் வந்து கரையேறினர். இதனைத் தொடர்ந்து இப்பிரதேசத்தை ஆட்சி புரிந்து வந்த குவேனி என்ற இயக்க குல மங்கையை விஜயன் மணந்து கொள்கின்றான். இவர்களது திருமண விழா இயக்கமக்களது சிறிஸ்சவத்து நகரில் நிகழ்ந்தது. திருமண கொண்டாட்டத்திற்கென வந்திருந்த இயக்கர் அனைவரையும் குவேனியின் ஒத்தாசையுடன் விஜயனும் தோழர்களும் அழித்தொழித்தனர். (கலாநிதி.க.குணராசா-1996) இதனைத் தொடர்ந்து ஆட்சியைக் கைப்பற்றிய விஜயன் இப்பிரதேசத்து அரசனாக முடிசூடிக்கொள்வதற்கு முன் பாண்டிய நாட்டிலிருந்து தனது அரசியாகப் பாண்டிய இளவரசி ஒருத்தியையும் தனது எழுநூறு தோழர்களுக்கும் எழுநூறு பாண்டிய இராச்சியப் பெண்களையும் வரவழைத்தான்.[5]

4. நம்முன்னோரளித்த அருஞ்செல்வம் பாகம் I - பக்கம் 3, 4 ஜி.சி.மெண்டிஸ் - 1969
5. மகாவம்சம் - அத்தி 7: வரி 49 - 50. மல்லிகைப் பதிப்பகம் - 1962

இவர்களுடன் கைத்தொழில் கலைஞர்களும் பதினெண் குடிமக்களின் ஆயிரம் குடும்பங்களும் வந்திருந்தனர். இதனைத் தொடர்ந்து பாண்டிய இளவரசியை விஜயன் மணம் புரிந்து தனது பட்டத்தரசியாக்கிக் கொண்டு மன்னனாக முடிசூடிக் கொண்டான். பின்னர் பாண்டிய இளவரசியுடன் வந்திருந்த எழுநூறு மங்கையரைத் தனது தோழர்கள் எழுநூறு பேருக்கும் திருமணம் செய்து வைத்து அவர்களுக்கு நிறையச் செல்வங்களையும் வழங்கினான். இவ்வாறு மகாவம்சம் குறிப்பிடுகின்றது. வரலாற்று இலங்கையின் முதல் மன்னனான விஜயன் கி.மு.483 - 445 வரை இலங்கையில் ஆட்சி புரிந்ததாக ஈழவரலாற்று நூல்கள் கூறும்.

விஜயன் பாண்டிய இளவரசியை மணம் புரிந்து ஈழத்தின் முதல் மன்னாக முடிசூடிக்கொண்டதும் பாண்டிய நாட்டு இளவரசியுடன் வந்த எழுநூறு தோழியரும் விஜயனின் எழுநூறு நண்பர்களை மணந்ததாக மகாவம்சம் கூறும் செய்தியை நோக்குமிடத்து இவர்களே ஈழத்தின் நாகரீககர்த்தாக்கள் எனப்பாளி நூல்கள் (மகாவம்சம், தீபவம்சம்) உறுதி செய்வதாகவுள்ளது. இதன் அடிப்படையில் நாம் அவதானிக்குமிடத்து ஆதி ஈழத்து நாகரீக வரலாற்றில் தமிழ் மக்கள் பெற்றிருந்த முக்கியத்துவம் நன்கு தெளிவாகின்றது.[6] மேலும், விஜயன் இலங்கைக்கு வந்த வேளையில் இத்தீவில் மனிதர்கள் எவரும் வாழவில்லை பாம்புகளும் பேய்களுமே வாழ்ந்திருந்தன என்று பாளி நூல்கள் கூறும் செய்திகள் இதனை வலியுறுத்துவதாக அமைந்துள்ளதெனலாம்.

இதேவேளை, நெடுங்காலந்தொட்டு இயக்கர்களின் ஆட்சிப் பிரதேசமாகவும் வாழ்விடமாகவும் விளங்கிவந்த பிரதேசத்தைக் கைப்பற்றி ஆட்சிபுரிந்த விஜயனின் அரசியல் அதிகாரம் இலங்கை முழுவதிலும் நிலவியிருக்கவில்லை. விளக்கமாகக் குறிப்பிடுமிடத்து இலங்கை முழுவதையும் விஜயன் ஆட்சி புரியவில்லை என்பதே வரலாற்று உண்மையாகும். விஜயன் அனுரதபுரத்தை சூழ்ந்துள்ள நாட்டையே ஆட்சி புரிந்து வந்தான். ஈழத்தின் ஏனைய இடங்களை பூர்வகுடிகளான நாகரும் இயக்கரும் ஆட்சி புரிந்து வந்தனர்.

இலங்கையின் வடபகுதியான நாகநாட்டை(நாகதீபம்) நாகவேந்தனும் மேற்குப் பகுதியான கல்யாணி நாட்டை இன்னொரு நாகஅரசனும் மலைய நாட்டையும் உரோகண நாட்டையும் நாகர், இயக்கர் குலங்களைச் சேர்ந்த

6. ஈழத்தமிழர் வரலாறு - தொகுதி I பக்.5, 6. கலாநிதி.சி.க.சிற்றம்பலம் - 1994



சிற்றரசர்களும் ஆட்சிபுரிந்து வந்தனர்.[7] இக்காலத்தில் இத்தீவில் வாழ்ந்து வந்த நாகர், இயக்கர் குடியினரும் விஜயனும் அவனது தோழர்களும் பாண்டிய நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டிருந்த மக்களும் இந்துமத நம்பிக்கைகளையே கொண்டிருந்தனர். விஜயன் இலங்கைக்கு வருவதற்கு அதிக காலத்திற்கு முன்னரேயே இங்கு நிலைத்திருந்த ஐந்து சிவாலயங்களான திருக்கேதீஸ்வரம், முன்னீஸ்வரம், மாந்தோட்டைக்கு அருகில் அமைந்திருந்த தண்டேஸ்வரம், ஆகியனவற்றுடன் விஜயனைத் தொடர்புபடுத்தும் வரலாற்றுச் செய்திகள், மரபுரைகள் என்பன இதனை உறுதி செய்வதாகவுள்ளன.

## நாகர் , இயக்கர்

கி.மு.5000 - 1500 ம் ஆண்டுவரை வடஇந்தியாவில் சிறப்புடன் விளங்கியிருந்த பழம்பெரும் நாகரீகத்தை தோற்றுவித்த நாகர் என்ற திராவிடரின் வழித்தோன்றல் களே வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இலங்கையில் வாழ்ந்து வந்த இயக்கரும் நாகரும் ஆவர். இவர்களையே தஸ்யுக்கள் என்று இருக்கு வேதம் குறிக்கின்றது. சிந்துவெளியில் இயக்கரும் நாகரும் வாழ்ந்தமை போன்றே இலங்கையிலும் நாகர், இயக்கர் குடியினர் வாழ்ந்து வந்தனர். ஆதித்திராவிடரான இவர்களே வரலாற்றுக்கு முந்தியும் வரலாற்றுக் காலத்திலும் இலங்கையில் வாழ்ந்து வந்தனர் என அறியமுடிகின்றது.

ஈழத்தின் பூர்வகுடியினரான இவர்களையே சிங்கள வரலாற்றாசிரியர்கள் அமானுஷ்யர்களாக சித்திரித்துள்ளனர். இராமாயண காலத்தில் பரந்து பட்டிருந்த இலங்கையை இலங்காபுரி என்ற நகரிலிருந்து இராவணன் என்ற மன்னன் ஆட்சி புரிந்து வந்தான். இவன் இயக்கர் குலத்தவனாவான். இவனது இலங்காபுரி நகர் ஈழத்தின் கிழக்குப்பகுதியில் அமைந்திருந்தது. இப்பட்டினத்தின் பெரும்பகுதி யான கிழக்குப் பகுதி பிற்காலத்தில் நிகழ்ந்த கடற்கோள்களினால் அமிழ்ந்ததென்பர். திருக்கோவில் ஆலயத்திற்கு முன்பாகவுள்ள கடற்பரப்பில் அமைந்துள்ள மலைக் குன்றுகள் இராவணன் கோட்டை என்று அழைக்கப்படுவதையும் நோக்கலாம்.[8]

இராவணனது ஆட்சியின் கீழ் பலகுறுநில மன்னர்கள் ஆட்சிபுரிந்து வந்தனர். இவர்கள் நாகர், இயக்கர் குலங்களைச் சேர்ந்த சிற்றரசர்களாவர். இன்று

7. தமிழ்நாட்டு வரலாறு , சங்ககாலம் - அரசியல் - பக்.602-603.
இலங்கையில் தமிழர் கட்டுரை - மயிலை சீனி வேங்கடசாமி - 19
8. மொனகிராபி ஓப் பற்றிகலோ - பக்.7. எஸ்.ஓ.கனகரெட்ணம் - 1921

மாந்தோட்டம் என்று குறிப்பிடப்படும் மாந்தை அக்காலத்தில் நாகர் குலத்தவரின் இராசதானியாக விளங்கியது. இராவணனது பட்டத்தரசியாகிய மண்டோதரி என்பவள் மாதோட்டையில் ஆட்சிபுரிந்து வந்த நாகர் குலத்து மங்கை ஆவாள். இக்காலத்தில் ஈழத்தில் வாழ்ந்து வந்த நாகரும் இயக்கரும் ஒரே மொழியினராகவும் ஒரே சமயத்தவராகவும் இருந்து வந்தனர்.[9] இவர்கள் ஆதித்திராவிடம் என்ற மொழியைப் பேச்சு மொழியாகக் கொண்டிருந்ததுடன் சைவ சமயத்தினராகவும் வாழ்ந்து வந்தனர்.

இயக்கர் குலத்தவனான இராவணனது காலத்தில் இவனது அரசியல் செல்வாக்கு ஈழத்தில் மட்டுமன்றி தென்னிந்தியாவின் விந்தியம் வரையும் பரந்திருந்தது. இவ்வேளையில் ஈழம் முதல் தண்டகாரண்யம் வரையும் திராவிட இனத்தவரே வாழ்ந்திருந்தனர். இவர்கள் அனைவரின் தலைவனாக அக்காலத்தில் பரந்துபட்ட ஈழத்தை இராவணன் ஆட்சி புரிந்து வந்தான்.[10] இவ்வேளையில் இராமன் என்ற வடஇந்திய அரசகுமாரனால் ஈழம் மீது படையெடுப்பொன்று மேற்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இயக்கர் குலத்து மன்னனான இராவணனுக்கும் இராமனுக்குமிடையில் பெரும் போர் மூண்டது.இராவணன் பக்கத்திலிருந்த இயக்கர் அனேகர் இப்போரில் கொல்லப்பட்டனர். இறுதியில் இயக்கர் குலத்து மன்னனான இராவணனும் கொல்லப்பட்டான். இதன் பின்னர் இராமன் இராவணனின் தம்பியாகிய விபீஷணனை இலங்கைக்கு அரசனாக்கி சென்றான்.[11] இதனை இராமாயண காவியம் விபரமாகக் குறிப்பிடுகின்றது. இராமாயண நிகழ்ச்சியானது சிந்துவெளி நாகரீகம் (கி.மு.5000 -1500) முடிவடைந்த பின்னர் நிகழ்ந்த சம்பவமாகும்.

சிந்துவெளி - ஹரபா நாகரீக மக்களான தாசர், நாகர் என்ற திராவிடரில் பெரும்பாலோர் ஆரியப்படையெடுப்பாளர்களினால் இந்த இடங்களிலிருந்து வெளியேறித் தென்னிந்தியாவிலும் ஈழத்திலும் வாழ்ந்து வந்த தமது இனத்தவர்களுடன் சேர்ந்து வாழ்ந்து வரலாயினர். இம்மக்கள் கி.மு.17ம் நூற்றாண்டளவில் சிந்து வெளியிலிருந்து வெளியேறிய வேளையில் தாம் பேணி வந்த சிவவழிபாட்டுக்

9. நாம் தமிழர் - பக்.21 . திரு.பொ.சங்கரப்பிள்ளை - 1991
10. பண்டைய ஈழத்தமிழர் - பக்.39. நா.நவநாயகமூர்த்தி - 1998
11. நம்முன்னோரளித்த அருஞ்செல்வம் - பக்.21. ஜி.சி.மெண்டிஸ் - 1969
வரலாற்றாசிரியரான ஜி.சி.மெண்டிஸ் அவர்கள் இயக்கர் குலத்து மன்னனான இராவணனை இராக்கதன் என்று குறிப்பிடுகின்றார்.



கூறுகளையும் எடுத்துவந்து தென்னிந்தியாவிலும் ஈழத்திலும் வாழ்ந்து வந்த தமது இனத்தவரிடையேயும் அறிமுகப்படுத்தியிருந்தனர். கி.மு.1300ம் ஆண்டளவில் தென்னிந்தியா, ஈழம் ஆகிய பிராந்தியங்களில் வாழ்ந்து வந்த நாகர், இயக்கரிடையே சிவவழிபாட்டின் முக்கிய சின்னமான இலிங்கவழிபாடு செழித்திருந்தது.

இராவணன் மனைவி மண்டோதரி, இராவணன் தாய், இராவணனின் வரலாறுகள் இராமாயணம் ஆகியன இதனை உறுதி செய்கின்றன. இராமாயண நிகழ்ச்சி கி.மு.1300ம் ஆண்டளவில் நிகழ்ந்தது என்பதை ஆய்வுகள் உணர்த்துகின்றன.[12] இராமாயண காலத்தில் (கி.மு.பதினாலாம் நூற்றாண்டு) இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் வாழ்ந்து வந்த ஓரின மக்களே இன்றைய தென்னிந்தியத் திராவிடர்களின் மூதாதையர் என்பதும் பண்டைய இலங்கையின் ஆதிக்குடிகளான இயக்கர், நாகர் எனப்படும் திராவிட இனத்தவரின் மூதாதையர் என்பதும் தெளிவு. இராமாயண நிகழ்ச்சி நடந்த காலம் கி.மு.1300ம் ஆண்டளவில் எனக் கொண்டால் இயக்கர் குலத்து மன்னனான இராவணன் இலங்கையில் ஆட்சி புரிந்த காலம் கி.மு.பதினாலாம் நூற்றாண்டாகும் என்பதில் தவறில்லை எனலாம்.[13] இராமாயண காலத்தில் வாழ்ந்து வந்த திராவிட இனத்தவரையே புராணங்கள், இதிகாசங்கள், காவியங்கள் ஆகியன அசுரர், இராக்கதர், வானரர், இயக்கர், நாகர், வித்தியாதரர் என்று குறிக்கின்றன.

கி.மு.ஏழாம், ஆறாம் நூற்றாண்டுகளில் இலங்கையில் நாகர் குடியினரே பெருமளவில் வாழ்ந்து வந்தனர். அத்துடன் இவர்களது செல்வாக்கே ஈழஅரசியலிலும் நிலைத்திருந்தது. கி.மு.ஆறாம் நூற்றாண்டளவில் யாழ்குடா (மணற்றிடர்) நாட்டில் கதிரமலையைத் (கந்தரோடை) தலைநகராகக் கொண்ட நாகப்பேரரசு உன்னத நிலையை எய்தியிருந்தது. இதேவேளை, குதிரைமலை, களனி, முல்லைத்தீவு, மாந்தை ஆகிய இடங்களிலும் நாகர்குலத்தவரின் அரசுகள் நிலைத்திருந்தன. தென்னிலங்கையில் இயக்கர் குலத்தவரின் சிற்றரசுகளும் கிழக்கிலங்கையின் சில இடங்களில் நாகர்குல முதல்வர்களால் ஆட்சி செய்யப்

12. தமிழர் பண்பாடு - பக்.16. வரலாற்றாய்வாளர் திரு.ந.சி.கந்தையாபிள்ளை
வரலாற்றாசிரியரான ஹோம் சந்திரராவ் சௌத்திரி என்பவரும் இதனை உறுதி செய்கின்றார். (ஆரிய திராவிடரும் அழிந்துபோன சங்கங்களும் - துரைஜெகநாதன்.
13. பண்டைய ஈழத்தமிழர் - பக்.40. நா.நவநாயகமூர்த்தி - 1998
இக்காலத்தில் தென்னந்தியாவையும் இலங்கையையும் ஒரு சிறிய நீர்ப்பரப்பே பிரித்திருந்தது.

பட்டு வந்த குறுநில அரசுகளும் இருந்தன.

இவ்வேளையில் தெற்கே திஸ்ஸமாறகமை, தெவிநுவர ஆகிய இடங்களிலும் கிழக்கே நாகர்முனை (திருக்கோவில் செயலகப்பிரிவு) மண்டூர், உகந்தை ஆகிய பிரதேசங்களிலும் நாக இராசதானிகள் அமைந்திருந்தன. இக்காலத்தில் (கி.மு.6ம் நூற்.) இத்தீவில் நாகர்களே பெருமளவில் வாழ்ந்து வந்தனர். ஆதலால் இத்தீவு நாகதீவு என்ற பெயரினைப் பெற்றிருந்தது. இக்காலத்தில் இங்கு வாழ்ந்து வந்த நாகர் குடியினரில் நெடுங்காலமாக இங்கு வாழ்ந்து வந்த நாகர் குடியினரின் சந்ததியினரும் பிற்காலத்தில் வடஇந்தியாவிலிருந்து இடம் பெயர்ந்து வந்து இத்தீவில் குடியேறிய நாகர் குலத்தவர்களான சிந்து வெளி மக்களின் சந்ததியினரும் அடங்குவர்.

கி.மு.ஆறாம் நூற்றாண்டில் 'சங்குமன்கண்டி' யிலிருந்து நாகர்முனையை (திருக்கோவில் பிரதேசம்) நாகர் குலத்து சிற்றரசன் ஆட்சி புரிந்து வந்தான். இவன் இதற்கு முந்திய காலத்தில் இப்பிரதேசத்தை ஆட்சி புரிந்து வந்த சங்குமன் என்ற நாகர்குல முதல்வனின் வழித்தோன்றல் என அறியமுடிகின்றது.[13A] இதேவேளை மஹியங்கனை, கதிர்காமம் ஆகிய இடங்களில் இயக்கர் குல சிற்றரசர்களின் ஆட்சி நிலவியிருந்தது. இயக்கரும் நாகரும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்த 'மண்டூர் போரதீவு' பிரதேசத்தை நாகர்குல சிற்றரசனொருவன் ஆட்சி புரிந்து வந்தான். மண்டுநாகன் என்ற இச்சிற்றரசனது ஆட்சியில் மண்டூர் போரதீவு பிரதேசம் செழித்திருந்தது. இக்காலத்திலேயே வடஇந்தியாவைச் சேர்ந்த காலசேனன் என்பவன் இலங்கை மீது படையெடுத்து வந்தான். இதனை 'மட்டக்களப்பு மான்மியம்' (பக்.48) குறிப்பிடுகின்றது.

கி.மு.ஐந்தாம் நூற்றாண்டில் இத்தீவில் வாழ்ந்து வந்த இயக்கர், நாகர் குடியினரிடையே அரசியல் நெறிமுறைகளும் வாழ்வியல் கூறுகளும் (நாகரீகம், பண்பாடு) உன்னத நிலையை எய்தியிருந்தன. இந்நிலையிலேயே விஜயன் இலங்கையில் காலடி எடுத்து வைத்தான். இவ்வேளையில் இத்தீவில் வாழ்ந்து வந்த நாகர் குடியினர் பண்டைத் திராவிடம் என்ற தமிழ்மொழியையும் இயக்கர் பண்டைத் திராவிடத்திலிருந்து பிறந்த எலு என்ற கொச்சைத் தமிழையும் பேச்சு

13.A. பண்டையக் காலத்தின் தொல்குல அரசுகள் - கட்டுரை . நா.நவநாயகமூர்த்தி வீரகேசரி வாரமலர் - பெப்ரவரி 25-2001.



மொழிகளாகக் கொண்டிருந்தனர். மேலும் நாகர், இயக்கர் அனைவரும் சைவ சமயத்தவர்களாகவே வாழ்ந்து வந்தனர்.[14]

## விஜயனுக்குப் பிற்பட்ட காலத்தில் நாகர், இயக்கர்

விஜயனுக்குப் பின்னர் அனுரதபுரியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்த மன்னர்கள் காலத்திலும் பூர்வகுடியினரான நாகர், இயக்கர் என்போரது அரசியல் செல்வாக்கு இலங்கையில் நிலைத்திருந்தது. குறிப்பாக அனுரதபுரி அரசுக்குட்பட்டிருந்த பகுதிகள் தவிர்ந்த இத்தீவின் ஏனைய இடங்களில் நாகர்களின் ஆட்சியே நிலவியிருந்தது. கி.மு.நாலாம் நூற்றாண்டு வரையும் இது நிலைத்திருந்த தெனலாம். இக்காலத்தில் (கி.மு.5ம் நூ - கி.மு.4ம் நூ) இத்தீவில் வாழ்ந்து வந்த மக்கள் அனைவரும் இந்துக்களாகவே வாழ்ந்திருந்தனர்.

கி.மு.நாலாம் நூற்றாண்டளவில் பாண்டு காபயன் (கி.மு.377-307) கடம்பநதி தீரத்தில் புதிய நகர் ஒன்றை நிர்மாணித்து ஆட்சிபுரிந்து வந்தான். பண்டைக் காலத்தில் கடம்பநதி தீரத்தில் நாகர்களின் பழையநகரம் இருந்த இடத்திலேயே இவன் அரசநகரான அனுரதபுரியை நிர்மாணித்தான் எனலாம். மன்னன் பாண்டுகாபயன் முதன் முதலில் அனுரதபுரியில் அரசை நிறுவிய காலத்தில் அங்கு நாகர்களின் பழைய நகரம் இருந்ததாக எச். பார்க்கர் குறிப்பிடுகின்றார்.[15] பாண்டுகாபயன் தனது ஆட்சிக்காலத்தில் பூர்வ குடியினரான நாகர், இயக்கர் களுடன் நல்லுறவுகள் கொண்டிருந்தான்.

இவன் தனது ஆட்சிக்காலத்தில் அனுரதபுரியில் ஐந்நூறு வேடர் குடும்பங் களுக்கு இருப்பிட வசதி செய்து கொடுத்தான் என்று மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இவ்வாறு மகாவம்சம் குறிப்பிடுவது இயக்கர்களேயாகும். அனுரதபுரியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்த பண்டுகாபயன் ஆட்சியைக் கைப் பற்றத் தனது தந்தையின் சகோதரர்களுடன் போரிட்டவேளையில் திராவிடரான இயக்கர்களே, துணைநின்று வெற்றியைப் பெற்றுக் கொடுத்தனர்.[16] ஆதலால் இவன் இயக்கர்களுடன் நெருங்கிய உறவினைக் கொண்டிருந்தான் எனலாம்.

14. இயக்கர்களுக்கென்று ஒரு பண்பட்ட மொழி இருந்தது. அது எலு அல்லது ஈழ (உதயதிசைமொழி) என அழைக்கப்பட்டு வந்தது. இம்மொழி திராவிடமொழி வந்தது. இப்பண்பட்ட மொழி பேசி நாகரீகமுற்றவர்களான இயக்கர், சைவசமயத்தவர்களாவர் (யார் இந்த வேடர் - பக். 84 . தமிழறிஞர் க.தா.செல்வராஜகோபால்)

15. H.Parker - Ancient Ceylon . P.16 - 1909

பாண்டுகாபயன் தனது ஆட்சிக் காலத்தில் இயக்கர்களின் சமய நம்பிக்கைகளுக்கும் ஆதரவளித்து வந்துள்ளான். இவன் சித்தராசன் என்னும் இயக்க தெய்வத்திற்கு கோயில் அமைத்தான். அனுரதபுரியின் தெற்கு வாசலில் இயக்கி என்னும் தெய்வத்திற்கும் கோயில் அமைத்துள்ளான். அத்துடன் வேறு தெய்வங்களுக்கும் இவன் பூசைளையும் விழாக்களையும் நடாத்தி வந்துள்ளான். (மயிலை சீனி வெங்கடசாமி - 1983) மகாவம்சம் தரும் வரலாற்றுத் தகவல்களின் படி பாண்டுகாய மன்னன் (கி.மு.377 - 307) ஒரு சிவலிங்கக் கோயிலைக் கட்டினான் எனத் தெரிகின்றது. (ஓ-102) மேலும் சிவிகாசாலா, சொத்திசாலா என்னும் இல்லங்களை அமைத்து கொடுத்தனன் என்றும் கூறும்.[17] இவற்றிலொன்று சிவலிங்கங்களைக் கொண்ட வழிபாட்டு தலங்கள் என உரையாசிரியர் கூறுவர்.

மேற்குறிப்பிட்ட வரலாற்று செய்திகளின் அடிப்படையில் நோக்குமிடத்து அக்காலத்தில் (கி.மு.377-307) அனுரதபுர நகரப் பகுதியில் ஒவ்வோர் இடங்களிலும் பூர்வகுடியினரான இயக்கர், நாகர் என்போர் பெருமளவில் வாழ்ந்திருந்தனர் என்பதையும் மேலும் அனுரதபுரி ஆட்சிப் பகுதியில் இவர்கள் பெற்றிருந்த செல்வாக்கினையும் உணரமுடிகின்றது. மேலும் பாண்டியநாட்டிலிருந்து விஜயனால் வரவழைக்கப்பட்டுக் குடியேற்றப்பட்டு வாழ்ந்து வந்த பாண்டிய குலத்தவரின் சந்ததியினருடனும் இவர்கள் ஒன்றிணைந்து ஒற்றுமையாக வாழ்ந்து வந்தனரென்பதும் வரலாற்றுண்மையாகும்.

இக்காலத்தில் வடக்கே கதிரைமலையிலும் (கந்தரோடை) தெற்கே திஸமாறகமையிலும் மேற்கே களனியிலும் கிழக்கே கொட்டியாரத்திலும் மாத்தளைக்கு வடக்கே லேனா தொறை ஆகிய இடங்களிலும் நாக அரசுகள் நிலைத்திருந்தன.[18] உகந்தை, சங்குமன்கண்டி (திருக்கோவில்), தெவிநுவர ஆகிய இடங்களில் நாகர் குல சிற்றரசர்களும் கதிர்காமம், மஹியங்கனை ஆகிய இடங்களில் இயக்கர் குலத்தவரின் சிற்றரசுகளும் நிலைத்திருந்தன.

இக்காலத்தில் இத்தீவின் ஒரு பகுதியான உரோகணத்தில் பாண்டியர் குடியேற்றங்கள் இடம் பெற்று வந்தன. குறிப்பாக இன்றைய அம்பாந்தோட்டை,

16. உலக வரலாறு - பக்.166. த.இராமநாதபிள்ளை - 1951.
17. சைவசித்தாந்தமும் விஞ்ஞான உலகமும்-பக்.112. தனபாக்கியம் குணபாலசிங்கம் எம்.ஏ. 1990
18. யாழ்ப்பாணச் சரித்திரம் - பக்.15. முதலியார் செ.இராசநாயகம் - 1933



மொனராகலை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களை உள்ளடக்கிய பெரும் பிரதேசத்தில் இவர் குடியேறி வாழ்ந்து வந்ததுடன் அரசுகளையும் நிறுவியிருந்தனர். இவர்கள் பாண்டுகாபயனின் ஆட்சிக்காலத்தின் நடுப்பகுதியில் உரோகணத்தில் தங்கள் அரசியல் செல்வாக்கை நிலைபெறச் செய்திருந்தனர் என அறிய முடிகின்றது. பாண்டுகாபயனுக்குப் பின்னர் அனுரதபுரியிலிருந்து ஆட்சி புரிந்து வந்த இந்து மன்னனான மூத்தசிவன் (கி.மு.307-247) நாகர் குலத்தவர்களுடன் நல்லுறவுகள் கொண்டிருந்தான்.

இவன் நாகர் குலத்து மன்னனான கதிரமலை (கந்தரோடை ) அரசனுடன் நட்புரிமையுடன் பழகி வந்ததுடன் கதிரமலை அரசனின் மகளையே தனது இல்லக் கிழத்தியாகக் கொண்டிருந்தான்.[19] இவ்வேளையில் உரோகணத்தை ஆட்சிபுரிந்து வந்த பாண்டியகுலத்தைச் சேர்ந்த தமிழ் அரசர்கள், கதிர்காமம், சாகாமம், சந்தனகாமம் (கல்லோயா) ஆகிய இடங்களை தங்கள் இராசதானிகளாகக் கொண்டு இப்பெரும் பிரதேசத்தை ஆட்சிபுரிந்து வந்தனர். உரோகணத்தில் கதிர்காமம், சந்தனகாமம் ஆகிய இடங்களிலிருந்து ஆட்சிபுரிந்து வந்த ஆட்சியாளர்கள் மகாவம்சத்தில் சத்திரியர்கள் என்று குறிக்கப்பட்டுள்ளனர்.[20]

இக்காலகட்டத்தில் இலங்கைத் தீவில் நிலைத்திருந்த அரசுகள் தங்களுக்குள் எவ்வித பகைமையும் பாராட்டாது நல்லுறவுகள் கொண்டிருந்ததுடன் ஒன்றை ஒன்று எதிர்த்து வெற்றிகொள்ள இயலாத வகையில் தம்மளவில் ஓரளவு பலமுள்ளவைகளாக விளங்கியிருந்தன என்பதும் வரலாற்றுண்மையாகும்.

## தேவநம்பியதீசன் காலத்தில்

புகழ்பெற்ற மன்னனான தேவநம்பியதீசனின் (கி.மு.247-207) ஆட்சிக் காலத்தில் இலங்கை செழிப்புடன் விளங்கியிருந்ததென ஈழவரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. அனுரதபுரியையும் அதனைச் சூழவுள்ள பகுதிகளையும் ஆட்சி புரிந்த தேவநம்பியதீசன் வடக்கே நாகநாட்டுடனும் மேற்கே கல்யாணி நாட்டு நாக அரசனுடனும் தெற்கே பாண்டிய குலத்துத் தமிழ் அரசர்களின் கூட்டாச்சி நிலைத்திருந்த உரோகண நாட்டு மன்னர்களுடனும் (கதிர்காம, சண்டனகாம

19. யாழ்ப்பாணச் சரித்திரம் - பக் 12, 13 முதலியார் செ.இராசநாயகம் - 1933
20. இந்துக்களான இவர்கள் கூட்டாட்சி செய்ததற்கான கல்வெட்டுச் சான்றுகள் உரோகணப் பிரதேசத்தில் காணப்படுகின்றன. (கலாநிதி.சி.க.சிற்றம்பலம் - 1996, டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை - 1980)

சத்தரியர்) நல்லுறவுகள் கொண்டிருந்தான். இவ்வேளையில் இத்தீவின் சில பகுதிகளில் நாகர், இயக்கர் குலங்களைச் சேர்ந்த சிற்றரசர்களின் ஆட்சியும் நிலவியிருந்தது.

தேவநம்பியதீசனின் ஆட்சிக் காலத்தில் இத்தீவு முழுவதிலும் இந்துமத நம்பிக்கைகள் செழித்திருந்தன. பிராமணர் செல்வாக்கும் மிகுந்திருந்தது. வரலாற்றாய்வுகள், தொல்லியல் சான்றுகள் இதனை உறுதிசெய்கின்றன. இக்காலத்தில் அரசர்களோடு பிராமணர் கொண்டிருந்த தொடர்புகளின் விளைவாக சில சமயங்களில் பிராமணர்களுக்கும் அரசியல் ஆதிக்கம் பெற்றவர்களுக்கும் இடையில் திருமணத்தொடர்புகளும் ஏற்பட்டிருந்தன. இக்காலத்தில் நாகர்குல அரசனொருவன் பிராமணப் பெண்ணொருத்தியை மணம் முடித்திருந்த செய்தியை பிராமிச்சாசனம் குறிப்பிடுகின்றது. கொஜற என்ற பிராமணனின் மகளான பொசனி என்பவள் நாகஅரசனின் மனைவியாக இருந்தாள் என்பதை இக்கல்வெட்டு கூறுகின்றது.[21].

நாகர் சமுதாயத்தார் தலைவனொருவனைப் பிராமணப் பெண்ணொருத்தி மணம் முடித்திருந்தாள் என்ற செய்தியானது நாகருக்கும் பிராமணருக்குமிடையில் அக்காலத்தில் சமூக, கலாசார உறவுகள் நிலவியிருந்தமையினை குறிப்பதாகலாம். தேவநம்பியதீசன் காலத்தில் பௌத்தம் அறிமுகமாகிப் பரவியிருந்த வேளையில் இத்தீவில் வாழ்ந்து வந்த மக்களில் பெரும்பாலானோர் புதிய சமயமான பௌத்த மதத்தைத் தழுவிக்கொண்டனர். ஆயினும், நெடுங்காலம் தொடக்கம் தாங்கள் கைக்கொண்டு வந்த இந்துமத நம்பிக்கைகளை இவர்கள் முழுமையாகக் கைவிடவில்லை. தொடர்ந்து இவர்கள் இந்துமதத் தெய்வங்களையும் வழிபட்டு வந்தனர்.

## பௌத்தமும் பூர்வகுடியினரும்

கி.மு.247ல் இலங்கையில் பௌத்தம் அறிமுகமானதைத் தொடர்ந்து பூர்வகுடியினரான நாகர், இயக்கர் என்போரிடையேயும் பௌத்தசமயம் செல்வாக்குப் பெற்றிருந்தது. இவர்களில் அனேகர் பௌத்த சமயத்தைத் தழுவியிருந்ததுடன் தாங்கள் வாழ்ந்திருந்த இடங்களில் பௌத்த வழிபாட்டுத் தலங்களையும் தோற்றுவித்திருந்தனர். அக்காலத்தில் நாகநாடு என்று புகழ்ந்துரைக்

21. இலங்கையில் இந்து கலாசாரம் I - பக்.38. பேராசிரியர். சி.பத்மநாதன் - 2000.



கப்பட்டு வந்த வடஇலங்கையில் வாழ்ந்து வந்த நாகர்களில் பெருமளவினர் பௌத்தத்தைத் தழுவியிருந்தனர். இவர்கள் தங்கள் வழிபாட்டிற்கென விகாரையொன்றை நிர்மாணித்துக்கொண்டதுடன் அவ்விகாரைக்கு ‘நாகதீவு விகாரை’ என்ற பெயரையும் இட்டனர். இதன் தொடர்ச்சியே ‘யாழ் நாகவிகாரை’ ஆகும்.

இதேபோன்று அக்காலத்தில் நாகர்களின் வாழ்விடமாகவும் ஆட்சிப்பிரதேசமாகவும் விளங்கியிருந்த மேற்கு இலங்கையிலும் பௌத்த நாகர்களின் வழிபாட்டிற்கென பல விகாரைகள் நிர்மாணிக்கப்பட்டன. இவை நாகவிகாரை என விளங்கி வந்தன. இவ்வேளையில் பாண்டிய குலத்துத் தமிழ் அரசர்களது ஆட்சி நிலைத்திருந்த உரோகணத்திலும் விகாரைங்கள் பல நிர்மாணிக்கப்பட்டன. இக்காலத்தில் உரோகணத்தில் தோற்றுவிக்கப்பட்ட பௌத்த ஆலயங்கள் யாவும் இப்பிரதேசத்தில் வாழ்ந்து வந்தவர்களான பாண்டியர், நாகர், இயக்கர் ஆகிய திராவிடக் குடியினரின் வழிபாட்டிற்கென நிர்மாணிக்கப்பட்டவைகளாகும்.

உரோகணத்தில் இயக்கர் பெருமளவில் வாழ்ந்து வந்த இடங்களிலொன்றான மஹியங்கனையில் பௌத்த ஆலயம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது. இங்கு வாழ்ந்து வந்த இயக்கர்களின் வழிபாட்டுக்காக தேவநம்பியதீசன் ஒரு தாகபையை நிறுவியிருந்தான் என அறியமுடிகின்றது.[22] இவ்வேளையில் நாகர்கள் பெருமளவில் வாழ்ந்திருந்த திசமாறகமையில் நாகர்களுக்காக ‘நாகமகாவிகாரை’ உருவானது. இவ்விகாரையே பிற்காலத்தில் ‘திஸ்ஸமகாவிகாரை’ எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது. திசை, திசையன் என்பது நாகர்களின் கௌரவப் பெயர்களாகும். (திரு. ம.க.அந்தனிசில் - 1993) இக்காலத்தில் (கி.மு.மூன்றாம் நூற்.) இலங்கைத் தீவில் பண்டைத் திராவிடமாகிய தமிழ் மொழியுடன் இதன் கிளை மொழியான ‘எலு’ மொழியும் முன்னிலை பெற்றிருந்தது. அத்துடன் இங்கு அறிமுகமான பிராகிருத மொழியின் செல்வாக்கும் இக்காலத்தில் மிகுந்திருந்தது.[23]

## பிற்காலத்தில் ஈழவரலாற்றில் பூர்வகுடியினர்

தேவநம்பியதீசனது (கி.மு.247-207) ஆட்சிக் காலத்தைத் தொடர்ந்து பிற்காலத்திலும் இலங்கை அரசியலில் நாகர், இயக்கர் குடியினரின் செல்வாக்கு

22. பண்டைய ஈழத்தமிழர் - பக்.46. நா.நவநாயகமூர்த்தி . 1998

23. பௌத்தம் பரவுவதற்கு முன்பே பிராமணர் மூலமாகப் பிராகிருத மொழியின் செல்வாக்கு இலங்கையில் ஏற்பட்டிருத்தல் கூடும் . (இலங்கையில் இந்து கலாசாரம். பக்.38. போராசிரியர் சி.பத்மநாதன். 2000)

நிலைத்திருந்தது எனலாம். குறிப்பாக, வடஇலங்கையில் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு அரை நாகர்களின் ஆட்சி செழித்திருந்ததை ஆய்வுகள் உணர்த்துகின்றன. இக் காலகட்டத்தில் (கி.மு.3ம் நூற் - கி.பி.3ம் நூற்) அனுராபுரிக்கும் வட இலங்கைக்கும் இடையில் நெருக்கமான உறவுகள் நிலவியிருந்தன. இவை பெரும்பாலும் சமூக, சமய, கலாசார உறவுகளாகவே மிளிர்ந்து வந்தன என்பது மறைக்கப்பட்ட வரலாற்றுண்மையாகும். 'நாகதீபம்' என்ற வடஇலங்கை நாகப்பேரரசு இன்றைய வன்னி, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு , யாழ்ப்பாண மாவட்டங்களை உள்ளடக்கியிருந்தது.

வட இலங்கையில் 'கந்தரோடை' யைத் தலைநகராகக் கொண்டிருந்த நாகர் என்ற பண்டைத்தமிழர்களது அரசு உன்னத நிலையிலிருந்த அக்காலத்தில் (கி.மு.3ம் நூ - கி.பி.3ம் நூ) கி.மு.இரண்டாம் நூற்றாண்டளவில் எல்லாளன் (கி.மு.145-101) என்ற தமிழ் மன்னன் அனுரதபுரியிலிருந்து ஆட்சி புரிந்து வந்தான். இவன் சோழநாட்டிலிருந்து படையெடுத்து வந்து அசேலன் என்பவனை வெற்றி கொண்டு அனுரதபுரியைக் கைப்பற்றி நாற்பத்திநாலு வருடங்கள் நல்லாட்சி புரிந்தான் என மகாவம்சம் (அத்.21 செய்யுள்:13-15) கூறுகின்றது. இவனது காலத்தில் முப்பத்திரண்டு தமிழ் சிற்றரசர்கள் உரோணசிற்றரசின் வடபால் ஆட்சி புரிந்தனர். இதனை மகாவம்சம் உறுதிசெய்கின்றது.

அனுரதபுரியில் ஆட்சி புரிந்த தமிழ் மன்னனான எல்லாளன் வட இலங்கையான நாகதீபத்தில் ஆட்சிபுரிந்த சிற்றரசர்களில் ஒருவனாவான். இவன் நாகதீபத்திலிருந்து படையெடுத்து வந்து அனுரதபுரியைக் கைப்பற்றி ஆட்சி புரிந்தவன் என்பதே ஆய்வுகள் மூலமாகப் பெறப்பட்டுள்ள வரலாற்றுண்மையாகும். இவனது காலத்தில் துட்டகாமினியின் உரோகண அரசின் வடபால் ஆட்சிபுரிந்த முப்பத்திரண்டு தமிழ் சிற்றரசர்கள் பற்றி மகாவம்சம் (XXV : 75 கைகர் பதிப்பு - 1986) குறிப்பிடுகின்றது. இவர்களுள் பலர் இந்துக்களாகவும் இருக்கலாம்[24] என எண்ணத் தோன்றுகின்றது.

இந்த முப்பத்திரண்டு அரசர்களுள் இயக்கர் குலத்து அரசர்களும் நாகர் குலத்து அரசர்களும் அடங்குவர். ஆயினும் இவர்கள் அனைவரையும் தமிழ் அரசர்கள் என்றே மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இவ்வேளையில் மஹியங்னையில்

24. சிந்தனை. தொகுதி I இதழ் I - 1984. கட்டுரை - கலாநிதி.சி.க.சிற்றம்பலம்



சாத்தன் என்ற தமிழ் அரசனும் அம்பாதித்த (அம்பாதோட்டம்) பிரதேசத்தை தித்திம்பன் என்ற வலிமைமிக்க தமிழ் அரசனும் ஆட்சி செலுத்தி வந்ததாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது.[25] இவர்கள் இருவரும் இயக்கர் குலத்துச்சிற்றரசர்கள் ஆவர். நாகர், இயக்கர் என்போர் திராவிடர் ஆவர். பண்டைய வரலாற்றில் திராவிடர் என்பது தமிழரையே குறிப்பதாகும். ஆதலால் இம்மன்னர்களைத் தமிழர்கள் என மகாவம்சம் குறிப்பிடுவது ஏற்புடையதாகும்.

எல்லாளனுக்குப் பின்னர் அனுரதபுரியிலிருந்து ஆட்சிபுரிந்தவனும் ஈழத்துப் பெருமன்னர்களுள் ஒருவனுமான துட்டகாமினி, கல்யாணபுரத்து (கல்யாணி) நாகவம்சவழித் தோன்றல் ஆவான். அவனின் தாயான 'விகாரமகாதேவி' என்பவள் முன்னைய கல்யாணபுர நாகவேந்தனின் வம்ச வழியைச் சேர்ந்த களனிதீசனின் மகள் ஆவார்.[26] கி.பி.முதலாம் நூற்றாண்டளவில் வட இலங்கையான நாகதீபத்தை கொட்டாயன் என்ற நாகர்குல அரசன் ஆட்சி புரிந்துள்ளான். இவனது அரசியல் செல்வாக்கு கிழக்கு இலங்கையின் திருகோணமலையிலும் நிலைத்திருந்தது.

இவ்வேளையில் திருகோணமலை பிரதேசத்தில் 'கொட்டியன்' என்ற நாகர் குல சிற்றரசன் ஆதிகாரம் செலுத்திவந்தான்.[27] இவன் கதிரமலையிலிருந்து ஆட்சி புரிந்து வந்த 'நாகதீப' மன்னனின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்தான். கி.பி. முதலாம் நூற்றாண்டளவில் வட இலங்கை நாகதீப அரசு உன்னதநிலையில் இருந்ததெனலாம். இதனை தொலமி என்பவரது வரைபடமும் உறுதி செய்கின்றது.[28] கி.பி இரண்டாம் நூற்றாண்டு வரையும் திருகோணமலை பிரதேசத்தில் வடஇலங்கை நாகர்குல மன்னர்களது செல்வாக்கே நிலைத்திருந்தது.

கி.பி.இரண்டாம் நூற்றாண்டளவில் வசபன் (கி.பி.127-171) என்ற மன்னன் அனுரதபுரியிலிருந்து ஆட்சி புரிந்தவேளையில் நாகதீபத்தை இசிகிரியன் என்பவன் ஆட்சி புரிந்துள்ளான். இதனை வல்லிபுரத்தில் கிடைக்கப்பெற்ற பொற்சாசனம்

25. மகாவம்சம் - அத்.25. செய் 7-9. தமிழாக்கம் எஸ்.சங்கரன் - 1962
26. யப்னா அன் த சிங்கள் ஹெறிட்டேஜ் - பக்.3. கொழும்பு - 1984. (ம.க.அந்தனி சில்
27. மட்டக்களப்பு மான்மியம் - பக்.24. பதிப்பாசிரியர் எப்.எக்ஸி.நடராசா - 1962
"இவனது இராசதானி அமைந்திருந்த இடம் பிற்காலத்தில் கொட்டியனூர் எனப் பெயர் பெற்று இன்று கொட்டியாரம் என வழங்குகின்றது."
28. கி.பி.முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த தொலமி என்பவரது வரைபடம் நாகதீவை (நாகதீபம்) இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதியாகக் காண்பிக்கப்படுவதாக திரு. ஜே.ஆர்.சின்னதம்பி அவர்கள் குறிப்பிடுகின்றார். ( சிலோன் இன் ரொலமீஸ் ஜோஹ்றபி. பக்.52. கொழும்பு 1968)

கொழும்பு தமிழ்ச் சங்

குறிப்பிடுகின்றது.[29] இவன் நாகர்குல மன்னனாவான். பிராமி எழுத்தினாலான வல்லிபுர தங்கத்தகட்டுச் சாசனத்தில் 'நாகதீவு' என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. அச்சாசத்தில் தமிழ் பிராமி எழுத்துக்களையும் அசோகப் பிராமி எழுத்துக்களையும் காணமுடிகின்றது.[30] அக்காலத்தில் நாகதீபம் அனுரதபுரத்துக்கு வடபால் அமைந்துள்ள ஈழத்தின பகுதியையும் புத்தளம் மாவட்டம் வரை தெற்கே இது பரந்திருந்ததெனவும் அறிஞர் கருதுவர். நாகதீப பிராந்தியத்தில் வரும் பொம்பரிப்பு (புத்தளம் மாவட்டம்) மாந்தை (மன்னார் மாவட்டம்) ஆனைக்கோட்டை (யாழ் மாவட்டம்) ஆகியன அடங்கும்.[31]

இதேகாலத்தில் (கி.பி.இரண்டாம் நூற்றாண்டு) கிழக்கிலங்கையில் தேவநாகன் என்ற நாகர்குல சிற்றரசன் ஆதிக்கம் புரிந்துள்ளான். இதனை மட்டக்களப்பு ஏறாவூருக்கு அண்மையில் காசிமோட்டையில் கண்டு பிடிக்கப்பட்ட பிராமி எழுத்திலான கல்வெட்டொன்று குறிப்பிடுகின்றது. (இல.48 இன்ஸ்கிறிப்சன்ஸ் ஓப் சிலோன். தொகுதி I பகுதி I )[32] இவ்வாறு வரலாற்றுக்காலத்திலும் வரலாற்றுக்கு முந்திய ஆதி காலத்திலும் இத்தீவில் நாகரீகச் சிறப்புடன் வாழ்ந்து வந்ததுடன் அரசியலிலும் முக்கியத்துவம் பெற்றிருந்தவர்களான நாகர், இயக்கர் குடியினரை சிங்கள வரலாற்றாசிரியர்கள் மனிதர்களாக ஏற்கத் தயாராக இல்லை எனலாம்.

மகாவம்சம் குறிப்பிடுகின்ற நாகர், இயக்கர் என்போர் மனிதவர்க்கத்தினரைக் குறிக்கவில்லை என்று ஜி.சி.மெண்டிசும் (The Early History of Ceylon. P.8-1948 ) மகாவம்சத்திலும் மணிமேகலையிலும் நாகர் ஒருபோதும் மனித வம்சத்தினராகக் காட்டப்படவில்லை என 'பரணவிதான' அவர்களும் கூறியுள்ளார். விஜயனின் வருகையுடனேயே இலங்கையில் மக்கள் குடியேற்றங்கள் ஆரம்பமாகின என்பதை வலியுறுத்துவதற்காகவே இத்தீவின் மூதாதையினரை அமானுஸ்யர்கள் என இவர்கள் வலியுறுத்துகின்றனர் என எண்ணத் தோன்றுகின்றது.[33]

29. ஈழத்தவர் வரலாறு - பக் 11 . கலாநிதி க.குணராசா. 1996
30. எண் திசை விரவிய ஏழிசை-கட்டுரைத்தொடர் 13-6-1993. தினகரன் - ம.க.அ. அந்தனிசில்.
31. சிந்தனை - கட்டுரை தொகுதிI இதழ்II - 1983. கலாநிதி சி.க.சிற்றம்பலம்
32. எண்திசை விரவிய ஏழிசை - கட்டுரை தினகரன் வாரமலர் - ம.க.அ.அந்தனிசில் 11-7-1993
33. ஈழத்தவர் வரலாறு - பக்.11 கலாநிதி க.குணராசா - 1996



# மனு மன்னன்

பண்டைய ஈழவரலாற்றினை நோக்குமிடத்து காலத்துக்குக் காலம் இத்தீவை தமிழ் மன்னர்கள் ஆட்சிபுரிந்து வந்துள்ளதையும் நெடுங்காலந்தொட்டு இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் மட்டுமன்றி இத்தீவின் ஏனைய பகுதிகளிலும் தமிழர்கள் பரவலாக வாழ்ந்து வந்துள்ளனர் என்பதையும் அறிய முடிகின்றது. கி.மு.இரண்டாம் நூற்றாண்டளவில் சேனன், கூத்திகன் (கி.மு.177 - 155) ஆகிய தமிழ் மன்னர்கள் இலங்கையைக் கைப்பற்றி அனுரதபுரியிலிருந்து இலங்கை முழுவதையும் ஆட்சிபுரிந்துள்ளனர். இவர்களைத் தொடர்ந்து கி.மு.145ம் ஆண்டளவில் இலங்கையைக் கைப்பற்றி நாற்பத்திநாலு வருடங்கள் ஆட்சி புரிந்தவன் எல்லாளன் என்ற தமிழ் மன்னனாவான்.

இத்தமிழ் மன்னனைப் பாளி இலக்கியங்கள் 'எலாரா' என்று குறிப்பிடுகின்றன. இவனது இயற்பெயர் 'ஈழராஜா' என்று கலாநிதி ஆ.வேலுப்பிள்ளை குறிப்பிடுகின்றார்.[1] எல்லாளனை ஏலேலசிங்கன் என்றும் கூறுவர். ஏலேலசிங்கன் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரைத் தனது குருவாகக் கொண்டிருந்தான் என்ற செவிவழிச்செய்தியுண்டு.[2] எல்லாளன் (கி.மு.145-101) அனுரதபுரியிலிருந்து ஆட்சி புரிந்து வந்த சிங்கள மன்னனான அசேலன் என்பவனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றினான்.[3] இவன் அனுரதபுரியிலிருந்து இலங்கை முழுவதையும் நாற்பத்திநான்கு ஆண்டுகள் நல்லாட்சி புரிந்துள்ளான்.

எல்லாளன் தனது ஆட்சிக்காலத்தில் உறுகுணையில் ஆட்சி புரிந்து வந்த மன்னரிடமும் மாயரட்டை மன்னரிடமும் திறைபெற்று வந்தான்.[4] இவன் நீதியாகவும்

1. ஈழத்தவர் வரலாறு - பக்.36 கலாநிதி.க.குணராசா - 1996
2. தமிழ்நாட்டு வரலாறு. சங்ககாலம்: அரசியல் - பக்.617 இலங்கையில் தமிழர்கள் - கட்டுரை - மயிலை சீனி வெங்கட்சாமி
3. மகாவம்சம் - பக்143, கைகர் பதிப்பு - 1986
4. உலகவரலாறு - பக்.169,170 க.இராமநாதபிள்ளை பதிப்பு - 1951

நேர்மையாகவும் குடிமக்களின் நன்மை கருதி அரசாண்டான் என்பதற்கு மகாவம்சம் பல கதைகளைக் கூறுகின்றது. எல்லாளன் தன் அமளியின் அருகில் ஒரு மணியைக் கட்டி வைத்திருந்தான் என்றும் அவனிடம் நியாயம் வேண்டும் யாவரும் அம்மணியை அடித்து எப்பொருளையும் அவன் ஆய்விற்குக் கொண்டு வரலா மென்றும் மகாவம்சம் கூறும்.[5] தமிழ்ச் சைவனான இவன் சைவ சமயத்தைச் சார்ந்தவனாகவிருந்தும் பௌத்தத்தையும் ஆதரித்து வந்தான். பௌத்த மக்களைத் துன்புறுத்தாத வகையில் நல்லாட்சி புரிந்து வந்த எல்லாளனை மனுநீதி தவறாத மன்னன் என்று மகாவம்சம் புகழ்ந்துரைக்கின்றது.

இம்மன்னன் பௌத்த சிங்கள் மக்களைத் துன்புறுத்தாது நீதியாகவும் நேர்மையாகவும் ஆட்சிபுரிந்து வந்ததன் காரணமாக இவனைச் சிங்கள பௌத்தர்கள் புகழ்ந்து எழுதியுள்ளனர். இத்தமிழ் மன்னன் சோழநாட்டிலிருந்து வந்து இலங்கையில் ஆட்சி புரிந்தபோதும் நீதிகளைக் கடைப்பிடித்து செங்கோல் செலுத்தினான் என்பது வரலாற்றாசிரியர்களின் கருத்தாகும். இதேவேளை எல்லாளன் சோழநாட்டிலிருந்து படையெடுத்து வந்தவனல்ல என்பதும் அத்தகைய ஒரு சோழன் இருந்ததாக தமிழ் நாட்டு வரலாற்றில் ஆதாரங்கள் இல்லையென்றும் இந்த மன்னன் உத்தரதேசம் என்ற வடஇலங்கையில் சிற்றரசனாகவிருந்து அனுரத புரியின் மீது படையெடுத்ததாகக் கொள்வதே ஏற்புடையதாகும் என்று ஆய்வாளர் திரு.ப.புஸ்பரெட்ணடம் குறிப்பிடுகின்றார்.[6]

மகாவம்சத்தில் தமிழர் வெற்றிகளெல்லாம் இந்தியாவிலிருந்து வந்த படை வீரர் வெற்றிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. பிற்காலத்தில் சோழ, பாண்டிய, பல்லவப் பேரரசர் இலங்கையிற் படையயெடுத்து வெற்றி கொண்டது வரலாற்று உண்மையே. ஆனால் அனுரதபுர அரசின் ஆரம்ப காலத்தில் அனுரதபுரியை வென்று ஆட்சி புரிந்த தமிழர் வடஇலங்கையில் ஆட்சி புரிந்த தமிழ் அரசர்களாவர். சுப்பன் என்னும் காவற்காரன் சேனன் என்னும் குதிரை வாணிகன். ஏலோலசிங்கன் என்ற எல்லாளன். அனுரதபுரியில் ஆட்சிபுரிந்த மறவர் தலைவர் ஐவர். அனைவரும் வட இலங்கைத் தமிழர்களாவர்.

5. இலங்கையின் சுருக்கவரலாறு - பக்.15 எச்.டபிள்யு.கொடிறின்றன். தமிழாக்கம். இ.இரத்தினம் - பதிப்பு 1960

6. ஈழத்தவர் வரலாறு - பக்.35,36 கலாநிதி.க.குணராசா - 1996



இவ்வுண்மையை எச்.டபிள்யு.கொடிறிங்கன் என்னும் வரலாற்றாசிரியர் வற்புறுத்துகின்றார். போதிய பலமுடைய நிலையான தமிழ்க்குடிகள் அருகில் இருந்திராவிட்டால், ஏலேலசிங்கன் அந்நிய மக்களான அனுராதபுரத்துச் சிங்களவரை நாற்பத்திநாலு ஆண்டுகள் ஆட்சி புரிந்திருக்கமுடியாது. தென்னிந் தியாவிலிருந்து இடையறாத குடிவரவினால் அக்காலத்தில் வடஇலங்கை தமிழ் நாடாகவிருந்தது[7] எனலாம். எவ்வாறாயினும் இலங்கையில் நாற்பத்திநான்கு வருடங்கள் ஆட்சி புரிந்த ஏலேலசிங்கன் என்ற எல்லாளன் தமிழ் மன்னன் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்கின்றனர். இவனது காலத்தில் தற்போதைய அம்பாந்தோட்டை, அம்பாறை, மொனராகலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் தமிழர்கள் பெருமளவில் வாழ்ந்து வந்ததுடன் இவர்களிடையே பௌத்தம் நிலை பெற்றிருந்ததும் வரலாற்றுண்மையாகும்.

தமிழ் மன்னனான எல்லாளன் அனுரதபுரியைத் தலைநகராகக் கொண்டு ஈழத்தை ஆட்சி புரிந்த காலத்தில் உறுகுணையில் மாகமை என்னுமிடத்திலிருந்து கவந்தீசன் என்ற சிற்றரசன் ஆட்சி புரிந்து வந்தான். இவன் ஈழராஜா என்ற எல்லாளனுடன் நல்லுறவுகள் கொண்டிருந்தான். எல்லாளனின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்த இவன் எல்லாளனுக்குத் திறை செலுத்தியும் வந்தான்[8] இதன் காரணமாக கவந்தீசனின் அரசியில் விடயங்களில் எல்லாளன் தலையீடு செய்யாதிருந்தான். கவந்தீசனின் ரோகணச் சிற்றரசின் வடபால் முப்பத்திரண்டு தமிழ்ச் சிற்றரசர்கள் ஆட்சிபுரிந்து வந்தனர். இதனை மகாவம்சம் உறுதி செய்கின்றது. ஈழத்தில் வாழ்ந்து வந்த தமிழரிடையே பௌத்தம் நிலவியிருந்த அக்காலத்தில் முப்பத்திரண்டு தமிழ்ச்சிற்றரசர்களில் பலர் பௌத்தர்களாக இருந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது.

## ஈழராஜாவின் ஆட்சியில் பண்டைய மட்டக்களப்பு

எல்லாளனது ஆட்சிக்காலத்தில் தென்கிழக்கிலங்கையில் தமிழரது அரசியில் செல்வாக்குச் செழித்திருந்தது. சேனன், கூத்திகன் என்ற தமிழ் மன்னர்களது ஆட்சிக்காலத்தில் (கி.மு.177-155) தமிழ் மன்னனான கூத்திகனால் நிர்மாணிக்கப்பட்ட மட்டக்களப்பு (வீரமுனைக்கு அருகாமையில் அமைந்திருந்தது) நகரிலிருந்து இப்பிரதேசத்தை தமிழ் அரசனொருவன் ஆட்சி புரிந்து வந்தான். இவன் கூத்திகனின்

7. நாம் தமிழர் - பக்.135 பொ.சங்கரப்பிள்ளை - பதிப்பு 1996

8. Dutugemunu - Senaveratna.M.Jhon. Page.2 Shnha Publication, Colombo-1946

சந்ததியில் வந்தவன் என மட்டக்களப்பு மான்மியம் உணர்த்துகின்றது. (பக்.21 பதிப்பாசிரியர் எப்.எக்ஸி.நடராசா-1962) மேலும் இவ்வேளையில் தென்கிழக்கிலங்கையின் சில இடங்களில் நாகர் குடியினரின் குறுநில அரசுகளும் நிலைத்திருந்தன என்பதையும் அறிய முடிகின்றது.

நாகர் குல முதல்வர்களின் ஆட்சியின் கீழிருந்த இக்குறுநில அரசுகளும் தமிழ் அரசுகளேயாகும். இன்றைய அம்பாறை மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளை உள்ளடக்கியிருந்த பழைய மட்டக்களப்பு மாவட்டமான தென்கிழக்கிலங்கையில் கி.பி.1766ம் ஆண்டுவரையும் தமிழ்ச் சிற்றரசர்களது ஆட்சி உன்னத நிலையிலிருந்தது. இது வரலாற்றுண்மையாகும். கி.பி.பதினாறாம் நூற்றாண்டில் வன்னியர் என்ற தமிழ் சிற்றரசர்களது ஆட்சி இப்பிரதேசத்தில் சிறந்திருந்தது என்று தகுயிரோசு என்பவரது அறிக்கை குறிப்பிடுகின்றது.[9] பாணமை, மட்டக்களப்பு என்ற சிற்றரசுப் பிரிவுகள் அக்காலத்தில் இருந்தன என்று இவர் குறிப்பிடுகின்றார்.

## எல்லாளன் நிர்மாணித்த திருக்கோயில்

வட இலங்கையில் நல்லூர் கந்தசுவாமி கோயில், மன்னாரில் திருக்கேதீஸ்வரம், திருகோணமலையில் கோணேஸ்வரம் என்பன வரலாற்றுச் சிறப்பினைக் கொண்ட சைவ ஆலயங்களாகும். பண்டைய ஈழ வரலாற்றில் இவ்வாலயங்கள் பெற்றிருந்த முக்கியத்துவம் பற்றி வரலாற்று நூல்கள் , கல்வெட்டுக்கள் என்பனவற்றின் மூலமாக அறியமுடிகின்றது. இதேபோன்று மட்டக்களப்பு தமிழக வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றுள்ள சைவ ஆலயங்களுள் முதன்மையாகக் கருதப்படுவது திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயமாகும். மட்டக்களப்பு மான்மியம் , மட்டக்களப்புத் தமிழகம், மட்டக்களப்பு சைவக் கோயில்கள், குளக்கோட்டன் தரிசனம், மாகோன் வரலாறு, தம்பிலுவில் கண்ணகி வழிபாடு போன்ற நூல்கள் இதனை உறுதி செய்கின்றன.

மட்டக்களப்பு தேசத்தில் ( வடக்கே வெருகல் தொடக்கம் தெற்கே கூமுனை வரையுள்ள பிரதேசம்) முதலாவது திருப்படைக்கோயில் என்ற பெருமையினைப் பெற்றுப் பண்டைய அரசரின் மதிப்பும் மானியமும் சீர்வரிசைகளும் பெற்று வந்த இவ்வாலயம் பண்டைய இலங்கைச் சிங்கள மன்னர்களாலும் சோழ, பாண்டியராலும் கண்டிநாயக்க மன்னராலும் திருப்பணிகள் பெற்று வந்துள்ளது.

9. இலங்கையின் சுருக்கவரலாறு - பக்.125 எச்.டபிள்யு.கொடிறின்றன் - 1960



இதனைக் கல்வெட்டுக்கள், செப்பேடுகள், தொல்லியல் சான்றுகள் உணர்த்துகின்றன. இத்துணை சிறப்புக்களைக் கொண்ட திருக்கோவில் சித்திர வேலாயுதர் ஆலயத்தை முதன் முதலில் கற்கோயிலாக நிர்மாணித்தவன் இலங்கை முழுவதையும் ஆட்சிபுரிந்த மனுமன்னன் ஆவான் என மரபுரை ஒன்று குறிப்பிடுகின்றது.

இம்மரபுரை குறிப்பிடும் 'மனுமன்னன்' என்ற பண்டைய ஈழமன்னன் யாராகவிருக்கலாம் என ஆராயுமிடத்து நாற்பத்தி நான்கு வருடங்கள் இலங்கை முழுவதையும் நல்லாட்சி புரிந்த எல்லாளனே யாவான் என அறியமுடிகின்றது. தமிழ்ச் சைவனான எல்லாளனையே மனுநீதி தவறாத மன்னன் என்று பௌத்த இலக்கியங்கள் புகழ்ந்துரைக்கின்றன.[10]. ஒரு பசுக்கன்றைத் தேர்ச்சில்லினால் நெரித்துக் கொன்றதற்காகத் தன் மகனையே தேர்ச்சில்லினால் இம்மன்னன் நெரித்துக் கொன்றதாக மகாவம்சம் உரைக்கின்றது. இதேபோன்றதொரு கதை சோழநாட்டில் ஆட்சிபுரிந்த மனுநீதிச் சோழனுக்கும் உண்டு. அதன் காரணமாகவே அவனுக்கு மனுநீதிச்சோழன் என்ற பெயரும் உருவானது என நம்பப்படுகின்றது.

வரலாற்றாய்வுகள் மூலம் நோக்குமிடத்து மரபுரை கூறும் மனுமன்னன் இலங்கையை ஆட்சிபுரிந்த தமிழ் மன்னனான எல்லாளனேயாவான் என அறிய முடிகின்றது. இலங்கை முழுவதையும் ஒரு குடையின் கீழ் நாற்பத்திநான்கு வருடங்கள் ஆட்சி புரிந்த தமிழ் மன்னனான எல்லாளனை, 'மனுமன்னன்' என்றே வரலாற்றாசிரியரான திரு.நீலகண்டசாஸ்திரி அவர்களும் குறிப்பிடுகின்றார்.[11] ஆதலால் திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயத்தை முதன்முதலில் கற்கோயிலாக நிர்மாணித்தவன் தமிழ்ச்சைவனான எல்லாளன் என்பது தெளிவாகின்றது. ஆதிகாலத்தில் மண்ணாலும் மரத்தாலும் கொண்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த திருக்கோவில் முருகன் ஆலயத்தை மனுமன்னன் என்ற எல்லாளன் தனது ஆட்சிக்காலத்தில் சிறியதொரு கற்கோயிலாக நிர்மாணித்தான் என்பதே இம்மரபுரையின் வாயிலாக நாம் பெறும் வரலாற்றுண்மையாகும்.

இவ்வாறு தனது ஆட்சிக்காலத்தில் தென்கிழக்கிலங்கையின் சைவப்பணியிலும் கவனம் செலுத்தி வந்த தமிழ் மன்னனான எல்லாளனின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தவன் துட்டகாமினி என்ற சிங்களமன்னனாவான்.

10. மகாவம்சம் - பக்143,144. கைகர் பதிப்பு - 1986

11. சோழர் - பக்.34,35 திரு.நீலகண்டசாஸ்திரி.

இவன் மாகமைச் சிற்றரசனான கவந்தீசனின் புதல்வனாவான். எல்லாளனது ஆட்சிக் காலத்தில் கவந்தீசனின் மாகமை சிற்றரசு ஓரளவு வலிமையுடையதாக விருந்தது. ஆயினும் தமிழ் மனனனின் மேலாதிக்கத்தை கவந்தீசன் ஏற்றிருந்தான். இதன் பின்னர் இவனது மகனான துட்டகாமினிக்குப் பதினாறு வயதாக இருந்த பொழுது அவன் எல்லாளனை எதிர்க்கத் தலைப்பட்டான். ஆனால் அவனது தந்தையாகிய கவந்தீசன் இதனை விரும்பவில்லை.

கவந்தீசனின் மரணத்தைத் தொடர்ந்து துட்டகாமினி மன்னனானான். இவன் தமிழ் மன்னனான எல்லாளனது ஆட்சியை முடிவுக்குக் கெண்டுவர எண்ணி அனுரதபுரி மீது படையெடுத்தான். ஈழத்தின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் மட்டுமன்றி நாட்டின் ஏனைய பகுதிகளிலும் தமிழர்கள் பரவலாக வாழ்ந்து வந்த அக்காலத்தில் கவந்தீசனின் மகனான துட்டகாமினி, எல்லாளனுக்கெதிரான படையெடுப்பை மாகமையிலிருந்து ஆரம்பித்தான். வழியில் புத்தளை என்னுமிடத்தில் தங்கிவிட்டு அங்கிருந்து மகியங்கனையை வந்தடைந்தான்.அங்கே தமிழருக்கும் சிங்கள வருக்குமிடையே முதல் யுத்தம் நடந்தது.[12] இச்சண்டையில் மகியங்கனையில் ஆட்சி புரிந்து வந்த குறுநில மன்னனான சாத்தன் என்ற தமிழ் சிற்றரசன் கொல்லப்பட்டான். இதனை மகாவம்சம் குறிப்பிடுகின்றது.

இதன் பின்னர் துட்டகாமினி 'அம்பதீர்த்தம்' என்னுமிடத்தை ஆட்சி புரிந்து வந்த வலிமை பொருந்தியவனான தித்திம்பன் என்ற தமிழ் சிற்றரசனுடன் நாலு மாதங்கள் சண்டை புரிந்து அவனைவெற்றி கொண்டான். இதனை மகாவம்சம் குறிப்பிடுகின்றது.[13] சாத்தன், தித்திம்பன் ஆகிய இரு மன்னர்களும் இயக்கர் குலத்தவராவார். திராவிடரான இவர்களை மகாவம்சம் தமிழர்கள் என்றே குறிப்பிடுகின்றது.[14] துட்டகாமினியால் அம்புதீர்த்தம் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து சர்ப்பக்கோட்டை என்ற இடம் கைப்பற்றப்பட்டது. இவ்வாறு முப்பத்திரண்டு தமிழ் மன்னர்களை வெற்றி கொண்டே துட்டகாமினி அனுரதபுரியைக் கைப்பற்றினான். இவர்களில் முப்பத்திரெண்டாவது மன்னனே எல்லாளனாவான். முப்பத்தியொரு தமிழ் சிற்றரசர்களையும் மகாவம்சம் மன்னர்கள் என்றே குறிப்பிடுகின்றது.

12. நம்முன்னோரளித்த அருஞ்செல்வம் (முதலாம் பாகம்) - பக்.40-42 ஜீ.சி.மென்டிஸ் பதிப்பு 1969
13. மகாவம்சம் - பக்.170, 171 கைகர் பதிப்பு - 1986
14. பண்டைய வரலாற்றில் திராவிடர் என்பது தமிழரையே குறிப்பதாகும்.



# தீகவாபி வளர்ச்சியில் தமிழ் மன்னர்களின் பணி

தென்கிழக்கிலங்கையிலுள்ள (அம்பாறையை உள்ளடக்கிய பண்டைய மட்டக்களப்பு) பௌத்த வழிபாட்டுத்தலங்களுள், தீகவாபியும் ஒன்றாகும். இலங்கை வரலாற்றில் இடம் பெற்றுள்ள 'தீகவாபியானது' பண்டைக் காலத்தில் நகரப்பகுதியாகவும் விளங்கி வந்துள்ளது. கி.பி.பதின்மூன்றாம் நூற்றாண்டு வரையும் தீகவாபி சிறப்புடன் விளங்கிவந்துள்ளதை வரலாறுகள் தெளிவுறுத்துகின்றன. கி.மு.இரண்டாம் நூற்றாண்டு வரையும் தீகவாபியிலும் இதைச் சூழவுள்ள இடங்களிலும் தமிழர்களே தனிப்பெரும்பான்மையினராக வாழ்ந்து வந்தனர். இதற்குப் பிற்பட்ட காலத்திலும் தமிழர்களே தீகவாபியில் பெருமளவில் வாழ்ந்து வந்தனர். இதனை ஆய்வுகள் மூலமாக அறியமுடிகின்றது.

தீகவாவியைச் சூழவுள்ள இடங்களின் பெயர்கள் பெரும்பாலும் தமிழ்ப் பெயர்களாக விளங்கி வந்ததையும் நோக்கலாம்.[1] 1948ம் ஆண்டு வரையும் பட்டிப்பளைப் பிரதேசம் என்று அழைக்கப்பட்டு வந்து தற்காலத்தில் கல்லோயா பகுதி என்று குறிப்பிடப்படும் பிரதேசத்தில் அமைந்துள்ள தீகவாபி பற்றி மகாவம்சம் ஆசிரியரும் குறிப்பிட்டுள்ளார். கி.மு.ஆறாம் நூற்றாண்டிலேயே தீகவாபி ஒரு புனிதஸ்தலமாக இருந்ததென்று அவர் குறிப்பிடுகின்றார். பௌத்தம் இக்காலத்தில் இலங்கையில் அறிமுகமாகவில்லை யென்பது குறிப்பிடத்தக்கது. பௌத்த மதக் கதைகளில் புத்தர் இலங்கைக்கு மூன்று தடவைகள் வந்ததாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. அவர் மூன்றாவது தடவை இலங்கைக்கு வந்தபோது தென்கிழக் கிலங்கைக்கும் வந்ததாகக் கூறப்படுகின்றது.[2] ஆனால், கௌதம புத்தரின் வருகை பற்றி வரலாற்றுச் சான்றுகள் இல்லையென்றே கூறலாம்.

1. பொன்னன்வெளி போன்ற பெயர்கள் இன்றும் வழக்கில் உண்டு
2. இலங்கையின் சுருக்கவரலாறு - பக்.5, 6 எச்.டபிள்யு.கொடிறின்றன் - 1960

புத்தர் பெருமான் வட இந்தியாவிலேயே தம்முடைய வாழ்நாள் முழுவதையும் கழித்தார் என்றும் தென்னிந்தியாவுக்கோ இலங்கைக்கோ வேறு நாடுகளுக்கோ அவர் போகவில்லையென்றும் அவருடைய வாழ்க்கை வரலாறு கூறுகின்றது.[3] பழங்கதைகளின் படி அக்கால கட்டத்தில் (கி.மு.ஆறாம் நூற்றாண்டு) இங்கு வாழ்ந்துவந்தவர்கள் நாகர், இயக்கர் ஆகிய திராவிடக்குடியினராவர். பண்டைய வரலாற்றில் திராவிடர் என்பது தமிழரையே குறிப்பதாகும். தொல்லியல் ரீதியாக நோக்குமிடத்து திராவிடவியல் சார்ந்த பெருங்கற் பண்பாடு இலங்கையில் நிலவியிருந்த இக்காலத்தில் தீகவாபியில் வாழ்ந்து வந்தவர்கள் திராவிடரான தமிழர்களேயாவார். இதனை இப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட தொல்லியல் சின்னங்கள் உறுதி செய்கின்றன.

பெருங்கற்காலம் என்பது கி.மு.1000 - கி.மு.200 வரையுள்ள காலப்பகுதியாகும். இலங்கை நாகரீகத்தின் தோற்றத்திற்கு வித்திட்டது பெருங்கற்காலப் பண்பாடே எனலாம். நம்நாட்டுப் பெருங்கற்காலப் பண்பாட்டைத் தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டின் அம்சமாகவே கொள்ளக் கிடக்கின்றது. ஈழத்தில் பெருங்காலப் பண்பாடு பரந்திருந்த பிராந்தியங்களில் அம்பாறை, மட்டக்களப்பு, மாவட்டங்களும் அடங்கும்.[4] இம்மாவட்டங்களில் ஈமத்தாழிகள் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. இவைபற்றிக் கருத்துத் தெரிவித்த வரலாற்றுப் பேராசிரியர் எஸ்.பரணவிதான மேற்குறிப்பிட்ட பிரதேசங்கள் திராவிடரின் முன்னோர் வாழ்ந்த இடங்கள் தாம் என்பதை மறுக்கமுடியாதவராகக் காணப்படுகின்றார்.[5]

அம்பாறை மாவட்டத்தில் பெருங்கற்காலச் சின்னங்கள் கண்டெடுக்கப்பட்ட இடங்களில் தீகவாபியும் அடங்கும். ஆதலால், கி.மு.ஆறாம் நூற்றாண்டளவில் (கௌதம புத்தர் காலத்தில்) தீகவாபியில் வாழ்ந்து வந்தவர்கள் திராவிடரான தமிழர்கள் என்பது தெளிவு. இதேபோன்று கி.மு.ஐந்தாம் நூற்றாண்டில் அனுரத புரத்தைச் சூழ்ந்துள்ள நாட்டை விஜயன் (கி.மு.483-445) ஆட்சி புரிந்த வேளையில் திராவிடரான தமிழர்களே தீகவாபியில் வாழ்ந்திருந்தனர். வரலாற்று இலங்கையின்

3. தமிழ்நாட்டு வரலாறு- சங்ககாலம் : அரசியல் - பக்.599,600
இலங்கையில் தமிழர்-(கட்டுரை) மயிலை சீனவெங்கடசாமி
4. பிராமிக் கல்வெட்டுக்களும் தமிழும் - கலாநிதி.சி.க.சிற்றம்பலம். சிந்தனைத்தொகுதி I இதழ் I 1983
5. (S.Paranavithana - Singalayo Page 9 - 1967)
இலங்கை இடப்பெயர் ஆய்வு - 2 பக்.16,17 கலாநிதி.இ.பாலசுந்தரம் -1989



முதல் மன்னன் என்று வரலாற்றாசிரியர்களால் வர்ணிக்கப்படும் விஜயன் இலங்கை முழுவதையும் ஆட்சிபுரியவில்லை என்பதும் வரலாற்றுண்மையாகும்.

தமிழகத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியாகத் தோன்றி வளர்ச்சியுற ஆரம்பித்த சங்ககாலத் தொடக்கத்தில் அதாவது கி.மு.மூன்றாம் நூற்றாண்டளவில் 'பட்டிப்பளை' என்ற கல்லோயாப் பிரதேசத்தில் தமிழ் மன்னர்களது ஆட்சியே நிலவியிருந்தது. இந்துமதமும் செழித்திருந்தது. அக்காலத்தில் குறிப்பாகத் தென்னிந்தியாவை யொத்த அரசுமுறையே இங்கும் தோன்றி நிலைபெற்றிருந்தது. இப்பிரதேசத்தில் (கல்லோயா) ஆட்சி புரிந்தவர்கள் பாண்டிய குலத்துத் தமிழ்ச் சிற்றரசர்களாவர். இவர்களது ஆட்சி தீகவாபியை உள்ளடக்கிய கல்லோயாப் பிரதேசத்தில் (பட்டிப்பளை) உன்னத நிலையிலிருந்தது. தென் கிழக்கிலங்கையில் கண்டெடுக்கப்பட்ட பதினைந்து பிராமிச் சாசனங்கள் இதனை உறுதி செய்கின்றன.[6]

அம்பாறை மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டொன்று (Paranavidanas, 1970:21) மஜ்ஜி மகாரஜ எனக் குறிக்கின்றது.இது தமிழ் மீனவனின் பிராகிருத மொழிபெயர்ப்பு எனக்கொள்வது பிழையாகாது. மீனவர் என அழைக் கப்பட்ட மீன் சின்னம் படைத்திருந்த பாண்டியர், இந்நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்தனர் என்பதைப் பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் மீன் இலச்சினைகளும் எடுத்துக்காட்டுகின்றன.[7] கி.மு.மூன்றாம் நூற்றாண்டளவில் உரோகண மண்டலம் முழுவதையும் (அம்பாந்தோட்டை, மொனராகலை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்கள்) பாண்டிய குலத்துத்தமிழ் அரசர்களே ஆட்சி புரிந்து வந்தனர். கதிர்காமம், சாகாமம், சந்தனகாமம் (கல்லோயா) ஆகிய இடங்களிலிருந்து உறுகுணையை ஆட்சிபுரிந்து வந்த இவர்கள் அனுரதபுர அரசர்களுக்குக் கட்டுப் படாத சுதந்திர அரசர்களாகவே விளங்கிவந்தனர் என்பதை மீன் உருவங்கள் பொறிக்கப்பட்ட இவர்களது பிராமிக் கல்வெட்டுக்கள் தெளிவுறுத்துகின்றன.[8]

6. தமிழர் சமயவரலாறு - பக்.224, 225 கலாநிதி ஆ.வேலுப்பிள்ளை - 1980
7. பிராமிக்கல்வெட்டுக்களும் தமிழும் - கட்டுரை கலாநிதி சி.க.சிற்றலம்பலம் சிந்தனை தொகுதி I இதழ் I - 1983
8. மிகப்பழங்காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து வந்து தமிழ்கள் குடியேறி வாழ்ந்திருந்த உரோகண நாட்டை இத்தமிழ் அரசர்கள் கி.மு.நாலாம் நூற்றாண்டிலிருந்து கி.மு.இரண்டாம் நூற்றாண்டு வரையில் ஆண்டனர். இவர்கள் உறுகுணையில் ஆதிகாலத்தில் வந்து குடியேறியவர்களின் சந்ததியினரின் வழிவந்தவர்கள்.

பௌத்தம், இலங்கையில் அறிமுகமாகாத அக்காலத்தில் பட்டிப்பளை என்ற கல்லோயாப் பிரதேசத்தில் நிலைத்திருந்த தமிழ் அரசையே 'சந்தன காமத்துச் சத்திரியர்களின் அரசு' என்று மகாவம்சம் குறிப்பிடுகின்றது. உறுகுணையில் தமிழ் அரசுகள் உன்னத நிலையிலிருந்த காலத்தில் கி.மு.247ல் பௌத்தம் இலங்கையில் அறிமுகமாகிப் பரவியது. இவ்வேளையில் பட்டிப்பளையில் ஆட்சிபுரிந்து வந்த தமிழ் அரசர்களும் பௌத்தத்தை ஆதரித்து வந்தனர். அம்பாறை மாவட்டத்திலுள்ள ஹெனன்னெகல என்னுமிடத்திலுள்ள பிராமிச் சாசனம் இம்மன்னர்கள் பௌத்தத்தை ஆதரித்தனர் என்பதைக் கூறும். இதன்பயனாகப் பௌத்தம் இப்பிரதேசத்தில் வாழ்ந்து வந்த தமிழர்களிடையே வேகமாகப் பரவியது. பௌத்த தமிழர்களும் உருவாயினர். அக்காலத்திலேயே தீகவாபி தலம் தோன்றிய தென அறியமுடிகின்றது.[9]

புகழ்பெற்ற மன்னனான தேவநம்பியதீசன் என்ற மன்னது காலத்தில் (கி.மு.247) அனுரதபுரியில் நடைபெற்ற புனித அரசமரக்கிளை நடும் வைபவத்தில் விசேட அதிதிகளாக உரோகண அரசர்களும் (கதிர்காமச் சந்தணகாம அரசர்கள்) கலந்து கொண்டமை பற்றி மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இலங்கை அரசியலில் இவர்கள் அன்று பெற்றிருந்த முக்கியத்துவத்தை இதன் வாயிலாக அறியமுடிகின்றது. இவ்வைபவத்தில் கலந்துகொண்ட இவர்கள் அரசமரக்கிளைகளைப் பெற்றுத் தமது அரசிலும் நாட்டியுள்ளனர் என்பதையும் மகாவம்சம் கூறுகின்றது.[10] இக்காலத்தில் வெள்ளரசுக் கிளை யொன்று கதிர்காமத்திலும் நாட்டப்பட்டதாக மகா வம்சம் மேலும் குறிப்பிடுகின்றது. அக்காலத்திலேயே தீகவாபி தலம் சந்தணகாமத் துத் தமிழ் அரசர்களால் தோற்றுவிக்கப்பட்டது. இதனை ஆய்வுகள் உறுதி செய கின்றன.அக்காலத்தில் தீகவாபியிலும் அதனைச் சூழவுள்ள இடங்களிலும் வாழ்ந்து வந்த பௌத்த தமிழர்களின் வழிபாட்டுத் தலமாக தீகவாபி விளங்கி வந்தது.

சங்க காலத்துக்குச் சமமான இக்காலத்தில் (கி.மு.மூன்றாம் நூற்றாண்டு) தமிழகத்தில் தமிழரிடையே பௌத்தம் செல்வாக்குப் பெற்றிருந்ததும் குறிப்பிடத் தக்கதாகும். அக்காலத்தில் தமிழர்களே தனிப் பெரும்பான்மையினராக வாழ்ந்து வந்த சந்தணகாமம் என்ற கல்லோயாப் பிரதேசத்திலும் இந்நிலையே நிலவியிருந்தது எனலாம்.

9. பண்டைய ஈழத்தமிழர் - பக்.46 நா.நவநாயகமூர்த்தி - 1998
10. The Mahawamsa - W.Geiger . அதிகாரம் XXI. 61 - 63 - Colombo - 1950



## சேனன், கூத்திகன் காலம்

கி.மு.இரண்டாம் நூற்றாண்டளவில் தேவநம்பியதீசனின் தம்பியாகிய சூர த்தீசன் என்பவனிடமிருந்து அனுரதபுரியைக் கைப்பற்றி சேனன், கூத்திகன் (கி.மு.177-155) ஆகிய தமிழ் மன்னர்கள் இருபத்திரண்டு ஆண்டுகள் நீதி வழுவாது ஆட்சி புரிந்தனர். இதனைத் தீபவம்சம் (18:47) குறிப்பிடுகின்றது. இத்தமிழ் மன்னர்களது ஆட்சிக்காலத்தில் தீகவாபியை உள்ளடக்கிய பட்டிப்பளை என்ற கல்லோயாப் பிரதேசதம் முழுவதிலும் தமிழர் செல்வாக்கே நிலைத்திருந்தது. இக்காலத்தில் தமிழர்கள் நிறைந்திருந்த தென்கிழக்கிலங்கை தமிழ் மன்னனான கூத்திகனால் நன்கு அபிவிருத்தி செய்யப்பட்டது. குறிப்பாக சம்மாந்துறை, வீரமுனை, ஆகிய இடங்களை உள்ளடக்கிய இன்றைய சம்மாந்துறைப் பிரதேசத்தை இம்மன்னன் நன்கு அபிவிருத்தி செய்ததுடன் இங்கு மட்டக்களப்பு என்ற நகரத்தையும் நிர்மாணித்துத் தமிழருக்கெனத் தனியானதொரு அரசொன்றையும் இங்கு உருவாக்கினான்[11] என அறிய முடிகின்றது.

மேலும் இவன் தனது ஆட்சிக்காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து தமிழ் மக்களை வரவழைத்து இவர்களை வளத்தாப்பிட்டி, அட்டப்பள்ளம், மல்வத்தை, மல்லிகைத் தீவு, நிந்தவூர் ஆகிய இடங்களில் குடியேற்றியதாக வரலாற்றாய்வுகள் மூலமாக அறியமுடிகின்றது. தமிழ்ச் சைவனான கூத்திகன், தனது ஆட்சிக் காலத்தில் தென்கிழக்கிலங்கையில் வாழ்ந்து வந்த தமிழ் மக்களது சமூக, சமய, பொருளாதார மேம்பாட்டினைக் கருத்திற் கொண்டு ஆற்றிய பணிகள் பற்றி மரபுரைகள் குறிப்பிடுகின்றன. இவன் பௌத்த மதத்தையும் ஆதரித்து வந்தான். அக்காலத்தில் தென்கிழக்கிலங்கையில் வாழ்ந்து வந்த பௌத்த தமிழர்களது பிரதான வழிபாட்டுத்தலமாக விளங்கி வந்த தீகவாபியின் வளர்ச்சிக்கு இவன் தனது ஆதரவை நல்கி வந்தான். இம்மன்னனது காலத்தில் தீகவாபியில் வாழ்ந்து வந்த தமிழரிடையே பௌத்தம் செழித்திருந்தது. இதனைத் தொல்லியல் சான்றுகள் உறுதி செய்கின்றன.

இலங்கையில் வாழ்ந்து வந்த மக்கள் அனைவரையும் சமமாக மதித்து நீதிவழுவாது இலங்கை முழுவதையும் ஆட்சிபுரிந்து வந்த சேனன், கூத்திகன் ஆகிய தமிழ் மன்னர்களது காலத்தில் மன்னன் கூத்திகன் பௌத்தவிகாரைகளுக்குத்

11. மட்டக்களப்பு மான்மியம் - பக்.20,21 பதிப்பாசிரியர் எப்.எக்ஸ். நடராசா - 1962

தானங்கள் வழங்கிவந்தான். இவன் தானம் செய்ததைக் கூறுகின்ற கல்வெட்டெ முத்துச் சாசனம் அனுரதபுரியில் கட்டுபிடிக்கப்பட்டுள்ளது.[12] இத்தமிழ் மன்னர்களது காலத்தில் (கி.மு.177-155) அனுரதபுரம் , வவுனியா ஆகிய மாவட்டங்களைப் போன்று தென்கிழக்கிலங்கையில் குறிப்பாக அம்பாரை மாவட்டத்திலும் வணிகத் துறையில் தமிழ் வணிகர் செல்வாக்குப் பெற்றிருந்தனர். இதனைப் பிராமிக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. (1970 S.Paranavitna) இதேபோன்று பட்டினப் பாலை என்ற நூல் ஈழத்திற்கும் தமிழ் நாட்டிற்குமிடையில் அக்காலத்தில் நடைபெற்ற வாணிபம் பற்றிக் குறிப்பிடுகின்றது.[13]

தீகவாபியைச் சேர்ந்த குடுவில் என்னுமிடத்திலுள்ள மலைக்குகையில் பொறிக்கப்பட்டுள்ள பிராமிக் கல்வெட்டொன்று சேனன், கூத்திகன் காலத்தில் தீகவாபியில் வாழ்ந்து வந்த தமிழ் வணிகர் பற்றியும் அவர்கள் பௌத்த துறவிக்கு அளித்த தானம் பற்றியும் குறிப்பிடுகின்றது. இவற்றின் வாயிலாகத் தீகவாபியில் அக்காலத்தில் தமிழர் பெற்றிருந்த செல்வாக்குத் தெளிவாகின்றது. இவ்வாறு தமிழர் செல்வாக்கும் தமிழ் மன்னரது ஆட்சியும் தீகவாபியில் நிலைத்திருந்த அக்காலத்தில் பௌத்த தமிழர்களின் வழிபாட்டுத் தலமாக விளங்கி வந்த தீகவாபி தமிழ் மன்னர்களான சேனன், கூத்திகனால் ஆதரிக்கப்பட்டு வந்தது. இது மறைக்கப்பட்ட வரலாற்றுண்மையாகும்.

## எல்லாளன் காலம் (கி.மு.145-101)

அனுரதபுரியிலிருந்து இலங்கை முழுவதையும் ஒரு குடையின் கீழ் ஆட்சி புரிந்த எல்லாளன் என்ற தமிழ் மன்னது காலத்தில் தீகவாபியிலும் அதனைச் சூழவுள்ள இடங்களிலும் தமிழர்களே வாழந்துவந்ததுடன் தமிழரது அரசியல் செல்வாக்கே நிலைத்திருந்தது. தமிழ்ச் சைவனான எல்லாளன் பௌத்த சமய வளர்ச்சிக்கு அருந்தொண்டுகள் புரிந்து வந்துள்ளான். இதனை மகாவம்சம் கூறும். இவனது சைவப்பணிகள் பற்றி இந்நூல் விபரமாகக் குறிப்பிடவில்லை எனலாம். ஆயினும் இவனது சைவசமயப் பணிகள் தென்கிழக்கிலங்கையின்

12. Anuradhapura Slab Inscription of Kutta Parinda - by S.Paranavithan Epigraphia Zelonica Vol. IV p 111 p 15
(தமிழ் நாட்டு வரலாறு. சங்ககாலம் - அரசியல் - பக்.617 - 1983)
13. ஈழமும் இந்து மதமும் அனுரதபுரிக்காலம் - கலாநிதி சி.க.சிற்றம்பலம் கட்டுரை சிந்தனை தொகுதிII இதழ்I பங்குனி -1984



திருக்கோவில் வரை பரந்திருந்ததை மரபுரைகள் உணர்த்துகின்றன. இவனது காலத்தில் தீகவாபி தலம் சிறப்புடன் விளங்கியிருந்தது என அறியமுடிகின்றது. தமிழ் மன்னனான எல்லாளனின் மேலாதிக்கத்தை ஏற்று உறுகுணையின் தென் பகுதியை மாகமை என்னுமிடத்திலிருந்து ஆட்சிபுரிந்து வந்த கவந்தீசன் என்னும் சிற்றரசனது காலத்திலேயே இலங்கை வரலாற்றில் தீகவாபி முக்கியத்துவம் பெறத் தொடங்குகின்றது.

உறுகுணையின் தென்பகுதியை கவந்தீசன் ஆட்சிபுரிந்த காலத்தில் உறுகுணையின் வடபகுதியில் தமிழ்ச்சிற்றரசர்கள் பலர் ஆட்சிபுரிந்து வந்தனர். இதனை மகாவம்சம் குறிப்பிடுகின்றது.[14] இதன் வாயிலாக அக்காலத்தில் உறுகுணையின் வடபகுதியில் தமிழரது அரசியல் செல்வாக்கே நிலைத்திருந்த தென்பது தெளிவு. கவந்தீசன் தனது ஆட்சிக்காலத்தில் அறுபத்திரண்டு விகாரை களைக் கட்டினான் என மகாவம்சம் கூறும். இவனது சமயப்பணிகள் திருக்கோவில் வரை பரந்திருந்ததென நொயல் பீரிஸ் குறிப்பிடுகின்றார்.[15] இக்காலத்திலேயே கவந்தீசன் தனது இளைய மகனான சதாதீசனை தீகவாபி அபிவிருத்திக்காக அனுப்பி வைத்தான். இவன் தீகவாபியை அபிவிருத்தி செய்ததுடன் வளங்கள் நிரம்பப்பெற்ற இப்பிரதேசத்தில் நெல்விளைச்சலையும் பெருக்கினான் என்று வரலாறுகள் குறிப்பிடுகின்றன.[16] இவ்வாறு உறுகுணைச் சிற்றரசனான கவந்தீசனது காலத்திலேயே இலங்கை வரலாற்றில் தீகவாபி முக்கியத்துவம் பெறத்தொடங்கு கின்றது.

கவந்தீசனின் இளையமகனான சதாதீசன் என்பவன் தீகவாபியில் வந்து தங்கியிருந்தான் என்றும் இவ்வேளையில் தனது தந்தை இறந்த செய்தி கேட்டுச் சதாதீசன் திரும்ப மாகமை சென்று தந்தையின் அந்திமக்கிரியைகளைச் செய்து விட்டுத் தன் தாயுடன் தீகவாபியிலேயே வந்து தங்கினான் என்றும் மகாவம்சம் கூறும்.[17] தமிழர்கள் நிறைந்திருந்ததும் நெல்வயல்கள் சூழ்ந்திருந்ததுமான தீகவாபியில் சதாதீசனும் தாய் விகாரமகாதேவியும் துட்டகாமினிக்குப் பயந்து

14. மகாவம்சம் - பக்.170, 171 வில்லியம் கைகர் பதிப்பு - 1986
15. " Kavantissa Found his Queen Here" fl;Liu Noeyal Peiris - Daily News 24-08-1984.
16. பண்டைய ஈழம் - பாகம் I பக்.72 வே.க.நடராசா - 1970
17. மகாவம்சம் - அத்.24: செய்யுள் 14-15 தமிழாக்கம் எஸ்.சங்கரன் - மல்லிகை பதிப்பகம் சென்னை - 1962

பாதுகாப்புக்கருதி தங்கியிருந்தனர் என அறியமுடிகின்றது. இதேவேளை இதற்கு முந்திய காலத்தில் குறிப்பாக பௌத்தம் இலங்கையில் அறிமுகமான காலத்தில் கதிர்காமத்து சந்தணகாமத்து அரசர்கள் (கதிர்காமச் சண்டனகாமத்துச் சத்திரியர்) புனித அரசமரக்கிளை நடும் வைபவத்தில் கலந்து கொண்டதையும் அத்துடன் இந்த அரசர்கள் அரசமரக்கிளைகளைத் தங்கள் ஆட்சிப் பகுதிகளிலும் நட்டனர் என்பதையும் மகாவம்சம் குறிப்பிடுகின்றது.[18]

இச்செய்தியானது இந்த இடங்களிலும் பௌத்தம் கால் கொண்டதையே எடுத்துக்காட்டுகின்றது. அத்துடன் இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் கதிர்காமச், சந்தண காமத்து அரசர்கள் பற்றி மகாவம்சம் குறிப்பிடாமை கூட இவர்களின் சந்ததியினர் பௌத்தத்தை அனுஷ்டித்தனர் என்பதையே எடுத்துக் காட்டுகின்றது. இலங்கையின் தென், தென்கிழக்குப் பகுதிகளில் காணப்படும் இவர்களின் சந்ததியின் கல்வெட்டுக்கள் இதனை உறுதி செய்கின்றன.[19] இதேவேளை பௌத்தம் இலங்கையில் அறிமுகமான காலத்தில் சந்தணகாமத்து (கல்லோயா) தமிழ் அரசர்களால் அரசமரக்கிளையொன்று நடப்பட்டுத் தோற்றுவிக்கப்பட்ட தீகவாபி (தலம்) பற்றியும் இதனைத் தொடர்ந்து இலங்கையில் ஆட்சி புரிந்து வந்த தமிழ் மன்னர்கள் தீகவாபி வளர்ச்சிக்கு ஆற்றிவந்த பணிகள் பற்றியும் இலங்கை வரலாற்று நூல்கள் மௌனம் சாதித்துள்ளன. ஆயினும் தொல்லியல் சான்றுகள் வரலாற்றாய்வுகள் என்பனவற்றின் வாயிலாகத் தீகவாபியின் தொன்மை வரலாற்றினை நாம் அறிய முடிகின்றது.[20] இவற்றை ஆதாரங்களாகக் கொண்டு நோக்குமிடத்து உறுகுணைச் சிற்றரசனான கவந்தீசனுக்கு முந்திய காலத்தில் உரோகணம் முழுவதையும் ஆட்சிபுரிந்து வந்த பாண்டிய குலத்துத் தமிழ் மன்னர் காலத்திலிருந்து பௌத்த தமிழர்களால் போற்றப்பட்டு வந்த தீகவாபியையே (தலம்) கவந்தீசன் தனது இளைய மகனான சதாதீசனை கொண்டு அபிவிருத்தி செய்தான் என அறியமுடிகின்றது.

18. ஈழத்தவர் வரலாறு - பக்.30 கலாநிதி க.குணராசா - 1996
19. ஈழத்து இந்து சமய வரலாறு - பாகம் I பக்.28, 29 பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்-1996
20. தமிழர்கள் நிறைந்து வாழ்ந்திருந்த சந்தணகாமத்தை உள்ளடக்கிய தென்கிழக் கிலங்கையை கி.மு.நாலாம் நூற்றாண்டு தொடக்கம் கி.மு.இரண்டாம் நூற்றாண்டு வரையும் பாண்டியகுலத்துத் தமிழ் அரசர்கள் ஆட்சிபுரிந்தனர் என்பதை தொல்லியல் சான்றுகள் வரலாற்றாய்வுகள் என்பன உறுதி செய்கின்றன.



தென்னிலங்கையில் உறுகுணையில் சிற்றரசனாக ஆட்சிபுரிந்து வந்த கவந்தீசன் புகழ்பெற்ற மன்னனான தேவநம்பியதீசனின் பரம்பரையினனாவான். தேவநம்பியதீசனது காலத்தில் (கி.மு.மூன்றாம் நூற்.) அவனது சகோதரர்களுள் ஒருவனான மகாநாகன் என்பவன் அனுரதபுரியில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தின் காரணமாகத் தனது உயிருக்கு அஞ்சித் தன்னுடைய குடும்பத்தோடு உறுகுணைக்குத் தப்பிச் சென்றான். அங்கு கதிர்காமத்திலிருந்து அரசு புரிந்து கொண்டிருந்த பாண்டிய குலத்துத் தமிழ் அரசனான காமணி அபயனிடம் அடைக்கலம் புகுந்தான். காமணி அபயன் மகாநாகனுக்கு புகலிடம் கொடுத்து ஆதரித்து வந்ததுடன் மகாகாமம் என்ற நகரத்தையும் உருவாக்கி அவனுக்குக் கொடுத்தான்.

இந்நகரிலிருந்து சிற்றரசனாக மகாநாகன் ஆட்சிபுரிந்து வந்தான். இவனுக்கு அட்டலாயதீசன், (யத்தலாயத்தீசன்) கோதபாயன் என இருமக்கள் இருந்தனர். இதனைத் தொடர்ந்து கதிர்காமத்து அரசர்களுக்கும் மகாகாமம் என்ற மாகமை ஆட்சியாளர்களுக்குமிடையில் நெருக்கமான உறவுகள் இருந்து வந்தன. கதிர்காமத்து அரசனான காமணி அபயனின் மறைவையடுத்து அவனது மக்கள் உறுகுணையில் ஆட்சிபுரிந்து வந்தனர். இவ்வேளையில் மகாநாகனின் மகனான கோதபாயகன் மாகமையிலிருந்து ஆட்சிபுரிந்து வந்தான். இவன் காமணிஅபயனின் மக்களான பத்து அரதசகுமாரர்களைக் கொன்று உறுகுணையின் இராசதானியை தனதாக்கிக் கொண்டான்.[21] இவன் தமிழ் அரசர்கள் பத்துப் பேரையும் அழித்த பொழுதிலும் கதிர்காமப் பகுதியில் தமிழ் அரசர்களது ஆதிக்கம் ஓரளவு இருந்து வந்தது.

உறுகுணையின் தென்பகுதியில் கோதபாயன் தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்தியிருந்த இவ்வேளையில் காமணி அபயனின் மக்களான பத்து அரசகுமாரர்களில் மூத்தவனான தர்மராஜா என்பவனின் மகன் மகாதீசன் என்பவன் தென்கிழக்கிலங்கையில் ஆதிக்கம் பெற்றிருந்தான்.[22] இதன்மூலம் பாண்டியரின் ஆட்சியை உறுகுணையில் (வடபகுதி) இவன் நிலைநிறுத்தி வந்தான். பத்து தமிழ் அரசகுமாரர்களைக் கொன்று உரோகண நாட்டைக் கைப்பற்றிக் கொண்ட கோதபாயனின் மகனே கவந்தீசன்ஆவான்.

21. History of Ceylon - Page 60. C.W.Nicholas and S.Paranavidana- Colombo-61
22. ஈழத்தவர் வரலாறு - பக்.39 கலாநிதி க.குணராசா - 1996

கோதபாயன் தனது மகனான கவந்தீசனுக்கு உரோகண நாட்டுப் பரம்பரையில் வந்தவளும் மகாதீசனின் மகளுமான சவெர என்ற அரசியைத் திருமணம் செய்துவைத்தான். இதன் மூலமாகவே கவந்தீசன் உறுகுணையில் தனது செல்வாக்கை ஓரளவு நிலைநிறுத்திக் கொண்டான் எனலாம். மேலும் கவந்தீசன் கல்யாணி நாட்டு அரசனின் மகளான விகாரமகாதேவி என்பவளையும் திருமணம் செய்திருந்தான். இவள் மூலமாகப் பிறந்தவர்களே துட்டகாமினியும் சதாதீசனும் ஆவர்.



# அனுரதபுரியில் ஆட்சி புரிந்த ஐந்து தமிழ் அரசர்கள்

கி.மு.நாலாம், மூன்றாம் நூற்றாண்டுகளில் பாண்டியர் குலத்துத் தமிழ் அரசர்களது அரசியல் செல்வாக்கே உரோகணத்தில் நிலைத்திருந்தது. தேவநம்பிய தீசன் காலத்தில் இத்தமிழ் அரசர்களது ஆட்சி உன்னத நிலையிலிருந்த வேளையில் இம்மன்னர்களின் ஆதரவுடன் தேவநம்பிய தீசனின் தம்பியான மகாநாகன் உறுகுணையில் மாகமை அரசை தோற்றுவித்தான். இவனது பேரனான கோதபாயன் என்பவன் மாகமையில் ஆட்சிபுரிந்த வேளையில் ரோகணத்துக் கதிர்காம அரசனான கமணியையும் அவனது பத்துப் பிள்ளைகளையும் கொலை செய்து உறுகுணை இராசதானியைத் தனதாக்கிக்கொண்டான்.

இதனைத் தொடர்ந்து உரோகணத்தில் சிங்கள மன்னரது அரசியல் செல்வாக்கு நிலைபெற்றதெனலாம். ஆயினும் உரோகணத்தின் வடக்குக் கிழக்குப் பகுதியான தென் கிழக்கிலங்கையில் தொடர்ந்து பாண்டியகுலத்துத் தமிழ் அரசர் ஆதிக்கம் நிலவியிருந்தது. அனுரதபுரியில் ஆட்சிபுரிந்த சேனன், கூத்திகன் (கி.மு.177-155) எல்லாளன் (கி.மு.145-101) ஆகிய தமிழ் மன்னர்களது காலத்தில் உரோகணத்தில் தமிழர்களது அரசியல் செல்வாக்கு மீண்டும் உன்னத நிலையை எய்தியிருந்தது. கி.மு.101 ல் மாமன்னர் எல்லாளனின் நாற்பத்து நாலு வருட நல்லாட்சி முற்றுப்பெற்றதைத் தொடர்ந்து கி.மு.44ம் ஆண்டு வரையும் சிங்களவர்களது அரசியல் செல்வாக்கே உரோகணத்தில் நிலைத்திருந்தது.

கி.மு.44ல் வட்டகாமினி என்பவன் அனுரதபுரத்தில் மன்னனான வேளையில் தமிழர்கள் மீண்டும் தங்கள் அரசியல் செல்வாக்கை உறுகுணையில் நிலைபெறச் செய்திருந்தனர் எனலாம். இவ்வேளையில் தீசன் என்ற தமிழ்ச் சிற்றரசன் உரோகணத்தில் தனது ஆதிக்கத்தை நிலைபெறச் செய்திருந்ததை வரலாற்றாய்வுகள் மூலமாக அறியமுடிகின்றது. பிராமணனான இவன் அனுரதபுரத்தில்

ஆட்சிபுரிந்த வட்டகாமினிக்கு எதிராக ஆட்சியுரிமை வேண்டிக் கலகம் செய்து வந்தான் என மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இதன் வாயிலாக அக்காலத்தில் உரோகண அரசியலில் இவன் பெற்றிருநத செல்வாக்குத் தெளிவாகின்றது.

இவனை நேரடியாகச் சந்திப்பதற்கு ஆரம்பத்தில் வட்டகாமினி மன்னன் தயங்கினான் என மகாவம்சம் மேலும் கூறும். ஈழத்தில் வாழ்ந்து வந்த திராவிடரான தமிழரிடையே (நாகர்குடியினர் உட்பட) பௌத்தம் பரவிப் பௌத்த தமிழர்கள் உருவாகியிருந்த அக்காலத்தில் உரோகணத்தில் மட்டுமன்றி அனுரதபுரி ஆட்சியிலும் இந்து சமயத்தையும் தமிழர் ஆட்சியையும் முன்னிலைப்படுத்தவேண்டும் என்ற நோக்கிலேயே பிராமணனான தீசனின் அனுரதபுரி ஆட்சிக்கெதிரான அரசியல் கிளர்ச்சி அமைந்திருந்ததெனக் கருதமுடியும்.

இலங்கையில் விஜயன் காலந்தொட்டு பிராமணர் பெற்றிருந்த செல்வாக்கை மகாவம்சம் உரைக்கின்றது. இது உபதிஸ்ஸ (உபதீசன்) என்னும் பிராமணனை விஜயனோடு தொடர்புபடுத்திக் கூறுகின்றது. உபதிஸ்ஸ விஜயனின் புரோகிதராக விளங்கினான் என்றும் அவன் உபதிஸ்ஸகாமம் என்னும் ஊரைக் கொண்டிருந்தான் என்றும் கூறப்படுகின்றது. மன்னன் விஜயன் இறந்தபின் சிலகாலம் இராச்சிய பரிபாலனம் புரோகிதர் வசம் இருந்ததென்றும் மகாவம்சம் கூறும்.[1] கி.மு.நாலாம் நூற்றாண்டில் பாண்டுகாபயன் (கி.மு.377-307) காலத்தில் பிராமணர்களுக்கே பிரத்தியோகமாக இருந்த வதிப்பிடத்தை மகாவம்சம் (MVX:102) உரைக்கின்றது.

கி.மு.மூன்றாம் நூற்றாண்டில் பௌத்தம் இங்கு அறிமுகமான பின்பும், பிராமணர்கள், அரசர்களால் ஆதரிக்கப்பட்டு வந்ததுடன் செல்வாக்குடனும் விளங்கினர். கி.மு.முதலாம் நூற்றாண்டில் பௌத்தம் அரச ஆதரவு பெற்றிருந்த வேளையில் இந்து சமயத்தை முன்னிலைக்கு இட்டுச்செல்ல அரசியல் ஆதிக்கத்தைப் பெற பிராமணன் தீசன் முயன்றான். இதன் விளைவே தீசன் அனுரதபுரி அரசுக்கெதிராக மேற்கொண்ட கிளர்ச்சி எனலாம். இது வட்டகாமினி அரசுக்கு வந்து சில மாதங்களில் நிகழ்ந்தது. இவனது கிளர்ச்சியால் பௌத்த பிக்குமார் நாட்டை விட்டுச் செல்லவும் நேரிட்டது.[2] இவ்வேளையில் இலங்கையில்

1. இலங்கையில் இந்து கலாசாரம் - பகுதி I - பக்.35 வரலாற்றுத்துறைப் பேராசிரியர் கலாநிதி.சி.பத்மநாதன் - 2000
2. ஈழமும் இந்து மதமும் - அனுரதபுர காலம் - கட்டுரை கலாநிதி.சி.க.சிற்றம்பலம் சிந்தனை தொகுதி II இதழ் I - பங்குனி 1984



ஏழு தமிழர்களது படையெடுப்பொன்று நிகழ்ந்தது என மகாவம்சம் குறிப்பிடுகின்றது. வட்டகாமினியின் ஆட்சியில் ஐந்தாவது மாதத்தில் நிகழ்ந்த இப்படையெடுப்பின் பயனாக தமிழர் ஆட்சி ஈழத்தின் அனுரதபுரியில் மீண்டும் நிலைபெற்றது.

உறுகுணை சிற்றரசனான தீசன் அனுரதபுர அரசுக்கெதிராகக் கிளர்ச்சி செய்து கொண்டிருந்த வேளையில் ஏழுதமிழர்களது படையெடுப்பு ஈழத்தில் நிகழ்ந்தது. இவர்கள் மாதோட்டத்தில் வந்து இறங்கினர். இவர்களைச் சந்தித்த உறுகுணை தீசனும் தமிழ் அரசர்கள் எழுவரும் சேர்ந்து ஆட்சியை ஒப்படைக்குமாறு அனுரதபுர மன்னனான வட்டகாமினிக்கு செய்தி அனுப்பினர். கூர்த்தமதி படைத்த மன்னன் தனியே தீசனுக்கு செய்தியொன்று எழுதி அனுப்பினான். இந்த அரசு உன்னுடையது அவர்களைப் போரிட்டு வெல்வாயாக என்று வட்டகாமினி கேட்டுக் கொண்டான். அப்படியே ஆகட்டும் என்று பதிலளித்த தீசன் தமிழ் அரசர்களுடன் போரிட்டான். ஆனால் அவர்கள் அவனை வெற்றி கொண்டனர்.[3]

உரோகணத்து சிற்றரசனான தீசனின் படையை வெற்றி கொண்ட ஏழு தமிழ் மன்னரின் படை அனுரதபுரத்தை நோக்கி விரைந்தது. கொலம்பகாலத் என்னுமிடத்தில் வட்டகாமினிக்கும் தமிழ் அரசர்களுக்குமிடையில் நடந்த சண்டையில் வட்டகாமினி தோல்வியுற்றான். வட்டகாமினியின் மனைவியான சோமாவதி என்பவள் தமிழ் அரசன் ஒருவனிடம் சிக்கினாள். மற்றொருவன் சக்தி வாய்ந்த புத்தரின் ஐயக்களத்தை (பிச்சாபாத்திரம்) அபகரித்துக்கொண்டான். இவர்கள் இருவரும் இந்தியா மீண்டனர் என அறியமுடிகின்றது.[4]

கி.மு.முதலாம் நூற்றாண்டில் வட்டகாமினி மன்னனைத் தோற்கடித்த ஐந்து தமிழ் அரசர்கள் ஆட்சி பற்றி மகாவம்சம் குறிப்பிடுகின்றது. புலகத்தன், பாகியன், பனையமாறன், தத்திகன், பிலயமாறன் ஆகிய இவர்கள் ஒருவர் பின் ஒருவராக பதினாலு வருடங்கள் ஏழுமாதங்கள் அனுரதபுரியிலிருந்து ஆட்சி செலுத்தினர் என மகாவம்சம் (அத்.33: செய்.56-61) கூறும். இக்காலத்தில் வட்டகாமினி மன்னன் மலைநாட்டில் மறைந்து வாழ்ந்தான்.[5] இத்தமிழரசர்களது ஆட்சிக்

3. மகாவம்சம் - (அத்தியாயம் 33 : செய்யுள் 39 - 41 ) தமிழாக்கம் எஸ்.சங்கரன் - சென்னை - 1962
4. பண்டைய ஈழம் பகுதி I - பக்.86,87 வே.க.நடராசா - 1970
5. இலங்கையின் சுருக்க வரலாறு - பக். 19 எச்.டபிள்யு.கொடிறின்றன் - 1960

காலத்தில் இவர்களது அரசியல் ஆதிக்கம் தெற்கே உறுகுணை வரை நிலவியிருந்து. இவர்கள் பாண்டியராக இருக்கலாம் என்று வரலாற்றாசிரியரான எச்.டபிள்யு.கொடிறின்றன் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

இத்தமிழ் மன்னர்களது ஆட்சிக் காலத்தில் இவர்கள் இந்து மத வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் பற்றி மகாவம்சம் குறிப்பிடவில்லை எனலாம். ஆயினும் இக்காலகட்டத்தில் இவர்களது ஆட்சி இந்துமத வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமைந்தீருந்தது எனக் கொள்ளலாம். (கலாநிதி.சி.க.சிற்றம்பலம்-1984) இம்மன்னர்களது ஆட்சிக்காலத்தில் இந்து சமய வளர்ச்சியிலும் இவர்கள் கவனம் செலுத்தி வந்துள்ளனர் என்பதை வரலாற்றுச் செய்தியொன்று தெளிவுறுத்துகின்றது. இச்செய்தியின் வாயிலாக இம்மன்னர்களது சமயப்பணிகள் தெற்கே திருக்கோயில் வரை பரந்திருந்ததையும் அறியமுடிகின்றது.

இத்தமிழ் அரசர்களால் திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயம் திருப்பணி செய்யப்பட்டதாக இவ்வரலாற்றுச் செய்தி தெரிவிக்கின்றது. தமிழரின் இரண்டாவது படையெடுப்பின் போது வந்த சோழநாட்டு மன்னர் எழுவர், திருக்கோவிலைக் கட்டிமுடித்துத் திருப்பணியைப் பூர்த்தி செய்தனர் என இச்செய்தி குறிப்பிடுகின்றது.[6] இச்செய்தியானது ஏற்கனவே தொடங்கப்பெற்றுப் பூர்த்தி செய்யப்படாதிருந்த ஆலயக் கட்டிடநிர்மாணப் பணியினை இத்தமிழ் அரசர்கள் கட்டிமுடித்துத் திருப்பிணைப் பூர்த்தி செய்தனர் என்பதையே குறிக்கின்றது எனலாம்.

மேற்குறிப்பிட்ட வரலாற்றுச் செய்தி இத்தமிழ் அரசர்களை சோழர்கள் என்று குறிப்பிடுகின்றது. இதேவேளை இந்த ஏழுதமிழ் மன்னர்களை பாண்டியர்களாக வரலாற்றாசிரியர்கள் சிலர் குறிப்பிட்டுள்ளனர். மகாவம்சத்தில் எந்த இடத்திலும் இவர்கள் பாண்டியர்களாக குறிக்கவில்லை. இந்த ஏழு தமிழ் அரசர்களும் நாகதீபம் என்ற வடஇலங்கையின் தென்பகுதியான உத்தரதேசத்தில் ஆட்சி புரிந்த குறுநில மன்னர்கள் ஆவர்.[7] கதிரமலையைத் தலைநகராகக் கொண்ட நாகப்பேரரசு யாழ்குடா நாட்டில் செயற்பட்டு வந்த அக்காலத்தில் நாகதீபத்தின் தென்பகுதியான உத்தரதேசத்தை தமிழ் குறுநில மன்னர்கள் ஆட்சி புரிந்து வந்தனர்.

6. மட்டக்களப்பு மான்மியம் - பக்.5 பதிப்பாசிரியர் எப்.எக்ஸ்சி.நடராசா - 1962
7. ஈழத்தவர் வரலாறு - பக்.47 கலாநிதி க.குணராசா - 1996



உத்தரதேசத்தில் மகாதீர்த்தம் (மாந்தை) குதிரைமலை (புத்தளம்) குருந்தை (முல்லைத்தீவு) பல்லவங்கம் (பதவியா) ஆகிய பகுதிகளில் இலங்கையின் பூர்வ குடியினரான நாகர்கள் பெருமளவில் வாழ்ந்திருந்தனர்.[8] இவ்வேளையில் நாகதீவும் உத்தரதேசமும் ஒருங்கே ஈழமண்டலம் எனவும் அழைக்கப்பட்டது.[9] உத்தர தேசத்தில் மகாதீர்த்தமும், குதிரைமலையும் நாகர்கள் வாழ்விடங்களில் முக்கியமானவைகளாக விளங்கின. (சிற்றரசுகள்) சங்ககாலத்துக்குச் சமனான இக்காலத்தில் உத்தரதேசத்தின் பூநகரி பிராந்தியத்தில் சங்ககாலப் பண்பாடு நிலவியிருந்தது. பாண்டிய நாட்டுடன் இப்பிராந்தியம் நெருக்கமான சமூக, சமய, வாணிப, அரசியல், கலாசார தொடர்புகளைக் கொண்டிருந்தது.[10]

இப்பிராந்தியத்தில் தமிழ்க் குறுநில மன்னர்கள் ஆட்சி நிலவியிருந்தது.[11] தென்னிலங்கையில் ஆட்சிபுரிந்த தீசன். அனுரதபுரி ஆட்சிக் கெதிராக கிளர்ந்தெழுந்த வேளையில் வடக்கே ஏழு குறுநிலத் தமிழ் மன்னர்களும் போர்க்கோலம் பூண்டனர். இவர்கள் மாந்தை வழியாக அனுராபுத்தை நோக்கிப் படையெடுத்தனர். இவர்களோடு உறுகுணைத் தீசனும் சேர்ந்து கொண்டான் எனத் தெரிகின்றது. இலங்கை வரலாற்றில் குறுநில மன்னர்கள் அனுரதபுரி ஆட்சியைக் ஏற்காது கிளர்ச்சி செய்கின்ற நிகழ்சிகள் புதியனவன்று.

8. இப்பகுதிகளில் நாகர்களின் சிற்றரசுகள் நிலைத்திருந்தன.
9. ஈழத்தவர் வரலாறு - பக்.53 கலாநிதி க.குணராசா- 1996
10. பூநகரியிற் சங்ககாலப் பண்பாடு - சில தொல்லியற் சான்றுகள் - கட்டுரை பபுஸ்பரட்ணம் பண்பாடு பருவஇதழ் - ஆனி 1995
11. பூநகரியிற் கண்டெடுக்கப்பட்ட தமிழ் பிராமி சாசனம் சங்க காலத்தைப் போல வேளீர் என்ற சிற்றரசின் ஆட்சி நிலவியிருந்ததை சாசனம் உறுதிசெய்கின்றது. (பண்டைய ஈழத்தில் வேளீர் - புதிய சான்று - ஐ.மகாதேவன். தினமணி, சென்னை: 1-7-1990 (ப.புஸ்பரட்ணம் - 1995)
"இக்குறுநில மன்னர்களின் பெயர் அட்டவணைகூட பாண்டிய நாட்டவர்களை ஒத்திருப்பதை நோக்கலாம்."

# தென்கிழக்கிலங்கையில் சோழர் ஆட்சி

'தென்கிழக்கிலங்கை' என்று குறிப்பிடும் பொழுது 1961ம் ஆண்டு வரையும் வடக்கே வெருகல் தொடக்கம் தெற்கே கூமுனை வரையும் பரந்திருந்த பழைய மட்டக்களப்பு மாவட்டத்தையே இது குறிப்பதாகும். இப்பிரதேசத்தையே மட்டக்களப்புத் தமிழகம் என்று புகழ்ந்துரைப்பர். பண்டைக்காலத்தில் உரோகண மண்டலத்தின் வடக்குக் கிழக்குப் பகுதியாக விளங்கியிருந்த இப்பிரதேசம் தனியானதொரு ஆட்சிப் பிரிவாக இருந்து வந்தது. இதனைச் சிற்றரசர்கள் ஆட்சி புரிந்து வந்தனர்.

தமிழர்கள் நிறைந்திருந்த இப்பிரதேசத்தில் தமிழும் சைவமும் செழித்திருந்தன. இப்பிரதேசத்தில் ஆட்சி புரிந்து வந்த சிற்றரசர்கள் சில காலங்களில் இலங்கைச் சிங்கள மன்னர்களின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்த அரசர்களாகவும் சிலவேளை களில் சுதந்திரமுள்ள அரசர்களாகவும் ஆட்சிபுரிந்து வந்துள்ளனர். இதனை வரலாற்றாய்வுகள் நன்கு தெளிவுறுத்துகின்றன.

கி.பி.10ம் 11ம் நூற்றாண்டுகளில் இலங்கை சோழப்பேரரசின் கீழிருந்த காலத்தில் இப்பிரதேசம் உன்னதநிலையில் இருந்துள்ளதை அறியமுடிகின்றது. கி.பி.983ல் சோழப்பேரரசனான முதலாம் இராஜராஜன் சிங்கள மன்னரின் ஆதிக் கத்திலிருந்த நாட்டின் சில பகுதிகள் தவிர்ந்த முழுநாட்டையும் கைப்பற்றினான். இதனைத் தொடர்ந்து இலங்கையில் சோழரது ஆட்சி ஆரம்பமானது.



இவனது மகனான முதலாம் இராஜேந்திரன் சோழரது ஆட்சிக்குட்பட்டிராத தென்னிலங்கையையும் கைப்பற்றி இலங்கை முழுவதிலும் சோழரது ஆட்சியை நிலை நிறுத்தினான். இதனை இவனது கரந்தைச் செப்பேடுகள் உறுதி செய்கின்றன.[1] இதன் பின்னர் இலங்கை சோழப் பேரரசின் ஒரு மாநிலம் ஆயிற்று. கி.பி.1017ம் ஆண்டு தொடக்கம் கி.பி.1029ம் ஆண்டு வரையும் சோழரின் பேரரசு இலங்கை முழுவதிலும் செயல்பட்டது.

இக்காலகட்டத்தில் இலங்கையின் எந்தப் பாகத்திலும் சிங்கள மன்னர்கள் எவரும் ஆட்சிபுரிந்ததாகச் சான்றுகள் இல்லை.[2] வட இலங்கை இக்காலத்தில் சோழரின் ஆதிக்கத்தின் கீழிருந்தது. உத்தரப் பிரதேசம் என்று குறிப்பிடப்படும் இப்பிரதேசத்தை சோழரால் நியமிக்கப்பட்ட அரசப் பிரதிநிதிகள் சிற்றரசர்களாக விருந்து ஆட்சிபுரிந்துவந்தனர்.

## கி.பி.983 - 1029 வரை தென்கிழக்கிலங்கை

முதலாம் இராஜராஜன் இலங்கையைக் கைப்பற்றி பொலநறுவையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த காலத்தில் (983 - 1017) தென்கிழக்கிலங்கை தனியானதொரு ஆட்சிப்பிரிவாகவே இருந்து வந்தது. இதேபோன்று முதலாம் இராஜேந்திரன் இலங்கை முழுவதையும் கைப்பற்றி ஆட்சிபுரிந்த காலத்திலும் இந்நிலையே நீடித்திருந்தது. ஆனால் இக்காலத்தில் (1017-1029) தென் கிழக் கிலங்கையின் தெற்கு எல்லையானது மாணிக்ககங்கை வரை பரந்திருந்தது.

இக்காலத்தில் சோழரின் பிரதிநிதியாக கதிர்சுதன் என்னும் சிற்றரசன் இப்பிரதேசத்தை ஆட்சி புரிந்து வந்தான். இவன் இப்பெரும் பிரதேசத்தை மூன்று பிரிவுகளாகப் பிரித்து ஆட்சிபுரிந்து வந்தான் என அறியமுடிகின்றது. இம்மூன்று பிரிவுகளின் தலைநகரங்களாக முறையே உன்னரசுகிரி (உகந்தைக்கு வடக்கே யுள்ள சன்னியாசி மலைப்பகுதி) மட்டக்களப்பு (வீரமுனைக்கு அருகில் அமைந்திருந்த பழைய மட்டக்களப்பு) மண்முனை என்பன விளங்கின.

---

1. இலங்கையிற் தொல்லியலாய்வுகளும் திராவிடக் கலாசாரமும் - பக்.151 திருமதி. ஜி.தனபாக்கியம் எம்.ஏ.
2. சோழர்களின் அரசியல் கலாசார வரலாறு பாகம் I - பக்.545 திரு.மா.பாலசுப்பிரமணியன் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.

சோழரது அரசப் பிரதிநிதியான கதிர்சுதன் தனக்கு உதவியாக ஏழு மந்திரிகளை நியமித்து மதபேதமின்றி ஆட்சிபுரிந்து வந்தான். இவனால் நியமிக்கப்பட்ட மந்திரிகள் யாவரும் குறுநில மன்னர்களுக்குரிய அதிகாரங்களையும் பெற்றிருந்தனர். இக்கால கட்டத்திலேயே (கி.பி.1017 - 1029) கஜினி முகமதுவின் இந்தியப் படையெடுப்பு நிகழ்ந்தது. இதனை வரலாறுகள் குறிப்பிடுகின்றன.

இப்படையெடுப்பின் காரணமாக வட இந்தியாவிலிருந்து மக்கள் அகதிகளாக வெளியேறினர். இவ்வாறு வெளியேறிய மக்களில் சிலர் படகுகள் மூலமாக வந்து தென்கிழக்கிலங்கைக் கரையை அடைந்தனர்.[3] கி.பி.1000-1027ம் ஆண்டு வரையும் கஜினி முகமது இந்தியா மீது பல தடவைகள் படையெடுத்துள்ளான் என்பதை அறிய முடிகின்றது. இவனது சோமநாதப் படையெடுப்பு கி.பி.1025ல் நடந்தது. இவ்வேளையில் கஜினி முகமதுவினால் ஏராளமான செல்வங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. இவனது படையெடுப்புக்களால் இந்தியக் குடியினர் சொல்லொண்ணாத் துன்பத்திற்குள்ளாயினர்.[4]

இக்காலத்திலேயே வட இந்தியாவில் அகதிகளாக்கப்பட்ட மக்களிற் சிலர் மூன்று படகுகள் மூலமாகத் தென்கிழக்கிலங்கைக் கரையை அடைந்தனரெனலாம். இவ்வாறு அகதிகளாக வந்தவர்களை இப்பிரதேசத்தை ஆட்சி புரிந்து வந்தவனாகிய கதிர்சுதன் தென்கிழக்கிலங்கையில் குடியேற்றினான். இவர்கள் வந்திறங்கிய துறைமுகம் கண்டுமுனை ஆகும்.[5]

இலங்கையில் சோழரது ஆட்சி நிலவியிருந்த இக்காலத்தில் தென்கிழக்கிலங்கைத் துறைமுகங்கள் பெரிதும் சிறப்புற்றிருந்தன. சோழ நாட்டுக்கும் இப்பிரதேசத்திற்கும் இடையே வாணிபம், போக்குவரத்து என்பன நடைபெற்று வந்தன.[6]தமிழும் சைவமும் செழித்திருந்த இக்காலத்தில் சைவசமயம் அரச ஆதரவைப் பெற்று வந்ததும் குறிப்பிடத்தக்கதாகும். தமிழரது குடியேற்றங்களும் அதிகரித்திருந்தன.

3. மட்டக்களப்பு மான்மியம் - பக்.47 பதிப்பாசிரியர். எப்.எக்ஸி.நடராசா - 1962
4. இந்திய வரலாறு - பக்.349, 351 ஆர்.சத்தியநாதய்யர் - வரலாற்று விரிவுரையாளர் டி பாலசுப்பிரமணியன் - 1958
5. இந்த இடம் தற்காலம் கல்முனை என அழைக்கப்படுகின்றது.
6. மட்டக்களப்புத் தமிழகம் - பக்.402 பண்டிதர் வி.சி.கந்தையா - 1964



## கி.பி.1029 - 1070 வரை சிங்கள மன்னர்களின் கிளர்ச்சியும் இலங்கை அரசியல் நிலையும்.

கி.பி.1029ல் விக்கிரமபாகு என்ற சிங்களக் கிளர்ச்சியாளன் உறுகுணையின் சில பகுதிகளைக் கைப்பற்றித் தானே மன்னன் எனக் கதிர்காமத்தில் முடிசூடிக் கொண்டான். இவன் ஐந்தாம் மகிந்தனின் மகனாவான். கி.பி.1041ம் ஆண்டு வரையும் சிங்கள மன்னனாக இவன் தென்னிலங்கையில் ஆட்சிபுரிந்தான். இவனுக்குப் பின் முறையே மகாலனகீர்த்தி (1041-1044) விக்கிரமபாண்டியன் (1044-1047) ஜகதிபாலன் (கி.பி.1047-1057) ஆகியோர் உறுகுணையின் தென்பகுதியிலிருந்து ஆட்சி புரிந்தனர். இக்காலத்தில் தென்கிழக்கிலங்கையின் தெற்கு எல்லை உகந்தை வரை பரந்திருந்தது.

இக்காலத்தில் சோழப்பேரரசனாகவிருந்த ராஜாதிராஜன் தென்னிலங்கைச் சிங்கள அரசின் மீது படையெடுத்து ஜகதிபாலனைக் கொன்று அவன் மனைவியையும் மகள் லீலாவதியையும் கைது செய்து தஞ்சைக்குக் கொண்டு சென்றான்.[7] இக்காலங்களில் உறுகுணைப் பிரதேசம் அமைதியின்றி இருந்து வந்தது. இது வரலாற்று உண்மையாகும். இதன் பின்னர் பராக்கிரம பாண்டியன் என்பவன் ஆட்சிபுரிந்து வரும் வேளையில் இவன் சோழரின் வாளுக்கு இரையாகி மடிந்தான்.

இவனைத் தொடர்ந்து லோகேஸ்வரன் என்ற சிங்களப் படைத்தலைவன் கதிர்காமத்திலிருந்து தென்னிலங்கையை ஆட்சிபுரிந்து வந்தான்.[8] இக்காலத்தில் தென்கிழக்கிலங்கையை சோழரது பிரதிநிதியே ஆட்சிபுரிந்து வந்தான். லோகேஸ்வரனுக்குப் பின் இரண்டாம் இராஜேந்திரனின் ஆட்சிக்காலத்தில் முதலாம் விஜயபாகு என்பவன் கதிர்காமத்தில் முடிசூடிக்கொண்டான்.

கி.பி.1055ல் தன்னை மன்னன் என்று பிரகடனப்படுத்திய முதலாம் விஜயபாகு சுயராஜ்யம் ஒன்றை அமைக்கும் பொருட்டு முயற்சிகளை மேற்கொண்டான். இதனையறிந்த சோழர்படை கதிர்காமத்தை நோக்கிப் படையெடுப் பொன்றை மேற்கொண்டது. இப்படையெடுப்பு தென்கிழக்கிலங்கையூடாக நிகழ்ந்தது.

7. Colas - Page.253 by K.Nelakandasastry
8. பண்டைய ஈழம் I - பக்.250 திரு.வே.க.நடராசா
9. சோழர்களின் அரசியல் கலாசார வரலாறுI- பக்.548 மா.பாலசுப்பிரமணியன்
10. சோழர் வரலாறு - பக்.317 டாக்டர் கே.கே.பிள்ளை

இதனையறிந்த முதலாம் விஜயபாகு கதிர்காமத்தை விட்டகன்று பின்பு மீண்டும் தனது அதிகாரத்தை நிலை நிறுத்திக்கொண்டான். கி.பி.1058ல் விஜயபாகு தனது இடைவிடாத முயற்சியினால் உறுகுணையின் பெரும் பகுதிகளைத் தனது அதிகாரத்தின் கீழ் கொண்டுவந்தான்.[9] இவன் தென்னிலங்கையில் முடிசூடிக் கொண்ட போது இவனுக்கு வயது பதினெட்டு என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.[10]

கி.பி.1063ல் சோழப்பேரரசனான வீரராசேந்திரன் முதலாம் விஜயபாகுவுக்கு எதிராகப் பெரும் போர் ஒன்றைத் தொடுத்தான். விஜயபாகுவின் மனைவி சிறைப் பிடிக்கப்பட்டாள். இதன் பின்னர் விஜயபாகு லகுகலையிலுள்ள பலட்டுபான (மகுல் மகாவிகாரைக்கு அருகில்) என்ற குன்றுத் தொடரில் காப்பரண் ஒன்றை அமைத்துக் கொண்டான். கி.பி.1067ம் ஆண்டளவில் விஜயபாகு தனது படை பலத்தைப் பெருக்கிச் சோழருக்கெதிரான தனது இறுதிப் படையெடுப்பை நடத்தினான்.

வீரராசேந்திரன் காலத்தில் நடந்த இப்படையெடுப்பு மாகமையிலிருந்து ஆரம்பித்து இருவழிகளினூடாக நடைபெற்றது. ஒரு படைப்பிரிவு கிழக்குக் கரை மாநிலத்தினூடாகச் சென்று சாகாமத்திலிருந்த படைமுகாமைத் தாக்கி மகாவலி கங்கையைச் சென்றடைந்தது.[11] பின்னர் அப்படை விஜிதபுரத்தை அடைந்தது. பொலநறுவை வீழ்ச்சியடைந்தது. கி.ப.1070ல் சோழ மன்னனான அதிராசேந்திரனின் திறமையின்மையும் இவனுக்குப் பின் மன்னனான முதற்குலோத்துங்கனுக்கு ஏற்பட்ட அரசியல் நெருக்கடியும் முதலாம் விஜயபாகுவுக்குச் சாதகமாக அமைந்தன எனலாம்.

## கி.பி.1029 - 1070 வரையும் தென்கிழக்கிலங்கை

இக்காலகட்டத்தில் தென்கிழக்கிலங்கையின் அரசியல் நிலைபற்றி நோக்கு மிடத்து இப்பிரதேசம் தொடர்ந்து சோழரது அதிகாரத்தின் கீழிருந்துவந்தது என்பதை அறியமுடிகின்றது. கி.பி.1017ம் ஆண்டு தொடக்கம் கி.பி.1029ம்ஆண்டு வரையும் மாணிக்க கங்கையைத் தனது தெற்கு எல்லையாகக் கொண்டிருந்த இப்பிரதேசம் கி.பி.1029ல் சிங்கள மன்னர்களின் ஆதிக்கம் தென்னிலங்கையில் ஆரம்பமானதைத் தொடர்ந்து உகந்தையைத் தெற்கெல்லையாகக் கொண்டிருந்தது.

11. A Concise History of Ceylon - Page 191 C.W.Nicholas & S.Paranavidana - Colombo - 1961



சோழரது அதிகாரத்தை ஏற்றிருந்த சிற்றரசன் தொடர்ந்து இப்பிரதேசத்தைப் பரிபாலித்து வந்தான். முதலாம் இராஜேந்திரனின் ஆட்சிக்காலத்தில் இப்பிரதேசத்தை ஆட்சிபுரிந்து வந்த கதிர்சுதன் என்ற சிற்றரசனைத் தொடர்ந்து மதிசுதன் என்பவன் சிற்றரசனாக ஆட்சிபுரிந்து வந்தான். இக்காலகட்டத்தில் (1029-1067) சோழரது படைகள் பலதடவைகள் தென்கிழக்கிலங்கையினூடாக கதிர்காமத்திலிருந்த சிங்கள அரசின் மீது படையெடுத்துச் சென்றதும் வரலாற்றுண்மையாகும்.

தென்னிலங்கையில் தமக்கெனத்தனியான அரசொன்றை நிறுவி ஆட்சி புரிந்து வந்த சிங்களமன்னர்கள் அவ்வப்போது சோழருக்கெதிரான தங்கள் கிளர்ச்சி களை நடத்தி வந்த இக்காலத்தில் சோழர்கள் தங்களது ஆட்சி நிலை பெற்றிருந்த தென்கிழக்கிலங்கையில் தங்கள் படைப் பிரிவுகளைப் பல இடங்களில் நிறுத்தி வைத்திருந்தனர். சோழரது பெரிய இராணுவ முகாமொன்று சாகாமத்தில் இருந்தது.

இக்காலத்தில் தென்கிழக்கிலங்கையில் புகழ்பெற்றிருந்த நகரங்களிலொன்றாக சாகாமம் விளங்கியது. இந்நகரினைச் சூழவுள்ள இடங்களில் மக்கள் குடியிருப்புக்கள் (கிராமங்கள்) நிறைந்திருந்தன. தமிழர்கள் பெருமளவில் வாழ்ந்து வந்த இப்பகுதிகளில் தமிழரிடையே பௌத்தமும் நிலவியிருந்தது.இதனை இப்பிரதேசத்தில் இன்று காணப்படும் தொல்லியல் சான்றுகள் உறுதி செய்கின்றன. முதலாம் விஜயபாகு சோழருக்கெதிரான தனது இறுதிப்படையெடுப்பை மேற்கொண்ட போது சாகாமத்திலிருந்த முகாம்களும் தாக்கப்பட்டன.[12]

இதன் வாயிலாக கி.பி.1067 வரையும் தென்கிழக்கிலங்கையில் சோழரது ஆட்சியே நிலைத்திருந்ததென்பது தெளிவு. சோழரது ஆட்சி நிலவியிருந்த இக்காலத்தில் ஆட்சிபுரிந்த சிற்றரசர்களிலொருவனான மதிசுதன் மதபேதமின்றி ஆட்சிபுரிந்து வந்தான். சைவம், பௌத்தம் ஆகிய இரு மதங்களையும் ஆதரித்தான். அக்காலத்தில் பாழடைந்திருந்த சைவ ஆலயங்களிலொன்றான மண்டூர் முருகன் ஆலயத்தை மதிசுதன் புதிதாக நிர்மாணித்தான். அத்துடன் இவ்வாலயத்திற்கு நெற்காணிகள் வழங்கி நீர்ப்பாசன வசதிகளையும் செய்து கொடுத்தான்.[13]

12. பண்டைய ஈழம் - பாகம் II- பக்.253, 254 வே.க.நடராசா
A Concise History of Ceylon - Page 191 C.W.Nicholas & S.Paranavidana Colombo - 1961
13. மட்டக்களப்பு மான்மியம் - பக். 49 பதிப்பாசிரியர் எப்.எக்ஸி.நடராசா

இப்போதுள்ள போரைதீவுப் பகுதியை அபிவிருத்தி செய்த மதிசுதன் இப்பகுதியில் தமிழ் மக்களையும் பெருமளவில் குடியேற்றியதாக அறிய முடிகின்றது. இதே காலத்தில் சோழரும் தென்கிழக்கிலங்கையின் அபிவிருத்தியில் அதிக அக்கறை செலுத்தி வந்தனர். குறிப்பாகத் தமிழும் சைவமும் வளர்ச்சியடைய வேண்டிப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.தென்கிழக்கிலங்கையில் புகழ் பெற்ற ஆலயங்களாக விளங்கிவந்த கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம்,திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயம் என்பன சோழர்களால் திருப்பணிகள் செய்யப்பட்டன.

இதேபோன்று பௌத்தமதத்திற்கும் சோழர்கள் தங்கள் ஆதரவினை வழங்கினர். இலங்கையில் சோழர்கள் ஆட்சிபுரிந்ததின் விளைவாகத் தென்கிழக்கிலங்கையில் வாழ்ந்து வந்த தமிழர்கள் தமது தனித்துவத்தைப் பேணுவதற்குப் பெரிதும் உதவியது. நீலாவணை, சத்துருக்கொண்டான், புளியந்தீவு, வவுணதீவு போன்ற கிராமங்கள், இக்காலத்தில் உருவாகி வளர்ச்சியடைந்த கிராமங்களில் சிலவாகும்.[14]

இக்காலத்தில் கண்டுமுனை என்ற பெயருடன் விளங்கிவந்த துறைமுகமே பிற்காலத்தில் கல்லேறுமுனைத்துறை எனப்பெயர் வழங்கித் தற்காலம் கல்முனைத் துறை என வழங்குகின்றது. இத்துறையைச் சேர்ந்த பகுதி கல்முனை என்ற பெயருடன் சிறியதொரு பட்டினமாக விளங்குகின்றது. இத்துறைமுகம் சோழநாட்டுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்த அக்காலத்தில் இதனைச் சார்ந்த பகுதிகளில் தனிப்பெரும்பான்மையினராக வாழ்ந்து வந்தவர்கள் தமிழர்களேயாவர்.

14. மட்டக்களப்புத் தமிழகம் - பக்.414 பண்டிதர் வி.சி.கந்தையா - 1964



## பொலநறுவை ஆட்சியில் தமிழும் சைவமும்

ஈழத்தில் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டளவில் முதலாம் சேனன் என்ற சிங்கள மன்னன் காலம் தொட்டுச் சிங்கள மன்னர்கள் பொலநறுவையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்து வந்தனர். அக்காலம் தொடக்கம் சோழர்கள் இலங்கையைக் கைப்பற்றும் காலம் வரையில் (கி.பி.983) ஈழத்திற்கும் பாண்டிய நாட்டுக்குமிடையில் நெருங்கிய அரசியல், சமய, கலாசார உறவுகள் நிலவியிருந்தன. அனுரதபுரத்திலும் பொலநறுவையிலும் தமிழர்கள் பெருமளவில் வாழ்ந்து வந்தனர். அக்கால கட்டத்தில் பொலநறுவையிலிருந்து ஆட்சிபுரிந்து வந்த சிங்கள மன்னர்கள் பாண்டியருடன் நல்லுறவுகள் கொண்டிருந்ததுடன் தமிழையும் சைவத்தையும் ஆதரித்தும் வந்தன.

கி.பி.பத்தாம் நூற்றாண்டில் சோழர்கள் இலங்கையைக் கைப்பற்றிப் பொலநறுவையைத் தலைநகராகக் கொண்டு இதற்குச் சனநாதபுரம் என்று பெயரிட்டு ஆட்சிபுரிந்து வந்தனர். அக்காலத்தில் (கி.பி.983-1070) இலங்கை முழுவதிலும் தமிழே ஆட்சிமொழியாக விளங்கியது. அரசமதமாக சைவம் மிளிர்ந்தது. பல இடங்களிலும் தமிழ்ச் சாசனங்கள் பொறிக்கப்பட்டன. தமிழே உத்தியோகமொழியாக விளங்கியிருந்த அக்காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆட்சிபுரிந்த தமிழ்ச் சிற்றரசர்களும் சோழப்பிரதிநிதிகளும் தமிழையும் சைவத்தையும் வளர்த்து வந்தனர். சோழரது ஆட்சிக்குப் பின்னர் இலங்கையில் சிங்கள ஆதிபத்தியத்தினை மீண்டும் மேம்படுத்திப் பொலநறுவையிலிருந்து ஆட்சிபுரிந்த முதலாம் விஜயபாகு மன்னனும் இவனுக்குப் பின் ஆட்சி புரிந்த அரசர்களும் தமிழ்மொழிக்கு ஆதரவளித்து வந்தனர். இதனை இவர்களது தமிழ்ச்சாசனங்கள் உறுதிசெய்கின்றன.

முதலாம் விஜயபாகு (கி.பி.1070 - 1110) தனது ஆட்சிக்காலத்தில் சிங்கள மொழியுடன் தமிழையும் ஆதரித்து வந்தான் என்பதற்கு இவனது தமிழ்ப் பொறிப்புக்கள் சான்றுகளாக விளங்குகின்றன. அக்காலத்தில் அரசாங்க அலுவல்கள் தமிழ்மொழியிலும் நடைபெற்று வந்துள்ளதைப் பணகடுவையிலுள்ள இவனது தமிழ்க் கல்வெட்டு உறுதி செய்கின்றது.[1] இக்கல்வெட்டு தமிழ் எழுதுநர்களின் பதிவேடு ஒன்றைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. ஆதலால் நிர்வாகத் துறையில் தமிழ் எழுதுனர்களும் பணிபுரிந்து வந்தனர் என்பது தெளிவாகின்றது. முதலாம் விஜயபாகு தனது சேனையில் 'வேலைக்காரப்படை' என்ற தமிழ்ப்படைப் பிரிவு ஒன்றை வைத்திருந்தான். தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான இப்படைப் பிரிவினிடம் புனித பற்சின்னக் கோயிலைப் பாதுகாக்கும் பொறுப்பையும் இவன் ஒப்படைத்திருந்தான். இதனைப் பொலநறுவையிலுள்ள வேலைக்கார சாசனம் என்ற தமிழ்க் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இக்கல்வெட்டில் பற்சின்னக் கோயிலைப் பாதுகாப்பதற்குரிய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டுள்ளது.[2]

இலங்கையில் ஆட்சிபுரிந்த சிறந்த மன்னர்களுள் ஒருவனான முதலாம் விஜயபாகு சோழரது ஆட்சி ஈழத்தில் நிலைத்திருந்த காலத்தில் சோழருக்கெதிரான கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்த போதும் ஈழத்தமிழர்கள் மீது வெறுப்புக் காட்டவில்லை என்பது வரலாற்றுண்மையாகும்.[2A]. இதேபோன்று இவன் தனது ஆட்சிக்காலத்திலும் (கி.பி.1070-1110) இனபேதமின்றி தமிழர்களை ஆதரித்து வந்தான். இவனது காலத்தில் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் சைவமும் தமிழும் செழித்திருந்தன. இதற்குப் போதிய சான்றுகளுண்டு. இம்மன்னன் சைவ சமயத்தையும் பிராமணர்களையும் ஆதரித்து வந்தான் எனவும் இவனது கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. முதலாம் விஜயபாகுவின் ஆட்சி பற்றி பரணவிதான அவர்கள் குறிப்பிடுகையில் இவன் சோழர் காலச் சமயஸ்தானங்கள் தொடர்ந்து இயங்க அனுமதித்ததோடு தனது காலத்தில் அமைக்கப்பட்ட சைவக் கோயில்களுக்கும் தனது ஆதரவை வழங்கினான் எனக் கூறியுள்ளார். (Paranavitans 1960:563 )

1. பண்டைய ஈழம் : பாகம் 2 - பக்.339 வே.க.நடராசா - தை 1970
2. இலங்கையின் சுருக்க வரலாறு - பக்.53 எச்.டபிள்யு.கொட்றின்றன் - 1960
2.A இலங்கையில் திராவிடக்கட்டிடக்கலை - பக்.25, 26 கா.இந்திரபால - 1970
"சோழப்படைகளை இலங்கையிலிருந்து அகற்றிப் பொலநறுவையில் சிங்கள வம்சத்தின் ஆட்சியை ஆரம்பித்து வைத்த முதலாவது விஜயபாகு சோழருடைய பகைவனே யொழிய தமிழரையோ இந்துமதத்தையோ எதிர்த்தவனல்லன்" இவ்வாறு திரு.கா. இந்திரபால குறிப்பிடுகின்றார்.



இதற்குச் சான்றாக கந்தளாயில் இவன் மேற்கொண்ட சமய நடவடிக்கைகளைக் காட்டலாம். கந்தளாயிலுள்ள கோயில்களுக்கு அளிக்கப்பட்ட தானத்தை பழமோட்டைக் கலவெட்டு குறிப்பிடுகின்றது.[3]

முதலாம் விஜயபாகுவின் காலத்தில் பொலநறுவை அரண்மனையில் கூட சைவத்தின் செல்வாக்கு மிகுந்திருந்தது. விஜயபாகுவின் இரண்டாவது இராணியும் கலிங்க குலத்தவளுமான திரிலோகசுந்தரி என்பவளின் சைவசமயச் செயற்பாடுகளே இதற்கான காரணமாகும். கலிங்க குலத்து இளவரசியான திரிலோகசுந்தரி மிகவும் செல்வாக்குடன் விளங்கியவள். இவளது சைவசமய நடவடிக்கைகள் பௌத்த குருமாரையே சீற்றங்கொள்ள வைத்ததாக அறியமுடிகின்றது. விஜயபாகு தனது ஆட்சிக்காலத்தில் தமிழகத்துடனும் நெருங்கிய உறவினைக் கொண்டிருக்க விரும்பினான். இதனைக் கருத்திற்கொண்டு தனது உடன் பிறந்த தங்கையான மித்தா என்பவளைப் பாண்டிய இளவரசன் ஒருவனுக்கு மணம் முடித்துக் கொடுத்தான். மித்தாவுக்குப் பிறந்த குமாரர்களே மானாபரணன், கீர்த்திஸ்ரீமேவன், ஸ்ரீவல்லபன் ஆகியோர். தந்தை வழியில் இவர்கள் தமிழர்களாவர். சோழருடன் பகைமை கொண்டிருந்த விஜயபாகு தனது இறுதிக்காலத்தில் சோழமன்னன் குலோத்துங்கனுடனும் நட்பாக விருந்ததுடன் தனது மருமகனான இளவரசன் மானாபரணனை (மித்தாவின் குமாரன்) குலோத்துங்கனது மகளான 'சுத்தமல்லி'யாருக்கு மணம் முடித்துக் கொடுத்தான்.[4] இதன் வாயிலாகத் தமிழகத்துடன் கொண்டிருந்த உறவினைப் பலப்படுத்திக்கொண்டான்.

முதலாம் விஜயபாகுவுக்குப் பின்னர் ஆட்சிபுரிந்த விஜயபாகு மன்னனின் மகனான இரண்டாம் விக்கிரமபாகுவும் (கி.பி.1111-1132) இரண்டாம் கஜபாகுவும் (கி.பி.1132-1153) தமிழை மட்டுமே அரசகரும மொழியாகக் கொண்டிருந்தனர். அவர்களது பதிவேடுகளில் பெரும்பாலானவை தமிழ் மொழியிலேயே பேணப்பட்டுள்ளன.[5] தாய் வழியில் கலிங்க குலத்தவர்களான விக்கிரமபாகுவும், இவனது மகனான இரண்டாம் கஜயாகுவும் சைவசமயத்தவர்களாக வாழ்ந்து வந்ததுடன் கலிங்கரின் உதவியுடனேயே ஆட்சியும் புரிந்து வந்தனர். இவர்கள்

3. சிந்தனை தொகுதிII இதழ்II - 1984 : ஈழமும் இந்துமதமும் பொலநறுவைக் காலம் (கட்டுரை) கலாநிதி.சி.க.சிற்றம்பலம்.
4. சோழர் வரலாறு - பக்.318, 319 டாக்டர்.கே.கே.பிள்ளை - 1977
5. தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயர் ஆய்வும் - பக்.79 கதிர் தணிகாசலம்-1977

இருவரும் சைவர்கள் ஆதலால் சிங்கள அரசர்களுக்கு நடைபெறும் பட்டாபிஷேக விழாகூட இவர்களுக்கு நடத்தப்படவில்லை என்பதை அறியமுடிகின்றது.

ஈழவரலாற்றில் கலிங்கர் என்று குறிப்பிடப்படுமிடத்து அது தமிழ்ச் சைவ ரையே குறிப்பதாகும். இரண்டாவது விக்கிரமபாகு, இரண்டாவது கஜபாகு ஆகியோ ரது காலம் சைவசமய வளர்ச்சியில் முக்கிய காலமாகத் திகழ்ந்தது. விக்கிரமபாகு வின் சைவசமயப் பற்றினைக் 'காகம் பிலியாவைக்' கல்வெட்டு (E.Z.VIII:404-408) மிகச்சிறப்பான முறையில் குறிப்பிடுகின்றது. மேலும் இவன் சைவசமயத்திற்கு அளித்த ஆதரவைக் குருநாகல் மாவட்டத்திலுள்ள மாகல என்ற இடத்தில் கிடைத்த கல்வெட்டுக்கள் எடுத்துக்காட்டுகின்றன.[6] இரண்டாவது கஜபாகு மன்னனது கோணேஸ்வரத் திருப்பணிகளை கைலாசபுராணத்து திருநகர்ச் சருக்கம் சிறப்பித்துக் கூறுகின்றது. கோணேசர் கல்வெட்டிலும் இவனைப் பற்றிய பகுதிகள் உள்ளன. இவ்வாறு வரலாற்றுப் பேராசிரியர் சி.பத்மநாதன் குறிப்பிடுகின்றார்.

இரண்டாவது கஜபாகு முதலாவது பராக்கிரமபாகுவைத் தனது வாரிசாக ஏற்ற பின்னர் பொலநறுவையில் வசிப்பதற்குப் பதிலாக கந்தளாயில் (கங்கா தடாகவில்) வாழ விரும்பியதும் இவனது சைவசமய ஈடுபாட்டினை எடுத்துக் காட்டுகின்றது. இவ்வாறு சிறிமா கிருபாமுனை அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார். சூளவம்சம் கூட இவ்விடத்தில் இவன் சந்தோஷமாக வாழ்ந்தான் எனக் குறிக்கின்றது. (C.V.LXXI:1-2 ) எனினும் பேராசிரியர் பத்மநாதன் அவர்கள் இக்காரணத்தோடு ஈழத்தின் வட கிழக்கில் இக்காலத்தில் செல்வாக்குடன் விளங்கிய திராவிடக் குடிமக்கள் (தமிழர்கள்) இம்மன்னனுக்கும் இவன் தந்தைக்கும் அளித்த ஆதரவுமே இம்மன்னனைத் தனது இறுதிக் கால வாசஸ்தலமாக (தமிழர்கள் நிறைந்திருந்த) கந்தளாயைத் தேர்ந்தெடுக்க வைத்ததெனக் கருதுகின்றார். (S.Pathmanathan-1982)[7]

இரண்டாம் கஜபாகுவுக்குப் பின்னர் ஆட்சிபுரிந்த முதலாவது பராக்கிரமபாகு (கி.பி.1153 - 1186) தமிழ் மொழிக்கும் தக்க அந்தஸ்தினை வழங்கியிருந்தான். இதனை இவனது தமிழ்ச் சாசனங்கள் உறுதி செய்கின்றன. தமிழில் பொறிப்பித்த இவனது கல்வெட்டொன்று யாழ்ப்பாணம் நயினாதீவிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

6. சிந்தனை தொகுதிII இதழ்II - கலாநிதி சி.க.சிற்றம்பலம் - 1984
7. சிந்தனை தொகுதிII இதழ் II - கலாநிதி.சி.க.சிற்றம்பலம் - 1984
இலங்கையின் சுருக்க வரலாறு - பக்.55 எச்.டபிள்யு.கொடிறின்றன் - 1960



(206 of -1949) இலங்கை முழுவதையும் ஒரு குடையின் கீழ் ஆட்சிபுரிந்த முதலாவது பராக்கிரமபாகு ஊர்காவற்றுறைப் பகுதியில் நடந்த வணிகத்தை நெறிப்படுத்துவதற்காக அச்சாசனத்தைப் பொறிப்பித்துள்ளான்.[8] தமிழர்களுடன் நெருக்கமான உறவுகள் கொண்டிருந்த இவன் தமிழர்கள் மீது பெரு நம்பிக்கையும் வைத்திருந்தான் என அறியமுடிகின்றது.

இம்மன்னன், தமிழர்கள் சிலரையும் தனது படைப்பிரிவுகளில் தளபதிகளாக வைத்திருந்தான். முதலாம் பராக்கிரமபாகுவின் இரண்டாம் படைப்பிரிவில் ரக்கன் என்ற தமிழனே தளபதியாக விருந்தான். இவனால் மேற்கொள்ளப்பட்ட பர்மா மீதான படையெடுப்புக்கு ஆதித்தன் என்ற தமிழ் அதிகாரி தளபதியாகவிருந்தான் என அறியமுடிகின்றது.[9] முதலாம் விஜயபாகுவின் தங்கையான மித்தாவுக்கும் பாண்டிய இளவரசனான வி. பாண்டுராஜாவுக்கும் பிறந்த மானாபரணனின் மகனே முதலாம் பராக்கிரமபாகு. ஆதலால் தந்தை வழியில் இவன் தமிழனாவான். தமிழ் அரசன் மானாபரணனின் மகனான முதலாம் பராக்கிரமபாகு சைவ சம்பிரதாய நேர்த்திக்கடன்களின் விளைவாகப் பிறந்தவன் என்பதை மகாவம்சம் குறிப்பிடுகின்றது.

சிங்கள மக்களிடையே ஈடிணையற்ற தலைவனாக மதிக்கப்படுகின்ற முதலாம் பராக்கிரமபாகு பிக்குகளைக் கொண்டு பிரீத் ஓதுவித்ததோடு சைவசமய முறைப்படி பிராமணர்களைக் கொண்டு வேதம் ஓதுவித்துள்ளான். யாகங்களையும் செய்துள்ளான். இவ்வாறு வரலாற்றாசிரியர் லயனல் சரத் குறிப்பிடுகின்றார். (பூர்வீக இலங்கையில் தமிழ் - சிங்கள உறவுகள்) இவன் சைவசமயத்துக்கும் ஆதரவு நல்கியதைச் சூழவம்சம் குறிப்பிடுகின்றது. முதலாவது பாராக்கிரமபாகு பிராமணருக்கு தானம் கொடுத்ததோடு பிராமணர் பிராயச் சித்த சடங்குகளை மேற்கொள்வதற்கும் மந்திரங்களை ஓதுவதற்கும் முறையே கேம மண்டபத்தையும் அழகிய 'தரணிகாரா'வையும் நிர்மாணித்தான். பதின்மூன்று இந்துக்கோயில்களைப் புனருத்தாரணம் செய்தான். மேலும் உறுகுணையில் இருபத்திநாலு கோயில்களைப் புனரமைத்தான் இவ்வாறு சூளவம்சம் குறிப்பிடுகின்றது.[10]

முதலாவது பராக்கிரமபாகுவுக்குப் பின் ஆட்சிபுரிந்த கலிங்க குலத்து மன்னனான நிஸங்கமல்லன் (கி.பி.1187 - 1196) தமிழையும் தமிழர்களையும்

8. சாசனமும் தமிழும் - பக்.337 கலாநிதி.ஆ.வேலுப்பிள்ளை - 1971
9. பண்டைய ஈழம் (இரண்டாம் பாகம்) - பக்.290 வே.க.நடராசா - தை 1970
10. சிந்தனை தொகுதிII இதழ்II - கலாநிதி க.சிற்றம்பலம் - 1984

ஆதரித்து வந்தான். பண்டுவஸ்நுவர, பொலநறுவை, கந்தளாய் போன்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ள இவனது கல்வெட்டுக்கள் இதனை உறுதி செய்கின்றன. தமிழர்களுடன் நல்லுறவுகள் கொண்டிருந்த இவன் தமிழ்க் கலை நிகழ்வுகளிலும் தவறாது கலந்து கொண்டான். ஒரு சமயம் கந்தளாயிலிருந்த 'பார்வதி சத்திரத்தில்' நடந்த கலைவிழாவில் கலந்து கொண்டு அன்பளிப்புக்கள் வழங்கியதுடன் ஆடல், பாடல்களைப் பார்த்தும் கேட்டும் மகிழ்ந்தான் என வரலாற்று நூலொன்று குறிப்பிடுகின்றது. இவனது காலத்தில் இலங்கை வட , தென் என இரு பிரிவுகளைக் கொண்டிருந்தது.[11] இதனை இவனது கல்வெட்டொன்று குறிப்பிடுகின்றது.

கலிங்கனான நிஸங்கமல்லன் இந்து சமயத்தவனாவான். ஆதலால் இந்து மதத்திற்கும் இவன் ஆதரவளித்து வந்தான். நவக்கிரக சாந்தி போன்ற இந்து மதக்கிரியைகளிலும் கலந்து கொண்டான்.[12] இந்துவாகிய இவனது தாய், தந்தையர் பெயர்கள் முறையே பார்வதி, ஜெயகோப ஆகும். நிஸங்கமல்லனின் இந்துமத நடவடிக்கைகள் பற்றிப் பொலநறுவை, கந்தளாய் ஆகிய இடங்களில் கண்டெடுக் கப்பட்ட கல்வெட்டுக்கள் கூறுகின்றன. பொலநறுவையிலுள்ள முதலாவது சிவாலயத்தில் கிடைத்துள்ள கல்வெட்டில் (E.Z.11:146 -148 ) இச்சிவாலயத்தில் தான் நடத்திய நவக்கிரக சாந்தியின் போது தன்னைத் தூய்மைப் படுத்துவதற்காகத் தூய்மைச் சடங்கு சார்ந்த ஸ்நானத்தில் ஈடுபட்டான் என்ற செய்தி காணப்படுகின்றது. நிஸங்கமல்லனுக்குப் பின் பொலநறுவை அரசில் குழப்பங்களும் அதிகாரப் போட்டிகளும் மலிந்திருந்தன.

கி.பி.1215ம் ஆண்டு வரை இந்நிலை நீடித்திருந்தது. அக்காலத்தில் தமிழர்களான கலிங்கர், பாண்டியர், சோழர் ஆகியோரது செல்வாக்கே பொலநறுவை அரசியலில் நிலவியிருந்தது. தெற்கே பட்டிப்பளை (கல்லோயா) வரை பரந்திருந்த ராஜரட்டையில் தமிழர்களே பெரும்பான்மையினராக வாழ்ந்து வந்தனர். இவ்வேளையிலேயே கி.பி.1215ல் மாகன் என்ற தமிழ் மன்னன் தென்னிந்தியாவிலிருந்து படையெடுத்து வந்து ஆட்சியைக் கைப்பற்றினான்.[13] அக்காலத்தில் ராஜரட்டையில் வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் தமிழ் மன்னனான மாகனுக்குத் தங்கள் ஆதரவை நல்கினர்.

11. இலங்கைப் பேராசிரியர்களின் தமிழியற் பணிகள்-பேராசிரியர் அ.சண்முகதாஸ்-1998
12. பண்டைய ஈழம் (இரண்டாம் பாகம்) - பக்.319 -321 வே.க.நடராசா - தை 1970
13. மாகோன் வரலாறு - பக்.13 க.தங்கேஸ்வரி - 1995



# மூன்றாம் குலோத்துங்கனின் ஈழப் படையெடுப்பு

பண்டையக் காலத்தில் சோழர்கள் இலங்கை மீது பல தடவை படையெடுப்புக்கள் மேற்கொண்டு இலங்கையை வெற்றி கொண்டுள்ளதை வரலாறுகள் குறிப்பிடுகின்றன. கி.பி.பத்தாம் நூற்றாண்டளவில் (கி.பி.983) சோழமன்னன் முதலாம் இராசராசன் இலங்கை மீது படையெடுத்து வந்து இத்தீவின் பெரும்பகுதியைக் கைப்பற்றிப் பொலநறுவையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்தான். இம்மன்னனைத் தொடர்ந்து இவனது மகனான முதலாம் இராசேந்திரன் கி.பி.1017ல் இலங்கை மீது பெரும் படையெடுப்பொன்றை நடாத்தி ஈழம் முழுவதையும் கைப்பற்றி ஆட்சிபுரிந்தான். அக்காலத்தில் பொலநறுவை ஆட்சியில் தமிழரது செல்வாக்கே நிலைத்திருந்தது.

கி.பி.1070ல் முதலாம் விஜயபாகு என்ற சிங்கள மன்னன் சோழரிடமிருந்து ஈழத்தைக் கைப்பற்றிப் பொலநறுவையிலிருந்து ஆட்சிபுரிந்து வந்தான். இவனைத் தொடர்ந்து சிங்கள மன்னர்கள் பொலநறுவையிலிருந்து ஆட்சிபுரிந்து வந்தனர். ஆயினும் அக்காலத்தில் தமிழர்களான கலிங்கர், பாண்டியர் ஆகியோரது செல்வாக்கும் பொலநறுவை அரசியலில் இருந்து வந்ததெனலாம்.இதனை வரலாற் றாய்வுகள் உணர்த்துகின்றன. அத்துடன் தமிழும் சிறப்புடன் விளங்கியிருந்தது. இதனை அக்காலத்தில் பொறிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டுக்கள் தெளிவுறுத்து கின்றன. பொலநறுவையிலிருந்து ஆட்சிபுரிந்த கலிங்க குலத்து மன்னனான நிஸங்கமல்லன் (கி.பி.1187-1196) காலம் வரையும் இந்நிலை நீடித்திருந்தது.

கி.பி.ஆயிரத்தி இருநூறாம் ஆண்டளவில் பொலநறுவையில் அரசியல் போட்டிகள் சச்சரவுகள் என்பன மலிந்திருந்தன. கி.பி.1210ம் ஆண்டளவில் முதலாவது பராக்கிரமபாகுவின் மனைவியான லீலாவதி என்பவள் ஆட்சிபுரிந்து வந்த வேளையில் கலிங்க குலத்தவனான 'உலோகீஸ்வரன்' என்பவன். தமிழ்ப் படையின் துணையுடன் லீலாவதியிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றிப் பொலநறுவை

யிலிருந்து ஆட்சிபுரிந்து வந்தான்.[1] இவ்வேளையில் பொலநறுவை அரசில் கலிங்க குலத்தவருக்கும் பாண்டிய குலத்தவருக்குமிடையில் அரசியல் போட்டிகள் மிகுந்திருந்தன.[2] பௌத்த சிங்களவர்களுக்கும் பாண்டிய குலத்தவர்களுக்கும் இடையே நெருக்கமான உறவுகள் நிலவியிருந்தன.

இக்காலத்தில் இலங்கையில் சோழரது படையெடுப்பொன்று நிகழ்ந்துள்ளதை அறியமுடிகின்றது. இப்படையெடுப்பினைப் பற்றி இலங்கை வரலாற்று நூல்கள் பெரிதாகக் குறிப்பிடவில்லை என்றே கூறலாம். ஆயினும் சூளவம்சம் (அத்தியாயம் 80:43) இதனைக் குறிப்பிடுகின்றது.[3] கி.பி.1210ல் நடந்த இப்படையெடுப்பினைப் பற்றி வரலாற்றாய்வுகள் மூலமாக ஓரளவு அறியமுடிகின்றது. இதன் வாயிலாக இலங்கை இப்படையெடுப்பினால் பாதிக்கப்படவில்லையென்றே கூறலாம்.

இரண்டாம் உலோகீஸ்வரனின் (கி.பி.1210 - 1211) ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த இப்படையெடுப்பை மேற்கொண்ட சோழன், மூன்றாம் குலோத்துங்கள் (கி.பி.1163 - 1216) ஆவான். தனது மேலாதிக்கத்தை இலங்கையும் ஏற்கவேண்டும் என்பது சோழமன்னனின் நோக்கமாகும். இதனைக் கருத்தில் கொண்டே மூன்றாம் குலோத்துங்கன் இலங்கை மீது படையெடுத்தான். இவ்வேளையில் சோழ மன்னனுக்குக் குறிப்பிடத்தக்க எதிர்ப்புகள் இருக்காததால் இவன் தனது எண்ணத்தை எளிதில் நிறைவேற்றிக் கொண்டான் என அறியமுடிகின்றது. இவன் ஈழத்தின் மீது படையெடுத்து வந்து வெற்றியீட்டிய செய்தி, இவனது மெய்க்கீர்த்தியில் 'சிங்களவன் தலைமலையாற் தென்னீழங் , கொள்க வென்னத் திரைகடலை அடைக்க வென்ன' என்று கூறுவதிலிருந்து உணரலாம்.[4]

சோழமன்னன் மூன்றாம் குலோத்துங்கன் இலங்கை மீது படையெடுப்பதற்கு முன்னர் சேரநாட்டின் கருவூரிலும் பாண்டிய நாட்டின் மதுரை மீதும் படையெடுத்துச் சென்று அந்நாடுகளையும் பணியவைத்து 'வீராபிடேகம்' செய்து கொண்டான். இதனை வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன: குலோத்துங்கன் முதலில் சேர

1. இலங்கையின் சுருக்கவலாறு - பக்.62 எச்.டபிள்யுகொடிறின்றன் - 1960
   பண்டைய ஈழம் பாகம் II - பக்.324 வே.க.நடராசா.
2. இலங்கை வரலாற்றில் கலிங்கர் என்போர் தமிழ்ச்சைவர்களாகவே கணிக்கப்படு கின்றனர். பாண்டிய குலத்தவர்களும் தமிழ்ச் சைவர்களே யாவர்.
3. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - பக்.76. திருமதி.ஜி.தனபாக்கியம். பீ.ஏ.(சிறப்பு) (வடமொழி) எம்.ஏ.தொல்லியல் - 1993
4. திருமதி.ஜி.தனபாக்கியம் - பக்.76 - 1993



நாட்டின் மீது படையெடுத்து கருவூரைக் கைப்பற்றினான். அதனை சேரநாட்டு மன்னனுக்கு திரும்பவும் வழங்கினான். கருவூருக்கு முடிவழங்கு சோழபுரம் எனப் பெரிட்டான். சோழகேரளன் என்னும் பட்டத்துடன் வீராபிடேகமும் செய்து கொண்டான். இதன் பின்னர் பாண்டிய நாட்டின் தலைநகராம் மதுரையின் கண் வீராபிடேகம் செய்து கொள்ள விழைந்தான்.[5] ஆனால் பாண்டியன் சடையவர்மன் குலசேகரன் இதற்கு விரும்பவில்லை.

இதனையறிந்த குலோத்துங்கன், தான் அவனுக்கு முடிவழங்கியதையும் மறந்து தனக்கு எதிராகச் செயலாற்றுவதாக நினைத்துச் சினங்கொண்டு பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தான். இவர்களுக்கிடையில் இராமநாதபுரம், கழிக் கோட்டை என்ற ஊர்களில் நடந்த போர்களில் பாண்டியப் படைகள் முறியடிக்கப் பட்டன. குலசேகரன் மதுரையை விட்டோடினான். சோழ அரசன் குலோத்துங்கன் தனது படையுடன் மதுரை மாநகருள் புகுந்து அங்குள்ள பாண்டிய அரண்மனை யைக் கைப்பற்றித் தான் எண்ணியவாறு வீராபிடேகமும் செய்து கொண்டு 'சோழ பாண்டியன்' என்ற பட்டத்தையும் சூட்டிக்கொண்டான்.[6] மூன்றாம் குலோத்துங்கனின் திருவாதவூர் கல்வெட்டில் இவன் மதுரையில் புனைந்து கொண்ட வீரதேவன் என்ற பட்டம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாண்டிய நாட்டைக் கைப்பற்றிய மூன்றாம் குலோத்துங்கன் பாண்டிய நாட்டிற்கு 'சோழபாண்டியன் மண்டலம்' எனவும் மதுரை நகருக்கு 'முடித்தலை கொண்ட சோழபுரம்' எனவும் பெயரிட்டான். பாண்டியனது கொலு மண்டபத்திற்கு 'பாண்டியர் கம்பிரான்' என்று பெயரிட்டான். இவன் மதுரை நகரினைப் பேரழிவுக் குள்ளாக்கியதுடன் கழுதை ஏர் உழுவித்து கவடி விதைத்தமையும் மறத்தற்கரிய கொடுஞ்செயல்களாகும்.[7] சோழமன்னன் மூன்றாம் குலோத்துங்கன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து வந்து பாண்டிய நாட்டை பேரழிவுக்குள்ளாக்கியதையும் மதுரையைக் கைப்பற்றித் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்ததையும் 'மட்டக்களப்பு மான்மியம்' என்னும் நூலும் குறிப்பிடுகின்றது.[8]

கி.பி.1205ல் மூன்றாம் குலோத்துங்கன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து

5. பாண்டியர் வரலாறு பாகம் I - பக்.436 ம.இராசசேகர தங்கமணி - 1978 தமிழ் நாட்டு பாடநூல் நிறுவனம்
6. பாண்டியா வரலாறு-பக்.105,106 டாக்டர் கே.வீ.ராமன்-1977 தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம்
7. சோழர் வரலாறு - பக்.386 டாக்டர் கே.கே.பிள்ளை - 1977
8. மட்டக்களப்பு மான்மியம் - பக்.50 - பதிப்பாசிரியர் எப்.எக்ஸி.நடராசா - 1962

சடையவர்மன் குலசேகரனை (கி.பி.1190 -1217) வெற்றி கொண்டதையும் இதற்கு முன்னர் சேரநாட்டை (கருவூர்) வெற்றி கொண்டதையும் புதுக்கோட்டையிலுள்ள கல்வெட்டுக்கள் தெளிவுறுத்துகின்றன. இதற்கு முந்திய காலத்தில் பாண்டிய நாட்டின் அரசுரிமைப் போர் நடந்த வேளையில் சடையவர்மன் குலசேகரனின் தந்தையான விக்கிரமபாண்டியனுக்கு (கி.பி.1177- 1190) மூன்றாம் குலோத்துங்கன் உதவியுள்ளான். குலோத்துங்கனாலேயே விக்கிரம பாண்டியன் அரசுரிமை பெற்றான் என அறியமுடிகின்றது.

மூன்றாம் குலோத்துங்க சோழனின் ஆட்சியின் தொடக்கத்தில் முதலாவது சடையவர்மன் குலசேகரபாண்டினின் (கி.பி.1162-1177) மகனான விக்கிரமபாண்டியன் சோழமன்னன் மூன்றாம் குலோத்துங்கனிடம் தஞ்சம் புகுந்து தனக்குப் பாண்டிய நாட்டின் அரசுரிமை அளிக்கும்படி வேண்டிக்கொண்டான். இவ்வேளையில் பாண்டிய நாட்டை ஆண்டு வந்த வீரபாண்டியன் பாண்டிய அரசர்களுடைய வழக்கத்தைப் பின்பற்றி சோழமன்னன் செய்த நன்றியை மறந்து சிங்கள மன்னனுடன் சேர்ந்து கொண்டு குலோத்துங்க சோழனிடம் பணியாது நின்றான். வீரபாண்டியனுடைய செருக்கினை அடக்குவதற்கு இதுவே தருணமென்று உணர்ந்த குலோத்துங்கன் விக்கிரமபாண்டியனுக்கு உதவியாகச் சோழப் படையை அனுப்பிவைத்தான்.

சோழப் படைகளுக்கும் பாண்டியப் படைகளுக்குமிடையில் மதுரைக் கருகில் நடந்த சண்டையில் வீரபாண்டியன் தோல்வியுற்று உயிர்தப்பி சேரநாட்டிற்கு ஓடி ஒளித்தான். விக்கிரமபாண்டியன் அரசனானான். ஆயினும் தோல்வியுற்ற வீரபாண்டியன் சேரநாட்டு மன்னனுடைய உதவி பெற்று மீண்டும் தன்னுடைய ஆட்சியைப் பெறும் நோக்கத்தோடு மதுரை மீது படையெடுத்தான். விக்கிரம பாண்டியனைக் காப்பதற்காக இரண்டாவது முறையாக பாண்டிய நாட்டிற்கு சோழப் படைகளை குலோத்துங்கன் அனுப்ப வேண்டியிருந்தது. வீரபாண்டியனுக்கும் சோழப் படைகளுக்குமிடையில் நடந்த கடுஞ்சண்டையில் பாண்டியனுக்கு உதவியாக வந்த சேரநாட்டுப் படைகள் தோற்றோடின. இரண்டாவது தடவையாக தன்னுடைய அரசையும் சேனையையும் இழந்த வீரபாண்டியன் சேரமன்னனிடம் மீண்டும் அடைக்கலம் புகுந்தான்.

சேரமன்னன், வீரபாண்டியனையும் அழைத்துக் கொண்டு குலோத்துங்க சோழனிடம் தஞ்சம் புகுந்து தங்களைக் காப்பாற்றும் படி வேண்டினான். நல்ல உள்ளம் கொண்ட குலோத்துங்கன் அவர்களை மன்னித்து பாண்டிய நாட்டின்



ஒரு பகுதியை ஆட்சி புரியுமாறு வீரபாண்டியனுக்கு ஆணையிட்டான்.[9] குலோத்துங்கனால் அரசுரிமை பெற்ற விக்கிரம பாண்டியன் கி.பி.1190ம்ஆண்டு வரை பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்தான். இவ்வாறு குலசேகரனது தந்தையான விக்கிரமபாண்டியனுக்கு தான் உதவிகள் பல புரிந்து நாடும் அரசும் தந்து, உள்நாட்டுக் குழப்பத்தினை ஒழித்து, அமைதியும் நல்லாட்சியும் நிலவ வழி வகுத்ததினை மறந்து, நன்றி கொன்று தன்னுடன் மாறுபட்டுள்ள குலசேகரனைப் பழிவாங்கவே குலோத்துங்கன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தான் [10] என அறியமுடிகின்றது.

பாண்டிய நாட்டைக் கைப்பற்றிய மூன்றாம் குலோத்துங்கன் பாண்டிய நாட்டை சோழ நாட்டுடன் இணைத்துக் கொண்டான். சில ஆண்டுகள் கழித்து அதனைக் குலசேகரனுக்கே அளித்தான் எனத்தெரிகின்றது.[11] இவற்றின் வாயிலாக மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் சேர,பாண்டியர்கள் சோழமன்னனின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்தனர் எனத் தெரிகின்றது. இதேபோன்று ஈழத்து மன்னரும் தனது மேலாதிக்கத்தை ஏற்றுத் தனக்கு அடங்கியிருக்க வேண்டும் என்று மூன்றாம் குலோத்துங்கன் கருதினான். இதன் விளைவே இவன் இலங்கை மீது மேற்கொண்ட படையெடுப்பாகும். இப்படையெடுப்பின் மூலமாகத் தனது எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டான்.சோழமன்னனான மூன்றாம் குலோத்துங்கன் சேர, பாண்டிய, ஈழ மன்னர்களை வெற்றி கொண்ட செய்தியை திருக்களர்ச் செப்பேடும் குறிப்பிடுகின்றது.[12]

இரண்டாம் உலோகீஸ்வரன் (கி.பி.1210 - 1211) பொலநறுவையிலிருந்து ஆட்சி புரிந்த காலத்தில் மட்டக்களப்பை (அம்பாரையை உள்ளடக்கிய பண்டைய மட்டக்களப்பு) நாதன் என்ற சிற்றரசன் ஆட்சி புரிந்து வந்தான். இவ்வேளையில் சோழப் படையெடுப்பொன்று ஈழத்தில் இடம் பெற்றதாக மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுகின்றது [13] சோழநாட்டிலிருந்து மாந்தைத் துறையூடாகப் படையெடுத்து வந்த சோழமன்னன், மன்னார் (மண்ணாறு) முல்லைத்தீவு (முள்ளுத்தீவு) திருகோணமலை (கொட்டியனூர்) ஆகிய பிரதேசங்களில் அதிகாரம் செலுத்தி

9. தென்னிந்திய வரலாறு - பக்.99 டாக்டர் அ.கிருஷ்ணசாமி எம்.ஓ.எல்டி. பி.எச்டி-1977
10. மூன்றாம் குலோத்துங்கன் - பக்.47 வி.ஆர்.ஆர்.தீட்சிதர்
11. பாண்டியர் வரலாறு- பக்.105,106 டாக்டர் கே.வி.ராமன் (தொல்லியல் பேராசிரியர்)- 1977
12. மூன்றாம் குலோத்துங்கனின் 29ம்ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட திருக்களர்ச் செப்பேடு பட்டயம் திருபுவனச் சக்கரவர்த்திகள் மதுரையும் ஈழமுங், கருவூரும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய ஸ்ரீ குலோத்துங்க சோழதேவர்க்கு என்று தொடங்குகின்றது. (கல்லெழுத்துக் கலை - பக்.170 நடனகாசி நாதன் .எம்.ஏ. - 1989

வந்த தமிழ் சிற்றரசர்களைச் சந்தித்துத் தனது மேலாதிக்கத்தை ஏற்குமாறு அவர்களிடம் கூறினான். இச்சிற்றரசர்களும் சோழனின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டனர். இதன் பின்னர் மட்டக்களப்பு நகரை (வீரமுனைக்கு அருகாமையில் அமைந்திருந்தது) வந்தடைந்த சோழமன்னன் சிற்றரசனான நாதனைச் சந்தித்து தனது எண்ணத்தை அவனிடம் கூறினான். மட்டக்களப்பு சிற்றரசனான நாதனும் சோழனின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொள்வதாக அவனிடம் உறுதியளித்தான்.

இவ்வேளையில் ஈழமன்னன் உலோகீஸ்வரன் தென்னிலங்கையின் 'திசை மாறாமை' (மாகமை) நகரில் தங்கியிருந்தான். இதனையறிந்த சோழ மன்னன் தனது படைகளுடன் அந்நகர் சென்று உலோகீஸ்வரனைச் சந்தித்தான். ஈழ மன்னனும் சோழனை அன்புடன் வரவேற்று உபசரித்தான். இதனை 'மட்டக்களப்பு மான்மியம்' குறிப்பிடுகின்றது. இதன் வாயிலாக சோழ மன்னனின் கோரிக்கையை ஈழமன்னனான இரண்டாம் உலோகீஸ்வரனும் ஏற்றுக் கொண்டான் என்பது தெளிவாகின்றது.

பொலநறுவையிலிருந்து இரண்டாம் உலோகீஸ்வரனும் மட்டக்களப்பை (பண்டைய மட்டக்களப்பு மாவட்டம்) நாதன் என்ற சிற்றரசனும் ஆட்சி புரிந்த காலத்தில் இலங்கை மீது படையெடுத்து வந்த சோழமன்னன் குலசேகரன் என்பவனாவான் என மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுகின்றது. ஆயினும் அவ்வேளையில் ஈழத்தின் மீது படையெடுத்து வந்த சோழன் மூன்றாம் குலோத்துங்கனே ஆவான். இவனே மாகமை (திசைமாறாமை) சென்று மன்னன் உலோகீஸ்வரனைக் கண்டு விருந்துண்டு சென்றவனும் ஆவான் என்பதை வரலாற்றாய்வுகள் உறுதி செய்கின்றன.[14] மூன்றாம் குலோத்துங்கன் பெருந் தன்மை மிகுந்தவன். தன்னை அடைந்தவரை ஆதரிக்கும் தன்மையுடையவன். இதனை நூல்கள் குறிப்பிடுகின்றன.

சோழமன்னன் மூன்றாம் குலோத்துங்கள் (கி.பி1178 - 1211) காலத்திலேயே கவிச்சக்கரவர்த்தி கம்பரும் வாழ்ந்திருந்தார். இம்மன்னனது அவைப் புலவராக விருந்தவேளையில் கம்பர் தனது இராமாயண காவியத்தைப் பாடினார்.[15] கம்பரும் குலோத்துங்கனும் நெருங்கிய நண்பர்களாக வாழ்ந்து வந்தபோதும் கம்பரின் இறுதி முடிவானது குலோத்துங்கனாலே நிகழ்ந்ததென்பதைக் கம்பரின் தனிப்பாட லொன்று (வில்லம்பும் சொல்லம்பும் மேதகவே யானாலும்...) உறுதி செய்கின்றது.

13. மட்டக்களப்பு மான்மியம் - பக்.50 பதிப்பாசிரியர் எப்.எக்ஸி.நடராசா - 1962
14. மட்டக்களப்பு மான்மியம் - ஓர் ஆராய்ச்சி - பக்.76 திருமதி.ஜி.தனபாக்கியம் - 1993
15. தமிழக வரலாறு-பக்.122 டாக்டர் இராசமாணிக்கனார். எம்.ஏ.எல்.டி, எம்.ஓ.எல். பி.எச்டி



## கி.பி1505ல் இலங்கையில் நிலைத்திருந்த சுதந்திர அரசுகள்

இலங்கை வரலாற்றை நோக்குமிடத்து பண்டைக் காலம் தொடக்கம் இத்தீவில் பல சிறு சிறு இராச்சியங்கள் இருந்து வந்துள்ளன என்பதை அறிய முடிகின்றது. சிற்சில காலங்களில் இத்தீவை ஆட்சி புரிந்த மன்னர்களது ஆட்சி நாடு முழுவதிலும் நிலவியிருந்த போதும் இங்கு நிலைத்திருந்த மாகாண அரசுகள், சிற்றரசுகள் என்பனவற்றின் மீது இம்மன்னர்கள் தமது முழுமையான ஆதிக்கத்தை செலுத்த முடியாத நிலையிலேயே இருந்துள்ளனர். மாறாகப் பெயரளவில் இவர்களது மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்ட அரசுகளாகவே இங்கு காணப்பட்ட சிறிய இராச்சியங்கள் செயற்பட்டு வந்தன எனலாம். இது வரலாற்றுண்மையாகும். ஆங்கிலேயரது ஆட்சிக் காலம் வரை இந்நிலை நீடித்திருந்தது.

இலங்கைத் தீவின் வரலாறு விஜயன் காலத்துடன் ஆரம்பமாகின்றது என்று கொள்ளுமிடத்து இவனே வரலாற்று இலங்கையின் முதல் மன்னனாக விளங்குகின்றான் எனலாம். இவன் கி.மு.483 - 445 வரையும் இலங்கையில் ஆட்சி புரிந்தான் என்று வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. விஜயனது காலத்தில் இலங்கையில் பல சிறுசிறு இராச்சியங்கள் இருந்துள்ளன. இவற்றில் பிரதான அரசாக நாகதீவு என்ற அரசு இலங்கையின் வடபாகத்தில் விளங்கியது. மேலும் அக்காலத்தில் மண்டூர், திருக்கோவில் (நாகர்முனை), உகந்தை, புத்தளம், கொட்டியார், திஸ்ஸமாறகம் ஆகிய பிராந்தியங்களிலும் சிறு சிறு அரசுகள் இருந்துள்ளன. இதனைப் பழந்தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்றன.

இவ்வாறு விஜயனின் வருகைக்கு முன்னரும் பல அரசுகள் இலங்கையில் இருந்துள்ளன. இவையாவும் இலங்கையின் பூர்வீகக் குடியினரான திராவிடரது அரசுகளாகும். (நாகர், இயக்கர்) பண்டைய வரலாற்றில் திராவிடர் என்பது தமிழரையே குறிப்பதாகும். கி.மு. மூன்றம் நூற்றாண்டளவில் தேவநம்பியதீசன்

என்ற புகழ் பெற்ற மன்னன் காலத்தில் இலங்கைத் தீவானது ராசரட்டை, மாயரட்டை, உறுகுணரட்டை என மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டிருந்தது. அக்காலத்தில் நாடளாவிய ரீதியில் இலங்கையில் பல சிற்றரசுகள் காணப்பட்டன. இதனைப் பிராமிச் சாசனங்கள் உறுதி செய்கின்றன. இக்காலத்தில் குறிப்பாக அநுரபுரிக்கு வடக்கேயும் தெற்கேயும் பல சிற்றரசுகள் நிலைத்திருந்தன.

மேலும் அக்காலத்தில் தென்னிலங்கையில் கல்யாணி என்ற அரசும் உறுகுணையில் கதிர்காமம்,சந்தணகாமம் ஆகிய தமிழ் இராச்சியங்களும் இருந்துள்ளன.[1] மேலும் கிழக்கிலங்கையில் சேருவில, சோம ஆகிய இடங்களில் முறையே சிவ, அபய என்போரால் ஆட்சி செய்யப்பட்ட இரு சிற்றரசுகள் இருந்துள்ளன. இதனைப் பிராமிக் கல்வெட்டுக்கள் மூலமாக அறியமுடிகின்றது.[2] வட இலங்கை யாழ்குடாவில் ''நாகதீவு'' என்ற அரசும் உத்தரதேசத்தில் குறுநில அரசுகளும் நிலைத்திருந்தன. உத்தரதேசத்தில் முதன்மையானதொரு அரசாகப் பூநகரிப் பிரதேசம் விளங்கியது.[3] இவ்வாறு பண்டைக் காலந்தொட்டு இலங்கையில் பல அரசுகள் (ஆட்சிப்பிரிவு) இருந்து வந்துள்ளன என்பதை வரலாற்றாய்வுகள் தெளிவுறுத்துகின்றன.

கி.பி.பதினைந்தாம் நூற்றாண்டில் இலங்கையில் பல அரசுகள் நிலைத்திருந்தன. இவ்வேளையிலேயே போர்த்துக்கேயர் இலங்கையில் காலடி எடுத்து வைத்தனர். கி.பி.1505ம் ஆண்டு நவம்பர் மாதம் பதினைந்தாம் தேதியன்று இலங்கையில் காலடி எடுத்து வைத்தபோர்த்துக்கேயன் தொம் உலோரன்சோ த அல்மேடா என்பவனாவான். போர்த்துக்கேயர் இலங்கையில் கால்வைத்த வேளையில் மூன்று பெரிய அரசுகள் காணப்பட்டன. இவை முறையே கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் என்பனவாகும். இவை மூன்றும் தனியான பிரதேசங்களை ஆட்சி

1. மகாவம்சம் என்ற நூல் தேவநம்பியதீசன் காலத்தில் நடந்த புனித அரச மரக்கிளை நடும் வைபவத்தில் கலந்து கொண்ட பிராமணன் திவக்கா பற்றியும் கதிர்காமம், சந்தணகாமம் ஆகிய இடங்களில் ஆட்சி செய்த சிற்றரசர்கள் பற்றியும் கூறும். இவர்கள் தமிழர்களாவர். (ஈழத்து இந்து சமய வரலாறு பாகம் I-பக்.28. கலாநிதி. சி.க.சிற்றம்பலம் - 1996
2. Paranavitana.S : Early Brahmi Inscription - Colombo இச்சிற்றரசுகள் தமிழ்க் குறுநில மன்னர்களுடையவையாகும்
3. பூநகரியிற் கண்டெடுக்கப்பட்ட தமிழ்ப் பிராமிச் சாசனம் சங்க காலத்தைப் போன்று வேளீர் என்ற சிற்றரசன் ஆட்சி நிலவியிருந்ததை உறுதி செய்கின்றது. (பண்டைய ஈழத்தில் வேளீர் - புதிய சான்று தினமணி - 1-7-1990)



செய்து வந்தன. அத்துடன் ஒன்றை மற்றொன்று அழிக்கமுடியாததாகத் தம்மளவில் பலமுள்ள அரசுகளாகவும் விளங்கின. இதன் விளைவாக சமூக, அரசியல், பொருளாதார துறைகளில் இவைகளின் தனித்துவம் வளர்ச்சி கண்டதோடு பேணியும் பாதுகாக்கப்பட்டது எனலாம்.[4]

இம்மூன்று பெரிய அரசுகள் தவிர வன்னியர் என்ற தமிழ் அரசர்களால் பரிபாலிக்கப்பட்டு வந்த வன்னிச்சிற்றரசுகள் கிழக்கிலங்கையிலும் வன்னிப் பெரு நிலப்பரப்பிலும் நிலைத்திருந்தன.மேலும் குறுநில அரசுகளும் இருந்தன. அக்காலத் தில் கோட்டை இராச்சியத்தை எட்டாம் வீரபராக்கிரமபாகு (கி.பி.1484 - 1509) என்ற சிங்கள மன்னன் ஆட்சி புரிந்து வந்தான்.இவனது இராச்சியமானது வடக்கே கால ஓயா தொடக்கம் தெற்கே உடவளவை கங்கை வரை பரந்திருந்தது.மேற்கே கடலும் கிழக்கே மலை நாட்டையும் இது கொண்டிருந்தது. இவ்விராச்சியம் ஏழு கோறளை,நான்கு கோறளை, மூன்று கோறளை, றைகம, மாத்தறை என்ற சிறு மாகாணங்களாக (ஆட்சிப்பிரிவு) பிரிக்கப்பட்டிருந்தது.இதன் தலைநகராகக் கொழும்பி லிருந்து ஆறு மைல்களுக்கு அப்பாலுள்ள கோட்டை என்னுமிடம் விளங்கியது.[5]

கோட்டை இராச்சியம் செல்வத்திலும் அதிகாரத்திலும் சிறந்து விளங்கியது. இவ்விராச்சியத்தில் நடைபெற்று வந்த முக்கிய தொழில் வர்த்தகமாகும். இதனை முஸ்லீம்களே நடத்தி வந்தனர். இக்காலத்தில் கொழும்பு நகரம் கொலம்தோட்டை என்று அழைக்கப்பட்டது. அத்துடன் கப்பல்கள் தரித்துச் செல்வதற்கேற்ற துறையாக வும் கொழும்பு விளங்கியது. இங்கு பெரும்பாலும் முஸ்லீம் வியாபாரிகளே தங்கியிருந்து வியாபாரம் செய்வதில் ஈடுபட்டு வந்தனர். [6] அவர்கள் தொழுகை நடத்துவதற்கேற்ற மசூதியும் அவர்களது வழக்குகளை விசாரிக்கும் நீதி மன்றமும் இந்நகரத்தில் இருந்தன. இவர்கள் யானை, தேங்காய், பாக்கு, இரத்தினக்கற்கள், யானைத் தந்தம், கறுவா ஆகியவற்றை வாங்கி விற்பனை செய்தனர்.

இலங்கையின் வட பகுதியிலிருந்த யாழ்ப்பாண இராச்சியமானது யாழ்குடா நாடு அயலிலுள்ள தீவுகள் மன்னார் வரையுள்ள கடலோரப்பகுதி, முல்லைத்தீவு என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. இந்த இராச்சியத்தில் இந்து மதத்தவர்களான

4. யாழ்ப்பாண இராச்சியம் - பக்.132 பதிப்பாசிரியர் சி.க.சிற்றம்பலம் - 1992
5. இலங்கைச் சரித்திரமும் உலகச்சரித்திரமும்- பாகம் 2- பக்.2 மு.இளையதம்பி பீ.ஏ.1954
6. போர்த்துக்கேயர் வந்த காலத்தில் கொழும்பில் சில நூறு முஸ்லீம் குடிகளே இருந்தனர். (புதுமுறைச் சரித்திரம் பகுதி I - பக்.67 ஆ.சபாரெட்ணம் - 1968)

தமிழர்களே வாழ்ந்து வந்தனர். கி.பி.பதின்மூன்றாம் நூற்றாண்டளவில் தமிழரது ஆளுகை உன்னத நிலையை யெய்தியிருந்தது. கி.பி.1344ம் ஆண்டளவில் யாழ்ப்பாண மன்னர்கள் சிங்கள அரசர்களிடம் திறைபெற்று வந்தனர். போர்த்துக்கேயர் வந்த காலத்தில் (கி.பி.1505) இத்தமிழ் இராச்சியத்தை பரராசசேகரன் (கி.பி.1478 - 1519) ஆட்சி புரிந்து வந்தான். சுதந்திர அரசாக விளங்கிய இத்தமிழ் அரசின் தலைநகராக நல்லூர் விளங்கியது.[7] தமிழகத்துடன் நெருக்கமான உறவுகள் கொண்டிருந்த யாழ்ப்பாண அரசின் மன்னனான பரராசசேகரன் சோழ அரச வம்சத்து இராசலெட்சுமி என்பவளைத் தனது முதல் மனைவியாகக் கொண்டிருந்தான் என்பதையும் அறிய முடிகின்றது.

யாழ்ப்பாண இராச்சியத்தின் எல்லையில் மன்னாருக்கும் திருகோணமலைக்கும் இடையில் பரந்திருந்த வன்னிப் பிரதேசத்தை வன்னியர் என்ற சிற்றரசர்கள் ஆட்சி புரிந்து வந்தனர். அக்காலத்தில் (கி.பி.1505) வன்னிப் பிரதேசம் பதினெட்டுச் சிறுநாடுகளை உள்ளடக்கியிருந்தது. வன்னிச் சிற்றரசர்கள் சுதந்திரமுள்ள சிற்றரசர்களாகச் செயற்பட்டு வந்தனர். இதேபோன்று திருகோணமலையையும் வன்னியர்களே சிற்றரசர்களாக வீற்றிருந்து ஆட்சி புரிந்து வந்தனர். வன்னிச் சிற்றரசர்களது ஆளுகையின் கீழ் தமிழும் சைவமும் செழித்திருந்தன. வன்னியர் என்ற சிற்றிரசர்கள் தமிழ்ச் சைவர்களாக விளங்கியதே இதற்கான காரணமாகும்.

இவ்வேளையில் பண்டைய வன்னி நாட்டின் ஒரு பகுதியான புத்தளமும் தமிழ் வன்னிமைகளின் ஆட்சியின் கீழிருந்தது. இவர்கள் சுதந்திரமுள்ள சிற்றரசர்களாகப் புத்தளப் பிரதேசத்தைப் பரிபாலித்து வந்தனர். கோட்டை மன்னனான ஆறாம் பராக்கிரமபாகு (கி.பி.1412 - 1494) காலத்தில் இவர்கள் தம்மளவில் வலிமையுடையோராக விளங்கி வந்தனரெனலாம். இவர்களுடன் ஆறாம் பராக்கிரமபாகு மூன்று மாதங்கள் கடும்போர் புரிந்து இப்பிரதேசத்தில் தனது மேலாதிக்கத்தை நிலை நிறுத்தினான். ஆறாம் பராக்கிரமபாகுவின் மறைவையடுத்து புத்தள வன்னிமைகள் மீண்டும் சுதந்திரமுள்ள சிற்றரசர்களாகச் செயற்பட்டு வந்தனர். போர்த்துக்கேயர் இலங்கையில் காலடி எடுத்து வைத்தவேளையில் இவர்களது ஆட்சி செழித்திருந்ததுடன் தமிழும் சைவமும் புத்தளப் பகுதியில் நிலைத்திருந்தன எனலாம்.[8]

7. நம்முன்னோரளித்த அருஞ்செல்வம் பாகம் 2 - பக்.131 பேராசிரியர் எஸ்ஏ.பேக்மன் ஜீ.சி.மெண்டிஸ் - 1966



கண்டி இராச்சியத்தை விக்கிரமபாகு என்பவன் ஆட்சி புரிந்து வந்தான். இதன் தலைநகராகக் கம்பளை இருந்தது. இந்த இராச்சியம் உடுநுவரை, யாட்டிநுவரை, தும்பறை, ஹரிஸ்பத்துவ, கீவாகெத்தை ஆகிய மாகாணங்களை உள்ளடக்கியிருந்தது. மலைகளும் காடுகளும் நிறைந்திருந்த கண்டி இராச்சியத்தின் கீழ் பதுளை, யாளை, வெள்ளவாய, மாத்தளை, வெல்லசை ஆகிய சிற்றரசுகளும் இருந்தன. கோட்டை மன்னன் ஆறாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் (கி.பி.1412 - 1474) அவனது ஆட்சியின் கீழிருந்த 'கந்தஉடரட்டை' என்ற ஆட்சிப் பிரிவே செண்பகப் பெருமாள் என்ற ஆறாம் புவனேகபாகு கோட்டை இராச்சியத்தை ஆட்சி புரிந்த காலத்தில் (கி.பி.1474-1480) கோட்டை இராச்சியத்திலிருந்து விலகி விக்கரமபாகுவின் கீழ் தனியரசாக விளங்கியிருந்தது.

ஒரு சிறிய பிரதேசத்துடன் ஆரம்பிக்கப்பட்ட கண்டி இராச்சியம் காலகதியில் (கி.பி.1478ல்) மாத்தளைப் பகுதியையும் வளவைப் பகுதிக்கும் திருகோணமலைக்குமிடையில் உள்ள பிரதேசத்தையும் சுவீகரித்தக்கொண்டது.[9] இவ்வாறு கண்டி இராச்சியம் வளர்ச்சியுற்று வந்த காலத்திலேயே கி.பி.1505ல் போர்த்துக்கேயர் இலங்கையில் காலடி எடுத்துவைத்தனர்.இதற்குப் பிற்பட்ட காலத்திலேயே திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் நிலைத்திருந்த வன்னிச் சிற்றரசுகள் கண்டி இராச்சியத்தின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டன எனலாம்.

கண்டியரசானது தனியரசாகப் பலம் பெறாத அக்காலத்தில் கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு ,அம்பாறை மாவட்டங்களில் வன்னியர் என்ற சிற்றரசர்களது ஆட்சி சிறந்திருந்தது. இவர்கள் பளுகாமம், சம்மாந்துறை, சிங்காரபுரம் (அட்டப்பள்ளம்) பாணகை ஆகிய இடங்களிலிருந்து ஆட்சி புரிந்து வந்தனர். சைவத்தையும் தமிழையும் பாதுகாத்து வந்த இவர்கள் தம்மளவில் பலம் மிக்க சுதந்திர அரசர்களாக அதிகாரம் செலுத்தி வந்தனர்.[10] இது வரலாற்று உண்மையாகும். அக்காலத்தில் குறிப்பாக மட்டக்களப்பு வாவியின் தென் எல்லைப் பிரதேசமே மட்டக்களப்பு என்ற பெயரினைப் பெற்றிருந்தது. சம்மாந்துறை, வீரமுனை, வளத்தாப்பிட்டி, மல்லிகைத் தீவு, மல்வத்தை, மலுக்கம்பிட்டி ஆகிய இடங்களை உள்ளடக்கியிருந்த இப்பிரதேசத்தில் தமிழ் சைவர்கள் வாழ்ந்து வந்தனர். சம்மாந்துறை

8. புத்தளப் பகுதியிலிருந்த காரைதீவு கோயில், கற்பிட்டி நாச்சியம்மன் கோயில் போன்ற பழம்பெரும் கோயில்கள் பிற்காலத்தில் பறங்கிகளால் இடித்து அழிக்கப்பட்டன. (தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயர் ஆய்வும் - பக்.102 கதிர் தணிகாசலம்-1992
9. இலங்கைச் சரித்திரம் பாகம் I - பக்.2, 3 எஸ்.எவ்.டிசில்வா - பதிப்பு 1952

பத்திரகாளி அம்மன் ஆலயம் , வீரமுனை கண்ணகி அம்மன் ஆலயம், சிந்து யாத்திரைப் பிள்ளையார் ஆலயம் என்பன இப்பிரதேசத்தில் சிறப்புடன் விளங்கி வந்தன.

இப்பிரதேசத்தை அண்மித்திருந்த காரேறு மூதூர் (காரைதீவு) நிந்தவூர், அட்டப்பள்ளம் (சிங்காரபுரி) காளி ஓடை, செங்கற்படை, ஒலுவில், நாகமேடு, திராய்க்கேணி, மீனோடைக்கட்டு ஆகிய இடங்களில் தமிழர் நாகரீகம் நிலைத்திருந்ததுடன் சைவமும் செழித்திருந்தது. இவ்வேளையில் (கி.பி.1505) சிங்காரபுரி (அட்டப்பள்ளம்) என்னுமிடத்திலிருந்து இந்த இடங்களில் அதிகாரம் செலுத்தி வந்த வன்னி இராசாக்கள் சைவ ஆலயங்களின் வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தி வந்தனர். ஸ்ரீ மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயம் , சிங்காரபுரம் மாரியம்மன் ஆலயம் என்பன சிறப்புடன் விளங்கின. திகவாபி, இறக்காமம், தொட்டம், தோணிக்கல் ஆகிய இடங்களை உள்ளடக்கியதாய் தெற்கே கமுகாமத்து மலை வரை பரந்திருந்த நடுக்காடு என்ற பெரும் பிரதேசம் அக்காலத்தில் அடர்ந்த காடாக விருந்தது.[11]

போர்த்துக் கேயர் இலங்கையில் காலடி எடுத்து வைத்த இவ்வேளையில் (கி.பி.1505) இலங்கையில் வர்த்தகத்தில் முதன்மை பெற்றிருந்தவர்கள் முஸ்லீம்களாவர். இலங்கையிலிருந்த எல்லாத் துறைமுகங்களிலும் இவர்கள் வர்த்தகம் புரிந்து வந்தனர். இவர்கள் தென்னிந்திய முஸ்லீம்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். சிங்களவரும் தமிழரும் பெரும்பாலும் நெற்செய்கையில் ஈடுபட்டு வந்தனர். குறிப்பாக வளவை கங்கை பாயும் பகுதிகள் திருகோணமலை, மட்டக்களப்பு (அம்பாரையை உள்ளடக்கிய மட்டக்களப்பு) ஆகிய மாவட்டங்களில் அதிகளவில் நெற்சாகுபடி செய்யப்பட்டன.

10. சுருக்கமாகக் கூறுமிடத்து கி.பி.1505ல் போர்த்துக்கேயர் முதன் முதலாக இலங்கையில் காலடி எடுத்து வைத்தவேளையில் தமிழரது பாரம்பரியப் பிரதேசமாகிய வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழரது ஆட்சியின் கீழிருந்தன எனலாம்.
11. கி.பி.13ம் நூற்றாண்டு வரை மக்கள் வாழ்ந்திருந்த இப்பெரும் பிரதேசம் கி.பி.1505ல் காடாகவிருந்தது. கண்டி மன்னன் கீர்த்தி ஸ்ரீ மன்னன் காலத்தில் (கி.பி.1747-1782) நடுக்காடு பிரதேசம் மீண்டும் அபிவிருத்தி செய்யப்பட்டு மக்கள் குடியேற்றப்பட்டதாக பரவணிக் கல்வெட்டு விபரிக்கும் இவனது காலத்துக்குப் பின் மீண்டும் இப்பிரதேசத்தின் பெரும் பகுதிகள் காடாக மாறியது என அறியமுடிகின்றது.



# கண்டி மன்னர் காலத்தில் தமிழ் இலக்கியம்

மட்டக்களப்பில் நெடுங்காலம் தொடக்கம் செழுமை மிக்க இலக்கியப் பாரம்பரியமொன்று நிலவி வந்துள்ளது. வடக்கே வெருகல் தொடக்கம் தெற்கே கூமுனை வரை பரந்திருந்த இப்பிரதேசத்தில் காலத்துக்குக் காலம் புலவர்கள் பலர் தோன்றி இலக்கியங்கள் உருவாக்கி வந்துள்ளனர். இவற்றில் பெரும்பாலா னவை வாய்மொழி இலக்கியங்களாகவும் ஏனையவை ஏட்டுச் சுவடிகளாகவும் நிலவி வந்துள்ளன. இப்பிரதேசத்தின் பழங்குடியினரான தமிழரிடையே பிரதான தொழிலாக மிளிர்ந்து வந்த உழவுத் தொழிலை அடிப்படையாகக் கொண்டு உருவான வயல் இலக்கியங்கள், ஊஞ்சல் பாடல்கள், மற்றும் தாலாட்டுப் பாடல்கள் போன்றவை வாய்மொழி இலக்கியங்களில் அடங்கும்.[1]

மட்டக்களப்பு பிரதேசத்தில் (அம்பாரையை உள்ளடக்கிய மட்டக்களப்பு) குறிப்பாக கண்டி மன்னர் காலத்தில் தமிழ் இலக்கியம் உன்னத நிலையில் இருந்துள்ளதை ஏட்டுச் சுவடிகளாக இன்று காணக்கிடைக்கும் இலக்கியங்கள் தெளிவுறுத்துகின்றன. இவற்றில் பெரும்பாலானவை அக்காலத்தில் மட்டக்களப்பில் சிறப்புடன் விளங்கி வந்த கண்ணகை, மாரி, பேச்சி, மீனாட்சி, கடல்நாச்சி, காளி ஆகிய அம்மன் வழிபாடுகளையும் சிவன், முருகன், வயிரவர், வீரபத்திரர், ஐயனார், கணபதி போன்ற தெய்வ வழிபாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு

1. பண்டைய மட்டக்களப்பில் (அம்பாரையை உள்ளிட்ட மட்டக்களப்பு) வாய்மொழியாக நிலவி வந்த இலக்கியங்களில் பெரும்பாலானவை காலச்சேற்றில் புதையுண்டு போயின எனலாம். எஞ்சியவற்றில் சில தமிழார்வம் மிக்கோரின் தேடல்களின் பயனாக இனங் காணப்பட்டு அச்சுவடிவில் வெளிவந்துள்ள.

உருவானவைகளாகும்.[2] இவற்றுடன் அக்காலத்தில் வாழ்ந்து வந்த புலவர்கள் தாம் கண்டு களித்து மகிழ்ந்த காட்சிகள் , நிகழ்வுகள் என்பனவற்றையும் இலக்கியங்களாக உருவாக்கியுள்ளனர்.

இதேவேளை அக்காலத்தில் வாழ்ந்து வந்து புலவர்கள் மன்னர்களைப் புகழ்ந்து பாடிப் பரிசுகளும் பெற்றுள்ளனர். மட்டக்களப்பு பழந்தமிழ் கிராமங்களில் இவ்வாறான இலக்கியங்கள் ஏட்டுச் சுவடிகளாகக் காணக் கிடைக்கின்றன. கண்டி மன்னர் காலத்தில் இப்பிரதேசத்தில் தமிழ் சிறப்புடன் விளங்கியிருந்ததென்பதற்கு கற்பனை வளமும் கவிச்சுவையும் நிரம்பப் பெற்ற இவ்விலக்கிய வடிவங்கள் சான்றுகளாக மிளிர்கின்றன. இவற்றில் ஒன்று இராஜசிங்கன் பள்ளு என்ற இலக்கியமாகும். மட்டக்களப்புப் புலவரொருவரால் இயற்றப்பட்ட இக்கவியின் வரலாற்றுப் பின்னணி பற்றி நோக்குமிடத்து உண்மைகள் பல தெளிவாகின்றன.

கண்டி மன்னர் காலத்தில் மட்டக்களப்பை வன்னியர் என்ற சிற்றரசர்கள் ஆட்சி புரிந்தனர். இவர்கள் கண்டி மன்னரது மேலாதிக்கத்தை ஏற்றிருந்த போதும் சுதந்திரமுள்ள சிற்றரசர்களாகவே இப்பிரதேசத்தில் ஆட்சி புரிந்தனர். வன்னித் தமிழ் அரசர்களது ஆதிக்கம் தெற்கே பாணகை வரைக்கும் கும்புகன் ஓயாவிலும் பரந்திருந்தது. அக்காலத்தில் கண்டிக்கும் மட்டக்களப்புக்கும் இடையில் நெருங்கிய சமய, கலாசார, வாணிபத் தொடர்புகள் இருந்து வந்தன. மேலும் இப்பிரதேச மக்கள் அக்காலத்தில் கண்டியில் இடம் பெற்று வந்த அரச விழாக்களைக் காண கண்டி சென்று அவற்றைக் கண்டு களித்து திரும்புவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

இவ்வாறு கண்டி நகர் சென்று அங்கு இடம் பெற்ற அரச பவனியைக் கண்டு களித்துத் திரும்பிய மட்டக்களப்புப் புலவரொருவரால் இயற்றப்பட்ட கவியே 'இராஜசிங்கன் பள்ளு' என்ற சிற்றிலக்கியமாகும். கண்டி மன்னனான ஸ்ரீ விஜய ராசசிங்கன் (கி.பி.1739-1747) என்பவனது காலத்தில் வாழ்ந்த இப்புலவர் கண்டி மன்னன் பல்லக்கிலேறிக் கண்டி நகர் வீதியூடாகப் பவனிவரும் சிறப்பினைத் தனது கவி மூலமாக நன்கு விபரிக்கிறார்.

2 பழங்காலத்தில் ஏட்டுச் சுவடிகளாக நிலவி வந்த மட்டக்களப்பு இலக்கியங்களில் பெரும்பாலானவை கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் அறிஞர்கள் சிலரது அயராத முயற்சியின் பயனாக அச்சு வடிவில் நூல்களாக வெளிவந்துள்ளன. இந்த வகையில் பண்டிதர் வி.சி.கந்தையா, அட்டப்பள்ளம் ரி.கணபதப்பிள்ளை, திரு.சதாசிவஐயர் போன்றோர் பணி மகத்தானது எனலாம்.



'திருமேவும் புயசயிலச் செல்வனென வரும் ராசசிங்கன்' என்று தொடங்கும் இச்சிற்றிலக்கியத்தின் வாயிலாகக் கண்டி மன்னர் காலத்தில் நடைபெற்று வந்த அரசபவனி பற்றி அறியமுடிகின்றது.

இக்கவியை இயற்றிய மட்டக்களப்பு புலவர் கதிர்காமக் கடவுள் மீது மிகுந்த பக்தி கொண்டவராவார். ஆதலால் இவர் கண்டி மன்னனான ஸ்ரீ விஜய ராசசிங்கன் நீண்டகாலம் பெரும் புகழுடன் வாழ நல்லருள் புரியவேண்டிக் 'கதிரை' என்ற கதிர்காமப் பதியில் குடியிருக்கும் வேலவரைத் துதிக்கின்றார்.

'ஆதியருள் பெற் றிராச சிங்கன்
அம்புவியோர்கள் மிக வாழ்க
வேதியர் சூழ் தென் கதிரை
வேலவர் நித்தந் துணை யாமே (பாடல் 2: வரி 1 - 4)

அக்காலத்தில் கதிர்காமத்தில் பிராமணர்கள் பெருமளவில் வாழ்ந்து வந்ததை இப்பாடல் வரியொன்று (வரி : 3) உணர்த்துகின்றது. இதன் வாயிலாகக் கண்டி மன்னர் காலத்தில் கதிர்காம முருகன் ஆலயத்தில் விக்கிர வழிபாடு சிறந்திருந்ததை யும் வைதிகமுறையில் பூசைகள் நடைபெற்று வந்துள்ளதென்பதும் தெளிவாகின்றது. மேலும் மட்டக்களப்புத் தமிழரிடையே முருக வழிபாடும்,கந்தப் புராணக் கலாசாரமும் உன்னத நிலையிலிருந்த அக்காலத்தில் கதிர்காம முருகன் மீது இப்பிரதேச மக்கள் மிகுந்த பக்தியும் நம்பிக்கையும் கொண்டிருந்தனர் என்பதையும் இப்பாடல் உணர்த்துகின்றது.

நாயக்கர் குலத்துத் தமிழ் மன்னனும் நீதி வழுவாது நல்லாட்சி புரிந்து வந்தவனுமான ஸ்ரீ விஜயராசசிங்கன் அழகிய பல்லக்கு மீதமர்ந்து கண்டி நகர் வீதியூடாகப் பவனி வரும் அழகினைப் புலவர் இவ்வாறு வர்ணிக்கின்றார்.

''நித்த கல்யாண தேவேந்ரன்
நீதிபரக்கு மகாராசன்
முத்துச் சிவிகை தனிலேறு (றி)
மோகன வீதி பவனி வந்தான்
வரமேவும் வாசவன் போல்
மாணிக்க ரத்ந முடி புனைந்து
திரள் பொன்னின் வாளணிந்து
திசைகளெட்டும் அடலிசை கொள்ள'' (மூன்றம், நாலாம் பாடல்கள்)

இவ்வாறு வரமேவும் வாசவன் போல் கண்டி மன்னன் பவனி வந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் அவனது பல்லக்குக்குப் பின்னால் இசையில் வல்லவர்களும் தமிழ்ப் புலமைமிக்கோரும் இனிமையாக இசைப் பாடல்களை இசைத்தவாறு வந்து கொண்டிருந்தனர். இவர்களைத் தொடர்ந்து திசாவைகளும் வன்னியர் என்ற சிற்றரசர்களும் சேனாதிபதிகளும் மற்றும் தளபதிகளும் வந்து கொண்டிருந்ததாகப் புலவர் தனது கவியில் குறிப்பிடுகின்றார்.

''இசைவாணர் தமிழ்வாணர்
இங்கிதராகம் பாடிவர
திசைமாரும் வன்னியரும்
சேனைபடை மள்ளர் சேசேயென"

கண்டியை நாயக்க மன்னர்கள் ஆட்சி புரிந்த வேளையில் தமிழ் மொழிக்கும் அவர்கள் தக்க அந்தஸ்தினை வழங்கியிருந்தனர் என்பதையும் இப்பாடல் வரிகள் உறுதி செய்கின்றன.

கண்டி அரச பவனி பற்றிப் புலவர் மேலும் குறிப்பிடுகையில் திசாவைகள், வன்னியர்கள், சேனாதிபதிகள் ஆகியோரைத் தொடர்ந்து வரிசையாக அணிவகுப் பொன்று வந்து கொண்டிருந்தது. இந்த அணி வகுப்பில் நடன மாதர்களும் எண்ணிக்கையில்லாத படை வீரர்களும் அடங்கியிருந்தனர். மத்தளம், கொம்பினா லான ஊதுகுழல்கள் ஆகிய வாத்தியக் கருவிகளைத் தாளத்திற்கேற்றவாறு இசைத்த வண்ணம் இவர்கள் வந்து கொண்டிருந்தனர். இவ்வாத்தியக் கருவிகளின் ஓசையானது கடல் அலைபோன்று பேரிரைச்சலைக் கொடுத்தது.

மேலும் இப்பவனியில் மூன்று உலகங்களுக்கும் அதிர்ச்சியைக் கொடுக்க வல்ல துப்பாக்கிகளும் வானத்து இடிமுழக்கம் போல் ஓசையைக் கொடுக்கும் பீரங்கியும் இடம் பெற்றிருந்ததாகப் புலவர் தனது கவியில் குறிப்பிடுகின்றார்.

''இங்கித நாடக சாலைகளும்
எண்ண வொண்ணாத படைத் திரளும்
பொங்கு கடலொலி போலதிர
பேரிகை கொம்பு மிக முழங்க
முழங்கிடிங் கென்னப் பீரங்கியும்



மூன்றுலகார வெடித்துவக்கும்
இளங்குரும்பைத் தனமடவார்
ரத்தப் பொனாலாத்தி யேந்தி வர" (இராஜசிங்கன் பள்ளு 6ம் 7ம் பாடல்கள்)

இராஜசிங்கன் பள்ளு என்ற இலக்கியத்தின் வாயிலாகக் கண்டி மன்னர் காலத்தில் கண்டி மாநகரில் நடைபெற்று வந்த அரச பவனி பற்றி ஓரளவு அறிய முடிகின்றது.

கண்டியை ஆட்சி புரிந்து வந்த ஸ்ரீ விஜயராஜசிங்கன் மதுரை நாயக்கர் குலத்தைத் சேர்ந்த தமிழ் அரசியைத் தனது தேவியாகக் கொண்டிருந்தான். இவனது காலத்தில் ஏராளமான தமிழ் மக்கள் மதுரையிலிருந்து வந்து கண்டியில் குடியேறி வாழ்ந்து வந்தனர். இதன் பயனாகக் கண்டியில் தமிழரது செல்வாக்கு மிகுந்திருந்தது. இவ்வேளையில் மட்டக்களப்பு (அம்பாரையை உள்ளடக்கிய மட்டக்களப்பு) அரசியல் விடயங்களில் ஒல்லாந்தர் தலையிட்டிருந்த போதும் தமிழ் மன்னனான கண்டி மன்னனின் செல்வாக்கே இப்பிரதேசத்தில் நிலைத்திருந்தது. இப்பிரதேச மக்களது சமூக, சமய, கலாசார மேம்பாட்டிற்கு கண்டி மன்னன் அளித்து வந்த ஆதரவே இதற்கான காரணமாகும்.

மட்டக்களப்பில் அமைந்திருந்த சைவ ஆலயங்களின் வளர்ச்சியில் கண்டி மன்னன் அதிக அக்கறை கொண்டிருந்தான். அத்துடன் மானியங்களும் வழங்கி வந்தான். இதேவேளை இப்பிரதேசத்தின் அரசியல் விடயங்களில் தலையிட்டிருந்த ஒல்லாந்தர் தமது சமயமான கிறிஸ்துவத்தைப் பரப்புவதற்கு மேற்கொண்டிருந்த நடவடிக்கைகள் மக்களிடையே அவர்கள் மீது வெறுப்புணர்வை ஏற்படுத்திய தெனலாம். இந்நிலையில் தமது சமயத்தையும் உன்னதமான தனித்துவம் மிக்க பாரம்பரியத்தையும் பாதுகாக்க தமிழனான கண்டி மன்னனையே இப்பிரதேச மக்கள் நம்பியிருந்தனர். இதனைக் கருத்திற் கொண்ட மட்டக்களப்பு மக்கள் கண்டி மன்னனான ஸ்ரீ விஜயராச சிங்கனுக்கு விசுவாசமாக இருந்து வந்தனர்.

இவ்வாறு கண்டி மன்னரது செல்வாக்கு மட்டக்களப்பில் நிலவியிருந்த அக்காலத்தில் இப்பிரதேசத்திற்கும் கண்டிக்குமிடையில் போக்குவரத்து, வர்த்தகம் என்பன சிறந்திருந்தன. இவ்வேளையிலேயே நரேந்திரசிங்கன் பள்ளு, இராஜசிங்கன் பள்ளு போன்ற சிற்றிலக்கியங்கள் தோன்றின. இவ்விலக்கியங்கள் வாயிலாக வரலாற்றுண்மைகள் பல தெளிவாகின்றன.

# சம்மாந்துறையில் தமிழர் நாகரீகம்

பண்டைய ஈழத்தில் தமிழர் நாகரீகம் நிலைத்திருந்த பிராந்தியங்களுள் சம்மாந்துறையும் குறிப்பிடத்தக்கதொன்றாகும். வடக்கே வெருகல் தொடக்கம் தெற்கே கூமுனை வரை பரந்திருந்த பண்டைய மட்டக்களப்பு தமிழக வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றிருந்த சம்மாந்துறை பிராந்தியத்தில் ஆதிகாலந்தொடக்கம் ஆங்கிலேயரது ஆட்சிக் காலம் வரையும் தமிழர் நாகரீகம் உன்னத நிலையில் இருந்து வந்ததுடன் இந்துசமயமும் செழித்திருந்தது. இதனை கல்வெட்டுக்கள், இலக்கியங்கள் , செப்பேடுகள், பட்டயங்கள், வரலாற்று நூல்கள் என்பன உறுதி செய்கின்றன.

மேலும், வரலாற்றுச் சிறப்பினைக் கொண்ட சித்தாத்திரைப் பிள்ளையார் ஆலயம், கண்ணகையம்மன் ஆலயம், காளி கோயில் என்பனவும் சான்றுகளாக விளங்குகின்றன. வீரமுனை, சம்மாந்துறை, மலுக்கம்பிட்டி, மல்வத்தை, மல்லிகைத் தீவு, வளத்தாப்பிட்டி ஆகிய இடங்களை உள்ளடக்கிய இப்பிரதேசத்தில் (பிரதேச செயலகப் பிரிவு) அமைந்துள்ள காளி கோயிலானது மிகப் பழமை வாய்ந்த வரலாற்றினைக் கொண்டதாகும். ஈழத்தின் பூர்வீகக் குடியினரில் ஒரு பிரிவினரும் இப்பிரதேசத்தில் ஆதிகாலத்தில் வாழ்ந்து வந்தவர்களுமான இயக்கர் என்ற திராவிடக் குடியினரால் இவ்வாலயம் தோற்றுவிக்கப்பட்டதாகும்.

பண்டைய வரலாற்றில் திராவிடர் என்பது தமிழரையே குறிப்பதாகும். கி.மு.நாலாம், மூன்றாம் நூற்றாண்டுகளில் இப்பிரதேசத்தில் வாழ்ந்து வந்த தமிழ்ச் சைவரிடையே காளி வழிபாடும் சிறப்புற்றிருந்ததை தொல்லியல் ஆய்வுகள் உறுதிசெய்கின்றன.[1] மட்டக்களப்பு வாவியின் தென்கோடியில் அமைந்துள்ள

1. கி.மு.நாலாம், மூன்றாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த சிவவழிபாட்டை குறிக்கும் ஏராளமான பிராமிக் கல்வெட்டுக்கள் இலங்கையில் நாடளாவிய ரீதியில் காணப்படுகின்றன. இவற்றில் அம்பாரை மாவட்டத்தில் மட்டும் பத்துக் கல்வெட்டுக்கள் உள்ளன. இக்கல்வெட்டுக்களில் அம்பிகை, காளி, பற்றிய குறிப்புக்களும் உண்டு. (ஈழத்து இந்து சமய வரலாறு பாகம் I பக்.178 பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் - 1996



சம்மாந்துறை பிரதேசத்தில் அருகருகாயுள்ள வீரமுனையிலும் சம்மாந்துறையிலும் பண்டைக்காலத்தில் வெளிநாடுகளிலிருந்து வரும் சிறிய கப்பல்கள், தோணிகள், வள்ளங்கள் ஆகியன வந்து தங்கியிருந்து சென்றதையும் அறிய முடிகின்றது.

## விஜயன் வந்த நாளில் இயக்கர் வாழ்ந்த இடம்

இத்துணை சிறப்புகளைக் கொண்ட சம்மாந்துறை பிரதேசத்தின் ஆதிகால வரலாற்றினை ஆராயுமிடத்து வரலாற்றுண்மைகள் பல தெளிவாகின்றன. வரலாற்று இலங்கையின் முதல் மன்னனான விஜயன் ஈழத்தில் முதன் முதலாகக் காலடி எடுத்து வைத்த வேளையில் (கி.மு.ஐந்தாம் நூற்றாண்டு) இப்பிரதேசத்தில் இயக்கர் என்ற திராவிடக்குடியினர் பெருமளவில் வாழ்ந்து வந்தனர். இவர்களிடையே 'இயக்கி' என்ற தாய்த் தெய்வ வழிபாடு நிலவியிருந்தது. இதேபோன்று அக்காலத்தில் மண்டூர், போரைதீவு பிரதேசத்தில் வாழ்ந்து வந்த இயக்கரிடையேயும் இச்சுதேச வழிபாடு நிலவியிருந்தது.[2]

அக்காலத்தில் சம்மாந்துறை, போரைதீவு ஆகிய இடங்களில் நிலவி வந்த இயக்கி வழிபாட்டின் தொடர்ச்சியே பிற்காலத்தில் சம்மாந்துறை, போரதீவு ஆகிய இடங்களில் காளி வழிபாடாக மலர்ந்து சிறப்புடன் விளங்கி வந்துள்ளது. விஜயனது காலத்தில் உகந்தை (நாகத்தீவு) திருக்கோவில் (நாகர்முனை) மண்டூர் ஆகிய பிரதேசங்களில் திராவிடரான நாகர் குடியினர் பெருமளவில் வாழ்ந்து வந்தனர். இவர்களிடையே வேல்வழிபாடு நிலவியிருந்தது.[3] இக்காலத்தில் சம்மாந்துறை பிரதேசத்தில் பெருமளவில் இயக்கர் குடியினரே வாழ்ந்து வந்தனர். திராவிடரான இவர்கள் எலு என்ற கொச்சைத் தமிழை பேசி வந்தனர். நாகர் குடியினர் தமிழ் மொழியை பேசி வந்தனர்.

கி.மு.நாலாம், மூன்றாம் நூற்றாண்டுகளில் பாண்டி குலத்துத் தமிழ்

2. மட்டக்களப்பு மாண்மியம் - பக்.48 பதிப்பாசிரியர் எப்.எக்ஸ்.நடராசா - 1962
இலங்கையின் ஆதி மக்களில் ஒரு பிரிவினரான இயக்கரிடையே நிலவியிருந்த இயக்க வழிபாட்டின் தொடர்ச்சியே காளி வழிபாடாகும். (ஆரியரல்லாத மக்கள் கூட்டத்தினரின் சுதேச வழிபாட்டுமுறை என்று இயக்க வழிபாட்டை குறிப்பிடலாம்)
3. இப்பிரதேசங்களில் வாழ்ந்து வந்த நாகர் என்ற பழந்தமிழரிடையே அக்காலத்தில் சிறந்திருந்த வேல் வழிபாடே பிற்காலத்தில் முருகவழிபாடாக மலர்ந்தது. உகந்தை, திருக்கோவில், மண்டூர் முருகன் ஆலயங்கள் நாகர்களால் தோற்றுவிக்கப்பட்டவையாகும்.

சிற்றரசர்களது ஆட்சியின் கீழ் உறுகுணையில் திராவிட நாகரீகம் உன்னத நிலையிலிருந்த வேளையில் சந்தணகாமத்து தமிழ் அரசர்களது ஆட்சியில் சம்மாந்துறை பிரதேசம் இருந்து வந்தது. இக்காலத்தில் இங்கு சைவமும் தமிழ்ப் பண்பாடும் செழித்திருந்ததுடன் காளி வழிபாடும் சிறந்திருந்தது. கி.மு.இரண்டாம் நூற்றாண்டளவில் சேனன், சூத்திகன் (கி.மு.177-155) ஆகிய தமிழ் மன்னர்கள் அனுரதபுரியிலிருந்து இலங்கை முழுவதையும் ஆட்சி புரிந்தனர். இதனை மகாவம்சமும் குறிப்பிடுகின்றது. இக்காலத்தில் தென்கிழக்கிலங்கை என்ற மட்டக் களப்பை (அம்பாரையை உள்ளடக்கிய) சூத்திகன் ஆட்சி புரிந்து வந்தான்.

## தமிழருக்கென தனி அரசு அமைத்த மன்னன்

இத்தமிழ் மன்னர்களது ஆட்சிக்காலத்தில் (கி.மு.177 - 155) சம்மாந்துறை பிரதேசம் தமிழ் மன்னனான சூத்திகனால் நன்கு அபிவிருத்தி செய்யப்பட்டது. இப்பிரதேசத்தில் மக்கள் குடியிருப்புகள், பாதைகள், வீதிகள், படை அரண்கள் என்பனவற்றை உருவாக்கிய இம்மன்னன் ‘மட்டக்களப்பு’ என்ற நகரத்தையும் நிர்மாணித்து இங்கு தமிழருக்கெனத் தனியான அரசொன்றையும் நிறுவினான். இதனை மட்டக்களப்பு மான்மியம் விபரமாகக் குறிப்பிடுகின்றது.[4] இந்த இராசதானி அமைந்திருந்த இடம் வீரமுனைக்கும் மலுக்கம்பிட்டிக்கும் அருகாமையில் உள்ளது.[5] சேனன், சூத்திகன் ஆகிய மன்னர்களது ஆட்சிக் காலத்தில் அனுரத புரியில் தமிழர்கள் பெருமளவில் வாழ்ந்து வந்ததுடன் வாணிபத்திலும் அவர்கள் செல்வாக்குப் பெற்றிருந்தனர்.

இக்காலத்தில் (கி.மு.177-155) சம்மாந்துறை பிராந்தியத்தை அண்மித்திருந்த தீகவாபி, அம்பாரை ஆகிய பிரதேசங்களில் திராவிடர்களே பெருமளவில் வாழ்ந்து வந்தனர். இவர்களில் ஈழத்தின் பூர்வீகக் குடியினரான இயக்கர், நாகர் என்போரும் கி.மு.நாலாம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டிலிருந்து வந்து உறுகுணை முழுவதிலும் குடியேறி சிற்றரசுகள் அமைத்து வாழ்ந்திருந்த பாண்டிய நாட்டுத் தமிழர்களின் சந்ததியினரும் அடங்குவர். இவர்களிடையே பௌத்தம் பரவியிருந்ததும் குறிப்பிடத் தக்கதாகும். தீகவாபியை சேர்ந்த குடுவில் என்ற இடத்தில் காணப்படும் பிராமிச் சாசனம் இதனை உறுதி செய்கின்றது.

---

**4. பண்டைத் தமிழர் பண்பாட்டுக் கோலங்கள் - பக் 3, 4, 5 நா.நவநாயகமூர்த்தி-1996**
**5. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - பக்.98, 99 திருமதி ஜி.தனபாக்கியம்-1993**



சிங்கள மொழியின் தாய்மொழியான ஈளு (எலு) மொழியில் பிராமி எழுத்தில் கி.மு.இரண்டாம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டு வணிகத் துறையில் தமிழர் பெற்றிருந்த செல்வாக்கையும் தெளிவுறுத்துகின்றது. அக்காலத்தில் சூத்திகனால் தென்னிந்தியாவிலிருந்து தமிழ்க் குடிகள் வரவழைக்கப்பட்டு சம்மாந்துறை பிரதேசத்திலும் மற்றும் நிந்தவூர் (அட்டப்பள்ளம்) பிராந்தியத்திலும் குடியேற்றப்பட்டதாக அறியமுடிகின்றது. கி.மு.முதலாம் நூற்றாண்டில் துட்டகாமினி மன்னனின் ஆட்சிக் காலத்தில் இவனது தம்பியான சதாதீசன் என்பவன் தீகவாபி யைத் தலைநகராகக் கொண்டு மட்டக்களப்பை (அம்பாரையை உள்ளடக்கிய) ஆட்சி புரிந்ததாக வரலாற்றுச் செய்தியுண்டு. இதனை மகாவம்சமும் குறிப்பிடுகின்றது. (மகாவம்சம் அத்.33 செய்.9, 14) ஆனால் தமிழ்ப் பிரதானிகளே சதாதீசனுக்குக் கீழ் குறுநில மன்னர்களாவிருந்து மட்டக்களப்பை ஆட்சி புரிந்து வந்தனர் என்பதே வரலாற்றுண்மையாகும்.

இக்காலத்தில் அம்பாரை மாவட்டத்தில் குறிப்பாக தீகவாபி, இறக்காமம், அம்பாரை, சாகாமம் ஆகிய பிரதேசங்களில் குளங்கள் பல நிர்மாணிக்கப்பட்டும் புனரமைக்கப்பட்டும் நெற்செய்கை அபிவிருத்தி செய்யப்பட்டதாக அறிய முடிகின்றது. மேலும் சதாதீசனால் சிங்கள பௌத்தர்களும் இப்பிரதேசங்களில் குடியேற்றப் பட்டனர் என்பதையும் ஆய்வுகள் உணர்த்துகின்றன. கி.பி.முதலாம் நூற்றாண் டளவில் சோரநாகன் (கி.மு.3- கி.பி.9) என்பவன் அனுரதபுரியிலிருந்து ஆட்சி புரிந்து வந்த வேளையில் சம்மாந்துறை பிரதேசத்திலிருந்து மட்டக்களப்பை கலிங்க குலத்து மன்னனான இரஞ்சலன் என்பவன் ஆட்சி புரிந்து வந்தான். இவர்களிருவரும் நெருங்கிய நண்பர்களாகவிருந்தனர். இதனை மட்டக்களப்பு மான்மியம் (பக்.21-23) கூறும்.

மன்னன் இரஞ்சலனது காலத்திலேயே சம்மாந்துறை, போரதீவு ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்து வந்த இயக்கர் குடியினர் இப்பிரதேசங்களிலிருந்து வேறிடங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றதாக இந்நூல் மேலும் குறிப்பிடுகின்றது. இதனைத் தொடர்ந்து இம்மன்னனால் தென்னிந்தியாவிலிருந்து தமிழ்க் குடியினர் வரவழைக்கப்பட்டு இயக்கர் வாழ்ந்திருந்த இடங்களிலெல்லாம் குடியேற்றப் பட்டதாக அறியமுடிகின்றது. இக்காலத்தில் சம்மாந்துறை பிரதேசத்தில் வாழ்ந்து வந்த மக்களிடையே காளி வழிபாடு சிறந்திருந்தது.

இக்காலம் தொடக்கம் (கி.மு.முதலாம் நூற்றாண்டு) வீரமுனை, சம்மாந்துறை,

வளத்தாப்பிட்டி, மண்கல்பிட்டி, மல்லிகைத்தீவு, மல்வத்தை ஆகிய இடங்களை உள்ளடக்கிய சம்மாந்துறை பிராந்தியமானது தமிழர் செல்வாக்கு நிலவியிருந்த பிரதேசமாகவும் தமிழர் ஆட்சிப் பிரதேசமாகவும் (இராஜதானி அமைந்திருந்த) பிரதேசமாகவும் விளங்கி வந்தது. இப்பிரதேசத்திலிருந்து ஆட்சி புரிந்து வந்த சிற்றரசர்கள் சில காலங்களில் சிங்கள மன்னர்களது மேலாதிக்கத்தை ஏற்றும் சில காலங்களில் சுதந்திரமுள்ள சிற்றரர்களாகவும் ஆட்சி புரிந்து வந்துள்ளனர். இதனை வரலாற்றாய்வுகள் மூலமாக அறியமுடிகின்றது.

## வடஇலங்கை தமிழ் மன்னன் பாலசிங்கன்

கி.பி.எட்டாம் நூற்றாண்டளவில் முதலாம் சேனன் (கி.பி.819-839) என்பவன் அனுரதபுரியில் ஆட்சி புரிந்து வந்த காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மன்னர்களது ஆட்சி நிலவியிருந்தது. இவ்வேளையில் வடஇலங்கையில் ஆட்சி புரிந்து வந்த ஜெயதுங்க பரராசசிங்கம் என்ற பாலசிங்க மன்னனின் செல்வாக்கு தென்கிழக்கிலங்கையின் திருக்கோவில் வரை பரந்திருந்தது. இதனை ''திருக்கோயில் செப்பேடு '' உறுதி செய்கின்றது. இத்தமிழ் மன்னன் சோழ நாட்டிலிருந்து தமிழ்க் குடிகளை அழைத்து வந்து சம்மாந்துறை பிரதேசத்திலுள்ள வீரமுனையில் குடியேற்றினான். இதனை வீரமுனைச் செப்பேடு, சீர்பாதவரன் முறைச் செப்பேடு, கல்வெட்டுக்கள் என்பன குறிப்பிடுகின்றன.

வீரமுனையில் அமைந்துள்ள பழம்பெரும் ஆலயமான சிந்துயாத்திரைப் பிள்ளையார் ஆலயத்தை தோற்றுவித்தவனும் இம்மன்னனனேயாவான். முதலாம் சேனன் காலத்தில் பாண்டிய மன்னனான சிறிமாற வல்லபன் என்பவன் இலங்கை மீது படையெடுத்து வந்தவேளையில் முதலில் தாக்குதலுக்குள்ளானது பாலசிங்கனின் வடஇலங்கை தமிழ் அரசேயாகும். இரண்டாம் சேனனின் (கி.பி.839-873) காலத்தில் பாண்டிய நாட்டில் நிகழ்ந்த அரசுரிமைப் போட்டியில் தனது அரசுரிமையை இழந்தவனான இரண்டாம் வரகுணன் இலங்கை மன்னனின் உதவியை நாடினான். இவ்வேளையில் அவனுக்கு உதவும் பொருட்டு இரண்டாம் சேனன் பாண்டிய நாட்டுக்குப் படையொன்றை அனுப்பிவைத்தான். இதனை வரலாறுகள் குறிப்பிடுகின்றன.[6]

6. பாண்டியர் வரலாறு - பக்.75, 76 டாக்டர் கே.வீ.ராமன் பேராசிரியர் (தொல்லியல்)-1977
பண்டய ஈழம் பாகம் I - பக்.168, 169 வே.க.நடராசா
பாண்டியர் வரலாறு பாகம் I - பக்.346, 347 ம.இராசசேகர தங்கமணி - 1978



## மட்டக்களப்பு மன்னன்

இதேவேளை இப்படைக்குத் தளபதியாகச் சென்றவன் அக்காலத்தில் சம்மாந்துறை பிரதேசத்திலிருந்து மட்டக்களப்பை ஆட்சிபுரிந்து வந்த தருமசிங்கன் என்ற சிற்றரசனாவான். இவன் அனுரதபுரி மன்னனின் விருப்பின் பேரிலேயே பாண்டிய நாட்டுக்குப் படையெடுத்துச் சென்று வெற்றி பெற்றுப் பாண்டிய நாட்டின் அரசுரிமையை இரண்டாம் வரகுணனுக்குப் பெற்றுக் கொடுத்தான். பாண்டியன் இரண்டாம் வரகுணனையே 'மகாவம்சம்' மாயா என்ற இளவரசன் என்று குறிப்பிடுகின்றது. மட்டக்களப்பு மான்மியம் என்ற நூல் இவனைப் புனந்துறுவன் என்று குறிப்பிடுகின்றது. ஈழப்படைக்குத் தளபதியாகச் சென்ற மட்டக்களப்பு சிற்றரசனான தருமசிங்கனையே ஈழவரலாற்று நூல்கள் குட்டகன் என்று குறிப்பிடுகின்றன.[7]

இக்காலத்தில் அம்பாரை, தீகவாபி ஆகிய பிரதேசங்களில் மக்கள் குடியிருப்புக்கள் நிறைந்திருந்தன. தமிழர்கள் பெருமளவில் வாழ்ந்து வந்தனர். தற்போது அம்பாரைப் பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ள பகுதி 'அம்பாரைவில்' என்ற பெயருடன் விளங்கியது. இப்பகுதியில் பெரியதொரு சிவாலயம் அமைந்திருந்தது. சிங்கள மன்னர்களின் ஆதரவைப் பெற்றுவந்த இவ்வாலயம் நாலாம் தப்புலன், முதலாம் சேனன், இரண்டாம் சேனன் ஆகியோரது நம்பிக்கையைப் பெற்றிருந்ததும் வரலாற்றுண்மையாகும். கி.பி. பத்தாம், பதினோராம் நூற்றாண்டுகளில் இலங்கையில் சோழரது ஆட்சி நிலைத்திருந்த காலத்தில் (கி.பி.983-1070) சம்மாந்துறைப் பிரதேசம் தமிழகத்துடன் நெருங்கிய சமூக, சமய, கலாசார, பண்பாட்டு உறவுகளைக் கொண்டிருந்தது. ''கல்முனைதுறை'' யூடாக போக்குவரத்து, வர்த்தகம் என்பன நடைபெற்று வந்ததும் குறிப்பிடத்தக்க தாகும்.

கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் உலோகீஸ்வரன் (கி.பி.1211-1212) என்ற கலிங்க குலத்து மன்னன் (தமிழ்ச்சைவன்) பொலநறுவையிலிருந்து ஆட்சி புரிந்து வந்த காலத்தில் இலங்கை மீது மூன்றாம் குலோத்துங்கன் என்ற சோழ மன்னன் படையெடுத்து வந்ததாகச் சூளவம்சம் குறிப்பிடும். இவ்வேளையில் இலங்கை மன்னன் தென்னிலங்கையின் மாகமையில் தங்கியிருந்தான். இவனைக்

7. பண்டைய ஈழத்தமிழர் - பக்.52, 53 நா.நவநாயகமூர்த்தி - 1998

காணவேண்டி சோழமன்னன் தென்னிலங்கை சென்ற வேளையில் சோழமன்னன் சம்மாந்துறைப் பிரதேசத்திற்கும் விஜயம் செய்து இங்கிருந்து ஆட்சிபுரிந்து வந்த சிற்றரசனையும் சந்தித்துச் சென்றதாக அறியமுடிகின்றது.

## மாகோன் காலம்

தமிழ் மன்னனான மாகோன் (கி.பி.1215-1241) இலங்கையைக் கைப்பற்றி பொலநறுவையிலிருந்து ஆட்சி புரிந்த காலத்திலும் கி.பி.பதின்மூன்றாம் நூற்றாண்டில் பாண்டியரது அரசியல் செல்வாக்கு இலங்கையில் நிலைத்திருந்த வேளையிலும் (கி.பி.1284-1310) சம்மாந்துறை பிரதேசத்தில் தமிழும் சைவமும் செழித்திருந்தன. மாகோனின் ஆட்சிக் காலத்தில் மட்டக்களப்பில் (அம்பாரையை உள்ளடக்கிய மட்டக்களப்பு) வாழ்ந்து வந்த பௌத்த மக்கள் இவனது சமய விரோத நடவடிக்கைகள் காரணமாக மட்டக்களப்பை விட்டுத் தென்னிலங்கை நோக்கி இடம் பெயர்ந்து சென்றனர். இவ்வாறு சென்றவர்களில் பௌத்த தமிழர்களும் பெருமளவில் அடங்குவர். நாளடைவில் இவர்கள் பௌத்த சிங்களவராகினர் என்பது மறைக்கப்பட்ட வரலாற்றுண்மையாகும். இலங்கையில் தமிழரிடையே கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை பௌத்தம் நிலவியிருந்தமைக்குச் சான்றுகள் உண்டு.

கி.பி.பதின்மூன்றாம் நூற்றாண்டில் பொலநறுவை இராச்சியம் நிலை குலைந்ததைத் தொடர்ந்து மாகமன்னனும் அவனது சகாக்களும் கிழக்கிலங்கையின் பல பாகங்களிலும் மக்களைக் குடியேற்றி சிற்றரசுகளைத் தோற்றுவித்தனர். வன்னிச் சிற்றரசுகள் என்ற பெயருடன் மட்டக்களப்பில் தோற்றுவிக்கப்பட்ட இச்சிற்றரசுகள் தென்னிந்தியப் பண்பாடு இப்பிரதேசத்தில் (அம்பாரை, மட்டக்களப்பு மாவட்டங்கள்) நன்கு பரவுவதற்கு உதவின. இதற்கு முதலில் பாண்டியர் செல்வாக்கும் பின்னர் பிற தென்னிந்திய இராச்சியங்களின் செல்வாக்கும் காரணிகளாயின எனலாம்.[8] இக்கால கட்டத்தில் வாவியின் தென்பிரதேசமான சம்மாந்துறை பிரதேசம் (பிரதேச செயலகப் பிரிவு) மட்டக்களப்பு என்ற பெயருடன் முக்கியத்துவம் பெற்றிருந்ததுடன் தமிழர் பண்பாட்டு கூறுகளின் உறைவிடமாகவும்

8. இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை - பக்.38 திரு.கா.இந்திரபால - 1970
9. வீரமுனை கைகாட்டிமலைப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட பாண்டியர் நாணயங்கள், தொல்லியல் சான்றுகள் என்பன இப்பிரதேசத்தில் பாண்டியர் செல்வாக்கு நிலைத்திருந்ததை உறுதி செய்கின்றன.



விளங்கியிருந்தது.[9]

## வீரமுனையில் கண்ணகி அம்மன் ஆலயம்

பாண்டியரது காலத்தில் சம்மாந்துறைப் பிரதேசத்தில் தனிப் பெரும்பான்மையினராக வாழ்ந்து வந்த தமிழ் மக்களிடையே கண்ணகி வழிபாடு உன்னத நிலையை எய்தியிருந்தது. இன்று வீரமுனையில் உள்ள கண்ணகையம்மன் ஆலயம் இதன் தொடர்ச்சியேயாகும். இதேபோன்று அட்டப்பள்ளம் (சிங்காரபுரி) மாரியம்மன் ஆலயம், காளியோடை (களியோடை) க்கு அருகாமையில் அமைந்திருந்த காளியம்மன் ஆலயம், சம்மாந்துறை காளியம்மன் ஆலயம் என்பனவும் சிறப்புடன் விளங்கியிருந்தன. இலக்கியத் தொல்லியல் சான்றுகள் இதனை உறுதி செய்கின்றன.[10] கி.பி.பதினாலாம், பதினைந்தாம் நூற்றாண்டுகளில் யாழ்ப்பாண இராச்சியம் உன்னத நிலையிலிருந்த காலத்தில் கி.பி.1450 வரையும் மட்டக்களப்பில் ஆட்சி புரிந்து வந்த வன்னியர் என்ற தமிழ் சிற்றரசர்கள் யாழ்ப்பாணத்து மன்னரின் மேலாதிக்கத்தினை ஏற்றிருந்தனர்.[11]

இக்கால கட்டத்தில் மட்டக்களப்பில் தமிழும் சைவமும் செழித்திருந்தன. இவ்வேளையில் மட்டக்களப்பு என்ற பெயருடன் விளங்கியிருந்த வாவியின் தென் பிரதேசமான சம்மாந்துறை பிரதேசத்தில் வாழ்ந்து வந்த தமிழ்க் குடியினர் தமிழ்ப் பாரம்பரியத்தை காத்து வந்தனர். இதற்கு இலக்கியச் சான்றுகள் உண்டு. யாழ்ப்பாண அரசனான ஜெயவீரசிங்கம் (கி.பி.1370-1417) என்பவன் இயற்றிய கண்ணகி வழக்குரை காவியம் (துரியோட்டு காதை : செய்யுள் 151, 152) சம்மாந்துறை பிரதேசத்தையே மட்டக்களப்பு நகர் என்று குறிக்கின்றது. பண்டைய மட்டக்களப்பு நகர் இப்பிரதேசத்திலேயே அமைந்திருந்தது.[12]

10. இதே வேளை பண்டைக் காலந்தொட்டு பட்டிப்பளை பிரதேசத்தில் (கல்லோயா) வாழந்து வந்த தமிழ்ச் சைவர்கள், மாகமன்னன் ஆட்சிக் காலத்திலும் அதனைத் தொடர்ந்து பாண்டியர் செல்வாக்கு நிலவியிருந்த இக்காலத்திலும் (கி.பி.1284-1314) இப்பிரதேசத்திலிருந்து வெளியேறிக் கிழக்குக் கரையோரங்களிலும் வேறிடங்களிலும் குடியேறி வாழத் தொடங்கினர். இதனைத் தொடர்ந்து பட்டிப்பளை (கல்லோயா) பிரதேசம் காடாக மாறியது.
11. யாழ் பாணச் சரித்திரம் -பக்.87 முதலியார் செ.இராசநாயகம் - 1933
12. யாழ்பாண இராச்சியம் உன்னத நிலையிலிருந்த இக்காலத்திலேயே காரைதீவு கண்ணகி அம்மன் ஆலயம் தோன்றியது. இதனை ஆய்வுகள் உறுதி செய்கின்றன.

## சிற்றரசர்களாக மட்டக்களப்புத் தமிழகத்தை ஆண்டனர்

கி.பி.1450ல் கோட்டை மன்னனின் வடஇலங்கைப் படையெடுப்பினால், யாழ்ப்பாண இராச்சியம் சிதைவுற்றதைத் தொடர்ந்து மட்டக்களப்பு வன்னிச் சிற்றரசர்கள் கோட்டை மன்னனின் மேலாதிக்கத்தை ஏற்கும் நிலைக்குத் தள்ளப் பட்டனர்.[13] ஆயினும் சுதந்திரமுள்ள சிற்றரசர்களாகவே இவர்கள் மட்டக்களப்பைப் பரிபாலித்து வந்தனர். கி.பி.1505ல் போர்த்துகேயர் இலங்கையில் காலடி எடுத்து வைத்தவேளையில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழரது முழுமையான ஆட்சியின் கீழிருந்தன. இவ்வேளையில் யாழ்ப்பாண இராச்சியத்தைப் பரராசசேகரன் என்ற தமிழ் மன்னன் ஆட்சி புரிந்து வந்தான்.

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னிப் பிரதேசத்தை வன்னியர் என்ற தமிழ் சிற்றரசர்கள் ஆட்சி புரிந்து வந்தனர். இதேபோன்று புத்தளத்திலும் முற்குக வன்னிமைகளின் ஆட்சியே நிலைத்திருந்தது. கி.பி.1505ல் எவருக்கும் தலைவணங்காத சுதந்திரமுள்ள அரசுகளாகவே மட்டக்களப்பு வன்னிச் சிற்றரசுகள் (பளுகாமம், சம்மாந்துறை, பாணகை) செயற்பட்டு வந்தன. இக்காலத்தில் இலங்கை முழுவதிலும் பிரபல்யம் பெற்றிருந்த சம்மாந்துறைப் பிரதேசம் தமிழ் சிற்றரசனின் ஆட்சியின் கீழ் சிறப்புடன் விளங்கியிருந்ததுடன் இந்து சமயமும் செழித்திருந்தது.

இவ்வேளையில் வாவியூடாகப் போக்குவரத்து இடம் பெற்று வந்தது. நாப்புட்டிமுனை (நற்பிட்டிமுனை) கிட்டங்கி, சேனைக்குடியிருப்பு ஆகிய இடங்களை உள்ளடக்கிய பெரும்பகுதி வர்த்தகமையமாக விளங்கியிருந்தது. இங்கு தென்னிந்திய வர்த்தகர்கள், குறிப்பாகச் செட்டிகள் என்ற நகரத்தார் சமூகத்தினரே இப்பகுதியில் தங்கியிருந்து வர்த்தகம் புரிந்து வந்தனர். இக்காலத்தில் (1505களில்) இலங்கையின் கரையோரத் துறைமுகங்களில் வாணிகம் புரிந்து வந்தவர்கள் முஸ்லீம்களாவர். இவர்கள் தென்னிந்திய முஸ்லீம்கள் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும். பாபோசா (கி.பி.1500 - 1516) என்ற போர்த்துக்கேய யாத்திரீகனின்

13. யாழ்பாண இராச்சியம் - பக்iv பதிப்பாசிரியர் கலாநிதி சி.க.சிற்றம்பலம்-1992
14. புதுமுறைச் சரித்திரம் II - பக்.70 ஆ.சபாரெத்தினம் - 1965
போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த காலத்தில் (1505) நற்புட்டிமுனை, கிட்டங்கி, பகுதியில் வர்த்தகம் புரிந்து வந்த தென்னிந்திய செட்டிகளின் வர்த்தக நடவடிக்கைகள் திருக்கோவில் வரை பரந்திருந்தது. (பனங்காடு கிராமத்தில் ஐயனார் வழிபாட்டை செட்டிகளே தோற்றுவித்தனர்)



குறிப்பின்படி இவர்கள் தென்னிந்தியாவில் குடியேறிய அராபியருக்கும் சுதேச மங்கையருக்கும் பிறந்த சந்ததியினர் என அறிய முடிகின்றது. இக்காலத்தில் இந்தியக் கரையோர வணிகம் முழுவதும் இவர்களிடமேயிருந்தது.[14]

இக்காலத்தில் (கி.பி.1505) கல்முனை. காரைதீவு, கரவாகு, நிந்தவூர், அட்டப்பள்ளம் (சிங்காரபுரி) காளிஓடை (களியோடை) செங்கற்படை, ஒலுவில், மீனோடைக்கட்டு, நாகமேடு ஆகிய இடங்களில் தமிழர் நாகரீகம் செழித்திருந்தது. இதற்குப் பிற்பட்ட காலத்திலேயே மட்டக்களப்பில் உள்நாட்டு வர்த்தகத்தில் தென்னிந்திய தமிழ்ச் செட்டிகளுடன் தென்னிந்திய முஸ்லீம்களும் ஈடுபடலாயினர். குறிப்பாக தென்னிந்திய தமிழ்செட்டிகளுடன் சேர்ந்து நற்பிட்டிமுனை கிட்டங்கிப் பகுதியில் வர்த்தக நிலையங்களை நிறுவி வர்த்தகம் புரிந்து வந்தனர். இதே காலகட்டத்தில் (கி.பி.1516-1580) தென்னிந்திய முஸ்லீம்களும் தமிழ்நாட்டு செட்டிகளும் சேர்ந்தே தென்கிழக்காசிய வாணிகத்தில் ஈடுபட்டனர் எனவும் மலாக்காவில் தங்கிய பெருவணிகர் கூட்டத்தல் இந்துக்களான செட்டிகளும் முஸ்லீம்களும் இருந்தனர் என பாபோசா (கி.பி.1516) குறிப்பிடுகின்றார்.[15]

இதேபோன்றே கி.பி.1545களில் கிட்டங்கி - நற்பிட்டிமுனை பகுதியில் அமைந்திருந்த வர்த்தக மையப் பகுதியில் தென்னிந்திய முஸ்லீம்களும் செட்டிகளும் தங்கியிருந்து வர்த்தகம் புரிந்து வந்தனர். இவர்கள் தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களாவர். இவ்வாறு வர்த்தகம் புரிந்து வந்த முஸ்லீம்கள் நாளடைவில் தமிழ்ப் பெண்களைத் திருமணம் புரிந்து வாழ்ந்து வரலாயினர். இத்தென்னிந்திய முஸ்லீம்கள் குறிப்பாக சம்மாந்துறை, நற்பிட்டிமுனை, மருதூர் (மருதமுனை) ஆகிய இடங்களைச் சேர்ந்த தமிழ் மங்கையரைத் திருமணம் புரிந்து வாழ்ந்து வந்தனரென அறியமுடிகின்றது. இக்காலத்தில் போர்த்துக்கேயர் தங்கள் செல்வாக்கை இலங்கையில் நிலை நிறுத்தியிருந்தனர்.

இதேவேளை மட்டக்களப்பை ஆட்சிபுரிந்து வந்த வன்னிய இராசாக்கள் சுதந்திரமுள்ள சிற்றரசர்களாகவே விளங்கி வந்தனர். கி.பி.1545-10-05ல் கண்டியில்

15. புதுமுறைச் சரித்திரம் II - பக்.52 ஆ.சபாரெத்தினம் - 1968
16. மட்டக்களப்புக் குகன் குல முற்குகர் வரலாறும் மரபுகளும் - பக்.35 ஞா.சண்முகம் -1999

தங்கியிருந்த 'அன்ரோனியோபெரையா' என்பவன் கோவாவிற்கு எழுதிய கடிதத்தில் மட்டக்களப்பு (அம்பாரையை உள்ளிட்ட) கண்டி மன்னனுக்கு உரியதல்ல எனத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.[16] இக்காலத்தில் மட்டக்களப்பை ஆட்சி புரிந்து வந்த வன்னிய இராசாக்கள் (பளுகாமம், சம்மாந்துறை, அட்டப்பள்ளம், பாணகை) கண்டி அரசர்களுடன் நல்லுறவு கொண்டவர்களாகவே இருந்து வந்தனர். இக்காலத்தில் (கி.பி.1545, 46 களில்) இன்றைய கல்முனை பிரதேசம் (செயலகப் பிரிவு) சம்மாந்துறை வன்னிய இராசாவின் ஆளுகையின் கீழிருந்தது. கல்முனைத் துறை பிரபல்யம் பெற்றிருந்தது. இதனூடாக உள்நாட்டு, வெளிநாட்டு போக்குவரத்து வர்த்தகம் என்பன சிறந்திருந்தன.

## எதிர்மன்னசிங்கன்

கி.பி.1550 - 1590 வரையுள்ள காலகட்டத்தில் மட்டக்களப்பில் ஆட்சிபுரிந்து வந்த வன்னிய இராசாக்களில் எதிர்மன்னசிங்கன் என்பவன் முதல்வனாகக் கருதப் படுகின்றான். பளுகாமத்திலிருந்து ஆட்சிபுரிந்து வந்த இவனது செல்வாக்கு மட்டக்களப்பு முழுவதிலும் பரந்திருந்தது. பாணகை, அட்டப்பள்ளம் (சிங்காரபுரி) சம்மாந்துறை, ஏறாவூர் ஆகிய இடங்களிலிருந்து ஆட்சி புரிந்து வந்த வன்னிய இராசாக்கள் இவனது சமூக, சமய, கலாசார, அரசியல் வழிகாட்டுதல்களை ஏற்றிருந்தனர். எதிர்மன்னசிங்கனது காலத்திலேயே பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயம் தோன்றியது. இவ்வாலயத் தோற்றத்தில் இவன் வகித்த பெரும் பங்கினை மட்டக்களப்பு மான்மியம் என்ற நூல் (பக்.57-59) விபரிக்கின்றது. இக்காலத்தில் (கி.பி.1550-1590) மட்டக்களப்பை ஆட்சிபுரிந்து வந்த வன்னிய இராசாக்கள் கோட்டை மன்னருக்கோ அன்றி கண்டி மன்னருக்கோ திறைசெலுத்தாத சுதந்திரமுள்ள சிற்றரசர்களாகவே ஆட்சிபுரிந்து வந்தனர்.[17]

## கண்டி மன்னன் முதலாம் விமலதர்மசூரியன் காலம்

இதற்குப் பிற்பட்ட காலத்தில் கண்டியரசானது தனியரசாகப் பலம் பெற்ற காலத்தில் மட்டக்களப்பு தமிழ் சிற்றரசுகள் , கண்டியரசின் மேலாதிக்கத்தைப் பெயரளவில் ஏற்றுக்கொண்டன. குறிப்பாக கண்டி மன்னனான விமலதர்மசூரியன் (கி.பி.1592 - 1604) காலத்தில் கண்டி தனி இராச்சியமாகி வலுவடைந்த வேளையிலேயே மட்டக்களப்பு வன்னிய இராசாக்கள் கண்டி மன்னனின் மேலாதிக்கத்தை ஏற்றனர். இதனைத் தொடர்ந்து கண்டி மன்னர்களுடன் இவர்கள் நல்லுறவு பூண்டவர்களாகவிருந்து வந்தனர். கண்டி மன்னனான முதலாம் விமலதர்மசூரியன் (கி.பி.1592-1604) சம்மாந்துறை பட்டினத்துக்கும் மட்டக்களப்பி லுள்ள முக்கிய இந்துக் கோயில்களுக்கும் விஜயம் செய்துள்ளான். இவ்வாறு வரலாற்றாசிரியர் பீ.ஈ.பீரிஸ் குறிப்பிடுகின்றார்.

கண்டி மன்னனான முதலாம் விமலதர்மசூரியன் தனது ஆட்சிக் காலத்தில் மட்டக்களப்புக்கு இருதடவைகள் விஜயம் செய்துள்ளான். இதனை வரலாற்றுக் குறிப்புகள் உணர்த்துகின்றன. இவ்வேளைகளில் சம்மாந்துறை வன்னிய இராசாவின் மாளிகையில் தங்கியிருந்த கண்டி மன்னன் திருக்கோவில், கொக்கட்டிச்சோலை, பாண்டிருப்பு ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்துள்ளான் என அறிய முடிகின்றது. கி.பி.1602ல் முதலாம் விமலதர்மசூரியன் மட்டக்களப்புக்கு விஜயம் செய்த போது டச்சுத் தளபதியான ''யோரிசு கபில்போர்கன்'' என்பவன் மட்டக்களப்பை வந்தடைந்து கண்டி மன்னனுடன் பேச்சுக்களை நடத்தினான் என வரலாற்றாசிரியர் எச்.டபிள்யு.கொடிறின்றன் குறப்பிடுகின்றார்.[18]

கி.பி.1602ம் ஆண்டு மே மாதம் 20ம் திகதியன்று ஸ்பல் போர்க் (யோரிசு கபில் போர்கன்) என்ற கப்பல் தளபதி மட்டக்களப்புக்கு சென்று அங்கிருந்த வன்னிச் சிற்றரசனின் உதவி பெற்றுக் கண்டியரசனான விமலதர்மனைக் கண்டான். அரசனும் அவனை மரியாதையுடனும் உவகையுடனும் வரவேற்று முகமன்கூறி நட்புரிமை கொண்டான். அத்துடன் அவன் விரும்பிய இடம் தோறும் கோட்டை கட்ட அனுமதி கொடுத்தான். இவ்வாறு முதலியார் செ.இராசநாயகம் குறிப்பிடுகின்றார்.[19] கி.பி.1602ல் விமலதர்மசூரியன் போர்த்துக்கேயருடன் சண்டையில் ஈடுபட்டிருந்த காலத்தில் ஒல்லாந்தரின் கடற்படையொன்று மட்டக்களப்பில் (கல்முனை) வந்து தங்கியது. இதன் தலைவனான யோன்

17. கி.பி.1580 களில் கோட்டை மன்னன் உரிமை கொண்டாடிய அரசுகள் பற்றி தருமபாலனின் கொடையோடு இணைக்கப்பட்ட பத்திரம் குறிப்பிடுகின்றது. இதில் மட்டக்களப்பு, பாணகை, வன்னிச் சிற்றரசுகளும் அடங்கியுள்ளன. (இலங்கையின் சுருக்கவரலாறு பக். 92 எச்.டபிள்யு.கொடிறின்றன் - 1960) இப்பத்திரம் இவ்வாறு குறிப்பிட்டபோதும் இக்காலத்தில் மட்டக்களப்பு வன்னிச் சிற்றரசுகள் சுதந்திரமுள்ள அரசுகளாகவே செயற்பட்டு வந்தன என்பது வரலாற்றுண்மையாகும்.

18. இலங்கையின் சுருக்க வரலாறு - பக்.101 எச்.டபிள்யு.கொடிறின்றன் - 1960
19. யாழ்பாணச் சரித்திரம் - பக்.163 முதலியார் செ.இராசநாயகம் - 1933
20. புதுமுறைச் சரித்திரம் - பகுதிI,II - பக்.76 V.S.S.ராம் T.V.K.மூர்த்தி - 1961

சுவான் கபில் பேர்கன் விமலதர்மனை சந்தித்தது. போர்த்துக்கேயருக்கு எதிராக உதவி செய்வதாய் கூறி பல பொருட்களையும் வெகுமதிகளாகக் கொடுத்துச் சென்றான். இவ்வாறு புதுமுறை சரித்திரம் கூறுகின்றது.[20]

இவ்வரலாற்றுச் செய்திகளை ஆராயுமிடத்து கண்டி மன்னனான முதலாம் விமலதர்மசூரியன் கி.பி.1602ல் சம்மாந்துறைக்கு விஜயம் செய்து வன்னிய இராசாவின் மாளிகையில் தங்கியிருந்த வேளையில் கல்முனைத் துறையை வந்தடைந்த டச்சுத் தளபதியான கபில் பேர்கன் சம்மாந்துறை வன்னிச் சிற்றரசனின் உதவியுடன் கண்டி மன்னனை சந்தித்து பேச்சுக்கள் நடத்தியுள்ளான் என அறிய முடிகின்றது. இதனைத் தொடர்ந்து கி.பி.1603ல் விமலதர்மசூரியன் மட்டக்களப்புக்கு வருகை தந்து சம்மாந்துறையில் தங்கியிருந்த வேளையில் சம்மாந்துறை வன்னிய ராசாவின் உதவியுடன் திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயம், கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர், பாண்டிருப்பு திரௌபதியம்மன் ஆகிய ஆலயங் களுக்கு விஜயம் செய்து ஆலயத் திருப்பணிகளுக்கு நன்கொடைகள் வழங்கி யுள்ளான். இதனைப் பட்டயங்கள் கூறும்.[21]

முதலாம் விமலதர்மசூரியன் கி.பி.1603ல் திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயத்திற்கு விஜயம் செய்தவேளையில் ஆலய வருடாந்த உற்சவம் சிறப்பாக நடந்து கொண்டிருந்தது.[22] இக்காலத்தில் மட்டக்களப்பு என்ற பெயருடன் சிறப்புடன் விளங்கியிருந்த சம்மாந்துறைப் பிரதேசம் தமிழர்களைத் தனிப்பெரும்பான்மை யினராகக் கொண்டிருந்தது. முதலாம் விமலதர்மசூரியன் காலம் தொடக்கம் சம்மாந்துறைக்கும் கண்டிக்குமிடையில் நெருக்கமான உறவுகள் நிலைவியிருந்தன. இதனை வரலாற்றாய்வுகள் உறுதி செய்கின்றன. முதலாம் விமலதர்மசூரியனுக்குப் பின் செனரதன் (கி.பி.1605-1635) என்பவன் கண்டி மன்னனானான். இவனது காலத்தில் போர்த்துக்கேயர் தங்கள் ஆதிக்கத்தை மட்டக்களப்பிலும் நிலை நிறுத்த முயற்சிகள் மேற்கொண்டிருந்தனர்.

இவ்வேளையில் மட்டக்களப்பை (அம்பாரையை உள்ளடக்கிய) ஆட்சி புரிந்து வந்த வன்னிய இராசாக்கள் கண்டி மன்னனுக்கே தங்கள் ஆதரவை

21. பாண்டிருப்பு திரௌபதியம்மன் ஆலயத்துக்கு முதலாம் விமலதர்மசூரியன் வழங்கிய நன்கொடைகள் பற்றி தாதன் கல்வெட்டு விபரிக்கின்றது.
22. போர்த்துக்கீசர் கால இலங்கை - பக்.323 பீ.ஈ.பீரிஸ்
22A.கி.பி.1615ல் வீரமுனை சிந்தாத்திரை பிள்ளையார் ஆலயத்துக்கு செனரதன் அளித்த தானம் பற்றி வீரமுனைச் செப்பேடு குறிப்பிடுகின்றது. (கா.இந்திரபால - 1968)



அளித்து வந்தனர். இவ்வன்னிராசாக்களில் சம்மாந்துறை, பளுகாமம் ஆகிய பிரதேசங்களிலிருந்து ஆட்சிபுரிந்து வந்த சிற்றரசர்கள் (வன்னிச்சிற்றரசன்) குறிப் பிடத்தககவர்கள். [22A]

கி.பி.1623ல் இலங்கையில் போர்த்துக்கீசத் தளபதியாகவிருந்த கொன்ஸ்தைன்டிசா என்பவன் மட்டக்களப்பில் கோட்டையொன்றைக் கட்டினான். இவ்வேளையில் இவன் தனது ஆட்சிக்குட்பட்டிருந்த இடங்களில் வாழ்ந்து வந்த முஸ்லீம் மக்களை வெளியேற்றினான். இச்செயலானது நான்காம் பிலிப்பு (கி.பி.1621-1640) மன்னனின் கட்டளைப்படியே நடைபெற்றது. சோனகர் தனது நாடுகளில் குடியிருக்கக் கூடாதென்பது அவனது விருப்பமாகும். இக்காலத்தில் முஸ்லீம்கள் இலங்கையில் உள்நாட்டு வியாபாரம் நடத்தி வந்ததோடு போர்த்துக்கீசக் கப்பல்களில் மாலுமிகளாகவும் இருந்து வந்தனர். போர்த்துக்கீச நாடுகளில் இவர்கள் இருக்கக் கூடாதென கட்டளை பிறப்பித்ததும் முஸ்லீம்கள் கண்டி இராச்சியம் சென்றனர்.[23]

இக்காலத்தில் கிழக்கு மாநிலம் தவிர்ந்த இலங்கையின் கரையோரப் பகுதிகள் போர்த்துக்கீசரின் ஆதிக்கத்தின் கீழிருந்தன. கிழக்கு மாகாணத்தில் வன்னிய இராசாக்கள் ஆட்சிபுரிந்து வந்தனர். இவர்கள் கண்டி மன்னனின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்தனர். இவ்வேளையில் போர்த்துக்கீசரின் ஆளுகைக் குட்பட்டிருந்த இடங்களிலிருந்து வெளியேறிய முஸ்லீம்கள் கண்டி மன்னனான செனரதனிடம் சென்று சரணடைந்தனர். அப்படி வந்தவர்களில் நாலாயிரம் பேரை கி.பி.1626ல் செனரதன் மட்டக்களப்பில் குடியேற்றினான். ஏனையோரை மத்திய நாட்டில் ஆங்காங்கே குடியேற்றினான்.[24] இன்று மத்திய நாட்டில் ஆங்காங்கே முஸ்லீம் கிராமங்கள் காணப்படுவதையும் நோக்கலாம்.

## வன்னிராசாக்களின் உதவியுடன் நடந்த குடியேற்றம்

கண்டி மன்னனான செனரதன் தனது ஆட்சிக்குட்பட்டிருந்த மட்டக்களப்புக்குத் தெற்கே முஸ்லீகளைக் குடியேற்றியதைத் தொடர்ந்து இவர்கள் வியாபாரத்தைக் கைவிட்டுத் தங்கள் ஜீவனோபயத்தின் பொருட்டு நெற்செய்கையில் ஈடுபடத்

23. நம்முன்னோரளித்த அருஞ்செல்வம் பாகம்II - பக்177 பேராசிரியர் எஸ்.ஏ.பேக்மன் ஜீ.சி.மென்டிஸ் - 1966
24. யாழ்ப்பாண சரித்திரம் - பக்.144. முதலியார் செ.இராசநாயகம் - 1933
25. இலங்கைச் சரித்திரம் பாகம் I - பக்.31,32 எஸ்.எவ்.டிசில்வா - 1952

தொடங்கினர்.[25] இதனை வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. கி.பி.1626ல் செனரதனால் மேற்கொள்ளப்பட்ட முஸ்லீம் குடியேற்றம் பற்றி ஆராயுமிடத்து மட்டக்களப்பு வன்னிய இராசாக்கள் உதவியுடனேயே இக்குடியேற்றம் மேற் கொள்ளப்பட்ட தென அறியமுடிகின்றது. குறிப்பாக அக்காலத்தில் சம்மாந்துறை யிலிருந்து ஆட்சி செலுத்தி வந்த வன்னிய இராசாவின் உதவியுடனேயே இக்குடியேற்றம் நிகழ்ந்துள்ளது. கண்டியிலிருந்து அகதிகளாக வந்திருந்த முஸ்லீம் மக்களில் பெரும்பகுதியினரை சம்மாந்துறை வன்னியராசா தனது ஆட்சியின் கீழிருந்த இடங்களில் அவர்களுக்கு நிலங்கள் வழங்கிக் குடியேற்றினான் என்பதே வரலாற்றுண்மையாகும். தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்து வந்த இடங்களில் முஸ்லீம் மக்களும் குடியேறித் தமிழ் மக்களுடன் ஒற்றுமையாக வாழ்ந்து வந்ததுடன் இப்பிரதேசத் தமிழ் மக்களது பாரம்பரியத் தொழிலான நெற்பயிர்ச் செய்கையிலும் தமிழ் மக்களுடன் இணைந்து ஈடுபட்டு வரலாயினர். செனரனது காலத்தில் மட்டக்களப்புக்கு தெற்கேயுள்ள கல்முனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது ஆகிய இடங்களில் முஸ்லீம்கள் குடியேற்றப்பட்ட வேளையில் (கி.பி.1626) இந்த இடங்களில் தமிழும் சைவமும் செழித்திருந்தன.[26]

இக்காலத்தில் (கி.பி.1626) மட்டக்களப்பைக் கைப்பற்றித் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்குப் போர்த்துக்கேயர் முயற்சிகள் மேற்கொண்டிருந்தனர். இவர்களுக்கு எதிராகச் சம்மாந்துறை, பளுகாமம் ஆகிய இடங்களிலிருந்து ஆட்சி புரிந்து வந்த வன்னிய இராசாக்கள் போராடிவந்தனர். கி.பி.1630ல் போர்த்துக்கேயர் மட்டக்களப்பைக் கைப்பற்றினர். இவ்வேளையில் போர்த்துக்கேய ரிடமிருந்து மட்டக்களப்பை மீட்டெடுப்பதற்காக கண்டி மன்னனான செனரதன் எடுத்த முயற்சி கைகூடாமல் போய்விட்டது. போர்த்துக்கேயத் தளபதியாக விருந்த கொன்ஸ்ரைன்டிசா (கி.பி.1618-1630) நீண்ட காலமாக சம்மாந்துறை, பளுகாமம்

26. தற்காலத்தில் இந்த இடங்களில் செனரதனின் காலத்தில் குடியேற்றப்பட்ட முஸ்லீம்களின் சந்ததியினர் நிறைந்து வாழ்ந்து வருகின்றனர். மேலும் தற்காலத்தில் கிழக்கிலங்கையின் பல இடங்களிலும் முஸ்லீம் மக்கள் செறிந்து வாழ்ந்து வருவதற்கு அக்கால கட்டத்தில் (1626) நிகழ்ந்த செனரத மன்னனது அகதிகள் குடியேற்றமே காரணமாகும்.

27. போர்த்துக்கீசர் கால இலங்கை - பக்.323 பீ.ஈ.பீரிஸ்
கண்டி மன்னனது மேலாதிக்கத்தை ஏற்றிருந்த போதும் சுதந்திரமுள்ள சிற்றரசர்களாகச் செயற்பட்டு வந்த இவர்கள் கண்டி மன்னனுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வந்தமையினாலேயே போர்த்துக்கேயரால் வஞ்சகமாகக் கொல்லப்பட்டனர்.



ஆகிய இடங்களிலிருந்து ஆட்சி செலுத்தி வந்த வன்னிய இராசாக்களை கொலை செய்தான். இவர்களது மாளிகைகளும் இவனால் சூறையாடப்பட்டன.[27]

## இரண்டாம் இராசசிங்கனிடம் மட்டக்களப்பு கையளிப்பு

இதே ஆண்டில் (1630) போர்த்துக்கேயனான கொன்ஸ்ரைன்டிசா கண்டியை நோக்கிப் படையெடுத்த வேளை அவனது படையெடுப்பு தோல்வியில் முடிந்தது. வெள்ளவாயாவில் செனரதன் டிசாவைத் தாக்கினான். இச்சண்டையில் போர்த்துக் கேயப் படைகள் அனேகர் கொல்லப்பட்டனர். மிகுதியானோர் கைது செய்யப் பட்டனர். கொன்ஸ்ரைன்டிசா தனது படை வீரனொருவனால் தவறுதலாகச் சுடப்பட்டுக் கொல்லப்பட்டான்.[28] செனரதனுக்கு பின் கண்டிக்கு மன்னனான இரண்டாம் இராசசிங்கன் (கி.பி.1635-1687) தனக்கு உதவுமாறு ஒல்லாந்தரைக் கேட்க அவர்கள் போர்த்துக்கேயரிடமிருந்து மட்டக்களப்பைக் கைப்பற்றி இரண்டாம் இராசசிங்கனிடம் கையளித்தனர். கி.பி.1636ல் வெசுடர்வோல்டு என்ற ஒல்லாந்த கடற்படைத் தளபதி கல்முனை(துறை) யில் இறங்கி மட்டக்களப்பை கைப்பற்றியதாக வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன.[29]

இதனைத் தொடர்ந்து போர்த்துக்கேயரால் 1630ல் கொலை செய்யப்பட்ட சம்மாந்துறை, பளுகாமம் வன்னிராசாக்களின் வாரிசுகளான வன்னியர்கள் இந்த இடங்களிலிருந்து ஆட்சிபுரிந்து வரலாயினர். இவர்கள் கண்டி மன்னனான இரண்டாம் இராசசிங்கனுடன் நெருக்கமான உறவுகள் கொண்டிருந்தனர். இரண்டாம் இராசசிங்கன் சம்மாந்துறை பட்டினத்துக்கும் பளுகாமத்திற்கும் விஜயம் செய்துள்ளான். மட்டக்களப்பு தமிழகமெங்கும் இவனது செல்வாக்குப் பரந்திருந்தது. இதனை இவனது காலத்தில் உருவான இலக்கியங்கள் தெளிவுறுத்துகின்றன.

## மட்டக்களப்பில் ஒல்லாந்தர் ஆட்சியும் வன்னிராசாக்களும்

இவனது ஆட்சிக்காலத்தில் (கி.பி.1635-1687) ஒல்லாந்தர் தங்கள் ஆதிக்கத்தை மட்டக்களப்பில் செலுத்தியிருந்த வேளையில் (கி.பி.1638-1672) மட்டக்களப்பு

28. நம்முன்னோரளித்த அருஞ்செல்வம் - பாகம் II - பக்.178 பேராசிரியர் எஸ்.ஓ.பேக்மன் ஜி.சி.மெண்டிஸ் - 1966

29. புதுமுறைச் சரித்திரம் பகுதி I,II - பக்.107 V.S.S. ராம் T.V.K.மூர்த்தி - 1961
இலங்கைச் சரித்திரம் பகுதி I - பக்.59, 60 எஸ்.எவ்.டிசில்வா - 1952

30. மட்டக்களப்பு குகன் குல முக்குகர் வரலாறும் மரபுகளும்- பக்.40.ஞா.சிவசண்முகம்2000

31. யாழ்பாண இராச்சியம் -பக்iV பதிப்பாசிரியர் சி.க.சிற்றம்பலம் - 1992

வன்னிச் சிற்றரசர்கள் (ஏறாவூர், பளுகாமம், சம்மாந்துறை, அட்டப்பள்ளம், பாணகை) கண்டி மன்னனுக்கு விசுவாசமாகவிருந்து வந்ததுடன் இவர்கள் ஒல்லாந்தருக்கெதிராகப் போராடியும் வந்தனர். இவ்வன்னிராசாக்களை மன்னர்கள் என்றே டச்சுச் சரித்திர ஆசிரியர் பிலிப்பஸ் வால்டியஸ் என்பவர் குறிப்பிடுகின்றார்.[30] மேலும் டச்சு ஆட்சியில் முதல் தேசாதிபதியாகவிருந்த ''வான் கூவன்ஸி'' (கி.பி.1660-1675) பழைய மலபார் (தமிழ்) அரசர்கள் ஆதிக்கம் கிழக்குப் பகுதியில் பாணகை வரை பரந்திருந்ததெனக் குறிப்பிடுகின்றார்.[31]

வான் கூவன்ஸி இரண்டாம் இராசசிங்கன் ஆங்கிலேயரோடு சகவாசஞ் (உறவு) செய்யாது மட்டக்களப்பு துறைமுகத்தை காவல் செய்தான். (மு.இளையதம்பி- 1954) மட்டக்களப்பு கோட்டையையும் ஒல்லாந்தர் பலப்படுத்தினர். இக்காலத்திலேயே வாவியின் வடக்குப் பகுதியிலுள்ள புள்ளியந்தீவு, மண்முனை வடக்கு பகுதிகள் அடங்கிய பிரதேசம் மட்டக்களப்பு என அழைக்கப்படலாயிற்று. இது காலவரையும் மட்டக்களப்பு என்ற பெயருடன் நகரப் பகுதியாகச் சிறப்புடன் மிளிர்ந்து வந்தது இன்றைய சம்மாந்துறைப் பிரதேசமேயாகும் (பிரதேச செயலகப் பிரிவு) இக்காலத்தில் சம்மாந்துறை, பளுகாமம் ஆகிய இடங்களிலிருந்து ஆட்சி புரிந்துவந்த வன்னிய இராசாக்கள் கண்டி மன்னனுடன் நெருங்கிய உறவுகள் கொண்டிருந்தனர்.

கண்டி மன்னன் இரண்டாம் இராசசிங்கன் சம்மாந்துறையுடன் கொண்டிருந்த நெருக்கமான உறவினை சம்மாந்துறை செப்பேடுகளும் உறுதி செய்கின்றன. சம்மாந்துறையைச் சேர்ந்த இராமநாதர் என்ற பிராமணருக்கு கி.பி.1683 ஏப்ரல் 26ல் இரண்டாம் இராசசிங்கனால் அளிக்கப்பட்ட நன்கொடை பற்றி இச்செப்பேடுகள் விபரிக்கின்றன.[32] இரண்டாம் இராசசிங்கனுக்குப் பின்னர் கண்டி மன்னனான இரண்டாம் விமலதர்மசூரியன் (கி.பி.1687-1706) சமாதானப் பிரியனாவான். இவன் ஒல்லாந்தருடன் நட்பாகவிருந்ததுடன் மட்டக்களப்பு துறைமுகத்தினூடாக வியாபாரம் செய்யும் உரிமையையும் பெற்றுக்கொண்டான்.

இதனைத் தொடர்ந்து கண்டி மன்னனும் மக்களும் இத்துறைமுகத்தினூடாக வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டு வரலாயினர். விமலதர்மசூரியனுக்குப் பின்

32. ஈழநாட்டுத் தமிழ் சாசனங்கள் - 3 கிழக்கிலங்கை சாசனங்கள் (கட்டுரை) திரு.கா.இந்திரபால - 1968 சிந்தனை மலர் 2 இதழ் 2, 3



வீரநரேந்திரசிங்கன் (கி.பி.1706-1739) என்பவன் கண்டியை ஆட்சி புரிந்தான். கண்டி இராச்சியத்தை ஆட்சி புரிந்த கடைசிச் சிங்கள மன்னனான இவன் தாய் வழியில் தமிழனாவான். இவன் மதுரை நாயக்கர் குலத்தை சேர்ந்த தமிழ் அரசியைத் தன் தேவியாகக் கொண்டிருந்தான். வீரநரேந்திரசிங்கனின் மறைவையடுத்து இவனின் மைத்துனனும் இராணியின் சகோதரனுமான ஸ்ரீ விஜயராசசிங்கன் (1739-1747) கண்டி மன்னனானான். நாயக்கர் குலத்தவனும் தமிழனுமான இவன் மதுரையைச் சேர்ந்த தமிழ் அரசியை மணந்து கொண்டான்.

இம்மன்னது காலத்தில் தமிழகத்திலிருந்து பெருமளவு தமிழ் மக்கள் வந்து கண்டியில் குடியேறினர். இக்காலத்தில் மட்டக்களப்பு அரசியல் விடயங்களில் ஒல்லாந்தர் தலையிட்டிருந்தபோதும் கண்டி மன்னது செல்வாக்கே இப்பிரதேசத்தில் நிலைத்திருந்தது. கண்டி இராச்சியத்தை ஆட்சி புரிந்த இரண்டாம் விமலதர்மசூரியன் வீரநரேந்திரசிங்கன் ஸ்ரீ விஜயராசசிங்கன் ஆகியோர் மட்டக்களப்புடன் கொண்டிருந்த நெருக்கமான உறவுகள் பற்றி அக்கால கட்டத்தில் தோன்றிய மட்டக்களப்பு கிராமிய இலக்கியங்கள் தெளிவுறுத்துகின்றன. இம்மன்னர்களது காலத்தில் சம்மாந்துறை பிரதேசம் வன்னியர் என்ற தமிழ் சிற்றரசர் ஆட்சியின் கீழ் சிறப்புடன் விளங்கியிருந்தது.

## கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் காலம்

ஸ்ரீ விஜயராசசிங்கனின் மறைவையடுத்து கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் (கி.பி.1747-1781) என்ற நாயக்கர் குலத்தவன் கண்டி மன்னனானான். இவன் மதுரையிலிருந்து இரு தமிழ் அரசிகளையும் தஞ்சையிலிருந்து இருதமிழ் அரசிகளையும் மணம் செய்திருந்தான்.[33] இவன் ஆட்சிக்கு வந்தவேளையில் மட்டக்களப்பை ஏழு வன்னியர்கள் ஆட்சிபுரிந்து வந்தனர். இந்த எழுவருக்கும் முதல்வனாக நாதனை (வெல்லாவெளி பிரதேசம்) வன்னியன் விளங்கி வந்தான். வன்னிராசாக்கள் கூடும் இடமாக சிங்கராவத்தை விளங்கி வந்தது. தற்போதைய ''அட்டப்பள்ளமே''

33. தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயர் ஆய்வும் - பக்.62. கதிர் தணிகாசலம்-1992

34. கி.பி.பதினாலாம் நூற்றாண்டு தொடக்கம் சிங்காரபுரியை (அட்டப்பள்ளம் ) தமது இராசதானியாகக் கொண்டு நிந்தவூர் பிரதேசத்தை வன்னிய இராசாக்கள் ஆட்சி புரிந்து வந்துள்ளனர். இத்தமிழ் சிற்றரசர்களது ஆட்சிக் காலத்தில் இப்பிரதேசத்தில் தமிழும் சைவமும் செழித்திருந்தன என்பதற்கு இலக்கியத் தொல்லியல் சான்றுகள் உள்ளன.

35. புதுமுறைச் சரித்திரம் பகுதிII - பக்.129, 130 V.S.ராம் T.V.K. மூர்த்தி - 1961

அக்காலத்தில் சிங்காரவத்தை - சிங்காரபுரி என அழைக்கப்பட்டு வந்த தமிழ் இராசதானியாகும்.[34]

நாயக்கர் குலத்தவனும் தமிழனுமான கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் ஆட்சிக்கு வந்ததும் கண்டியில் தமிழரது செல்வாக்கு அதிகரித்திருந்தது. இவன் இந்து ஆலயங்கள் பலவற்றை நிர்மாணித்தான். இவ்வேளையில் கண்டி கலகம் ஒன்று ஏற்பட்டது. இதனை இவனது தளபதியான கோபால முதலியார் என்பவர் அடக்கி வைத்தார்.இதற்குக் கைமாறாக கண்டிமன்னன் இவருக்கு நிலங்கள் வழங்கினான்[35]. இதேபோன்று தான் ஆட்சிக்கு வந்த காலத்தில் தனக்கு விசுவாசமாகவிருந்து வந்தவர்களுக்குக் கைமாறாக நிலங்களும் வெகுமதிகளும் கீர்த்தி ஸ்ரீ இராச சிங்கன் அளித்துள்ளான். இவர்களில் 'இராஜபக்ஷமுதலி' என்பவரும் ஒருவராவர். இவருக்கு மட்டக்களப்பு தமிழகத்தில் நிலம் வழங்கியதுடன் சிங்கள மக்களைக் குடியேற்றவும் இவன் ஆதரவளித்தான்.

கண்டி மன்னனான கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் ஆட்சிக்கு வந்த காலத்தில் (கி.பி.1747ல்) கண்டி இராச்சியத்துக்கும் மட்டக்களப்புக்கும் (அம்பாரை உள்ளிட்ட) நடுவில் காடாகவிருந்ததும் தெற்கே களிகாமத்து மலை தொடக்கம் வடக்கே வெல்லாவெளி பிரதேசம் வரை பரந்திருந்ததும் அம்பாரை, கொன்றைவட்டான், இறக்காமம், பொத்தானை ஆகிய பகுதிகளை உள்ளடக்கியிருந்ததுமான பெரும் பிரதேசத்தையே கண்டி மன்னன் இராஜபக்ஷ முதலியாருக்கு அளித்தான். இதனை பரவணிக்கல்வெட்டு மூலமாக அறிய முடிகின்றது.[36] இப்பிரதேசத்தில் சிங்களவரான இராஜபக்ஷ முதலியார் வன்னிச் சிற்றரசர்களது ஆதரவுடன் மேற்கொண்ட சிங்களக் குடியேற்றம் பற்றி பரவணிக்கல்வெட்டு விபரிக்கின்றது.

அக்காலத்தில் சம்மாந்துறை வன்னிச் சிற்றரசனின் ஆட்சியின் கீழ் 'நடுக்காடு' என்ற பெயருடன் விளங்கி வந்த இப்பிரதேசத்தில் கி.பி.1749, 50 களில் உரசவேகாமம், கடவத்தை, கொன்றைவட்டான், பள்ளவெளி, திவீளானை, பொத்தானைவெளி, வம்மியடி ஆகிய இடங்களில் சிங்கள மக்கள் குடியேறி வாழ்ந்து வந்தவேளையில் இவர்களைத் தொடர்ந்து சில முஸ்லீம் குடும்பங்களும் இந்த இடங்களில் வந்து குடியேறி வாழ்ந்து வந்தனர். இவ்வேளையில் கண்டி

36. கி.மு.நாலாம், மூன்றாம் நூற்றாண்டுகளில் பாண்டிய குலத்துத் தமிழ் அரசர்கள் ஆட்சியின் கீழ் தமிழும் சைவமும் சிறப்புடன் விளங்கியிருந்த சந்தணகாமம் என்ற ஆட்சிப்பிரதேசம்



மன்னனான கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் தனது பரிவாரங்களுடன் மட்டக்களப்புக்கு நாடுகாண வந்திருந்தான். அப்போது சிங்கள மக்களையும் காணவேண்டிக் குடியேற்றப் பகுதிகளுக்கும் அவன் விஜயம் செய்ததாக பரவணிக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

இப்வேளையில் சிங்களமக்கள் குடியேறியிருந்த பகுதியில் வாழ்ந்து வந்த முஸ்லீம் மக்களின் தலைவனாகக் கருதப்பட்ட அவுக்கன் என்பவர் தனக்கும் தன்னுடன் வந்து குடியேறி வாழ்ந்து வந்த ஏழு குடிகளைச் சேர்ந்த முஸ்லீங் களுக்கும் குடியிருக்க காணிகள் தந்துதவுமாறு பணிவுடன் கண்டி மன்னனைக் கேட்டார். இதனைத் கருத்தில் கொண்ட கண்டி மன்னன் கடிதம் ஒன்றை வரைந்து அதனைச் சிங்காரவத்தையிலிருக்கும் (அட்டப்பள்ளம்) வன்னிய ராசாக்களிடம் கொடுக்குமாறு பணித்தார். கடிதத்தைப் பெற்றுக்கொண்ட அவுக்கன் சிங்காரவத்தை யில் கூடியிருந்த வன்னிச் சிற்றரசர்களிடம் அதனைச் சமர்ப்பிக்க அவர்கள் அணுக்கன்வெளி என்ற இடத்தில் காணி வழங்கி முஸ்லீம் மக்கள் ஏழு குடியினரை யும் குடியேற்றினர். இவ்வாறு பரவணிக்கல்வெட்டு மேலும் குறிப்பிடுகின்றது.[37]

இக்காலத்தில் குறிப்பாக கி.பி.1750, 51களில் வன்னிய இராசாக்களால் இறக்காமத்துக்கும் காளியோடைக்கும் இடையிலுள்ள அணுக்கன்வெளியை யொட்டிய இடத்தில் குடியேற்றப்பட்ட முஸ்லீம் மக்கள் ஏழுகுடியினரும் புத்தளப் பகுதியைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் புத்தளத்தில் மதம் மாறிய முற்குவரில் ஒரு பகுதியினர் என அறியமுடிகின்றது.[38] இந்த ஏழு குடி மக்களும் அணுக்கன் வெளியையொட்டிய இடத்தில் குடியேறி வாழ்ந்து வந்த காலத்தில் அட்டாளைச் சேனை (மீனோடைக்கட்டு) அக்கரைப்பற்று (கருங்கொடித்தீவு) ஆகிய பகுதிகளில் தமிழர்களே தனிப்பெரும்பான்மையினராக வாழ்ந்து வந்தனர். தமிழும் சைவமும்

37. வன்னியர் - பக்.45 கலாநிதி சி.பத்மநாதன் - 1970 இங்கு குடியேறியிருந்தவர்களில் பொன்னாச்சி, இராசாம்பிள்ளை, வரிசைநாச்சி, முகாந்திரநாச்சி, மாலைகட்டிக்குடியார், கிணிக்கருத்தன் குடி, பணியவீட்டுக்குடி ஆகிய குடிகள் அடங்குவர்.

38.சிலோன் ஒப்சவர் - பெப்15 , 1953 M.D. ராகவன் இனவரலாற்று வல்லுனர்

39. அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை ஆகிய பிரதேசங்களில் இவர்களது சந்ததியினர் பெருமளவில் வாழ்ந்து வருகின்றனர். அக்கரைப்பற்று பெரிய பள்ளி வாசல் ஜமாஅத்தில் பணியவீட்டுக் குடியினர் அதிகமாகச் செறிந்திருப்பதும் பொன்னாச்சி குடி இங்கு காணப்படுவதும் மனங்கொள்ளத்தக்கது. (அக்கரைப்பற்று வரலாறு பக்.45 ஏயாரெம் சலீம்-1990) அக்கரைப்பற்று , அட்டாளைச்சேனை ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்து வரும் இவர்கள் (ஏழுகுடி) தமிழ் மொழிமீது ஆழ்ந்த பற்றுடையோராக வாழ்ந்து வருவதுடன் தமிழ் இலக்கிய வளர்ச்சியிலும் பெரும் பங்கினை வகித்து வருகின்றனர்.

இப்பகுதிகளில் செழித்திருந்தன. இலக்கியத் தொல்லியல் சான்றுகள் இதனை உணர்த்துகின்றன.

இதற்குப் பிற்பட்ட காலத்திலேயே அனுக்கன் வெளியில் வாழ்ந்து வந்த முஸ்லீம் மக்கள் அங்கிருந்து படிப்படியாக இடம் பெயர்ந்து தமிழர் நாகரீகம் செழித்திருந்த அட்டாளைச்சேனையிலும் அதனைத் தொடர்ந்து பழந்தமிழ்க் கிராமமான கருங்கொடித்தீவிலும் குடியேறினர்.[39] இதனை ஆய்வுகள் மூலமாக அறியமுடிகின்றது.

### ஒல்லாந்தர் ஆட்சியில்

கி.பி.1766ல் கண்டி மன்னனான கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் கண்டி இராச்சியத்தின் கீழிருந்த கரையோரப் பிரதேசங்கள் ஒல்லாந்தர் வசமாயின. ஒல்லாந்தர் மட்டக்களப்பை (அம்பாரையை உள்ளடக்கிய) இரு மாகாணங்களாகப் பிரித்து நிர்வகித்து வந்தனர். இவர்களது ஆட்சி கி.பி.1798 வரை நிலவியிருந்தது. இக்கால கட்டத்தில் (கி.பி.1766-1798) ஒல்லாந்த அரசின் ஆளுநர்களாக மட்டக்களப்பின் வடபகுதிக்கு திரு அறுமக்குட்டிப்போடி என்பவரும் தென்பகுதிக்கு (பாணமை) திரு.கந்தப்போடி என்பவரும் ஒல்லாந்த அரசால் நியமிக்கப் பட்டிருந்தனர் இக்கால கட்டத்தில் சம்மாந்துறை வன்னிப்பிரதேசம், ஒல்லாந்த ஆட்சியாளனாகிய (கவர்னர்) திரு.கந்தப்போடி என்பவரது ஆளுகையின் கீழிருந்த போதும் இப்பிரதேசத்தில் சம்மாந்துறை வன்னியராசாவின் ஆதிக்கமே நிலைத்திருந்த தெனலாம். இதற்கான காரணம் கண்டி மன்னருடன் சம்மாந்துறை வன்னியராசா கொண்டிருந்த நெருக்கமான உறவுகளும் அவற்றின் பயனாக இப்பிரதேச மக்கள் பெற்று வந்த சமூக, சமய, கலாசார உதவிகளுமாகும்.

கி.பி.1766ல் ஒல்லாந்தரது ஆட்சியின் கீழ் மட்டக்களப்பு வந்ததைத் தொடர்ந்து நடுக்காடு (கல்லோயா) பிரதேசக் குடியேற்றப் பகுதிகளான உசரவேகாமம், கடவத்தை, கொன்றைவட்டான், பள்ளவெளி, திவிளானை, பொத்தானைவெளி, வம்மியடி ஆகிய இடங்களில் வாழ்ந்து வந்த சிங்கள மக்கள் இந்த இடங்களில் இருந்து இடம் பெயர்ந்து வேறிடங்களுக்குச் சென்றனர். இதனைத் தொடர்ந்து நடுக்காடு பிரதேசம் (பட்டிப்பளை) மீண்டும் காடாக மாறத் தொடங்கியதென அறியமுடிகின்றது. கண்டி மன்னனான கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கனது ஆட்சிக்



காலத்திலேயே குறிப்பாக கி.பி.1766 - 1781ம் ஆண்டுக் கிடைப்பட்ட காலத்திலேயே இவை நிகழ்ந்ததென்பதை பரவணிக்கல்வெட்டு உணர்த்துகின்றது.

### ஆதிக்கம் செலுத்த முடியாத நிலையில்

கி.பி.1766 - 1798 வரையுள்ள ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் பெயரளவில் அவர்களது அரசியல் அதிகாரம் நிலைத்திருந்தபோதும் வன்னிச் சிற்றரசர்களது ஆட்சியே மட்டக்களப்பில் நிலவியிருந்தது. மட்டக்களப்பில் (அம்பாரையை உள்ளடக்கிய) ஒல்லாந்த அரசின் பிரதிநிதிகளாக (ஆட்சியாளர்கள்) விருந்து வந்த திரு அறுமக்குட்டிப்போடி, திரு கந்தப்போடி ஆகியோருக்கும் வன்னிச் சிற்றரசர்களுக்குமிடையில் நிலவியிருந்த இனரீதியான புரிந்துணர்வு , ஒற்றுமை என்பன இதற்குக் காரணிகளாக விருந்தன. மேலும் வன்னிச் சிற்றரசர்களும் ஒல்லாந்த ஆளுநர்களான நிலமைப்போடிகளும் சைவத்தையும் தமிழ்ப் பண்பாட்டையும் பேணிக் காத்து வந்ததுடன் கண்டி மன்னருடன் நல்லுறவுகளையும் கொண்டிருந்தனர்.

செட்டிபாளையத்தில் கண்ணகி அம்மன் ஆலயத்தை திரு.அறுமக்குட்டிப் போடியாரே அமைத்தார் என மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடும்.[40] இந்நிலையில் வன்னிச் சிற்றரசுகள் மீது தனது முழுமையான ஆதிக்கத்தைச் செலுத்த முடியாத நிலையிலேயே ஒல்லாந்த அரசு இருந்ததென்பது வரலாற்றுண்மையாகும். கண்டி மன்னனான இராசாதி இராசசிங்கனின் (கி.பி.1781-1798) முடிசூட்டு விழாவில் ஒல்லாந்த அரசின் ஆளுனர்களான திரு அறுமக்குட்டிப் போடியும் திரு கந்தப் போடியும் வன்னிச் சிற்றரசர்களும் சென்று கலந்து கொண்டதுடன் கண்டி மன்னனுக்கு பரிசுகளும் வழங்கியுள்ளனர். இராசாதி இராசசிங்கன் தனது ஆட்சிக்

40. மட்டக்களப்பு மான்மியம் - பக்.69 பதிப்பாசிரியர் எப்.எக்ஸ்.நடராசா - 1962
இதற்கு முந்திய காலத்திலேயே செட்டிபாளையத்தில் கண்ணகி வழிபாடு (ஆலயம்) இருந்துள்ளது. கண்டி மன்னனான ஸ்ரீ வீரநரேந்திரசிங்கனின் (கி.பி.1706-1739) ஆட்சிக் காலத்தில் இவ்வூரில் கண்ணகி வழிபாடு சிறந்திருந்ததை இம்மன்னன் காலத்தில் தோன்றிய கிராமிய இலக்கியம் உறுதி செய்கின்றது.
மருவாழி புவியிலுள்ள மானிடர்கள் வாழி
வரு ராசசிங்க நரேந்திரனும் வாழி (செட்டிபாளையம் கண்ணகை அம்மன் காவியம் பாடல் 12 வரி.5,6) ஆதலால் இவ்வூரில் ஏற்கனவே அமைந்திருந்த கண்ணகி ஆலயத்தையே திரு அறுமக்குட்டிப் போடியார் திருத்தி அமைத்தார் எனக்கொள்ளலாம்)
41. மட்டக்களப்பு சைவக்கோயில்கள் - பக்.103 பண்டிதர் வி.சி.கந்தையா - 1983

காலத்தில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்துள்ளான். இவ்வேளையில் சம்மாந்துறைக்கும் வந்திருந்த இவன் காரைதீவு கண்ணகையம்மன் ஆலயத்துக்கும் விஜயம் செய்திருந்தான். இதனை இலக்கிய மொன்று குறிப்பிடுகின்றது.[41] இவற்றின் வாயிலாக கண்டி மன்னருடன் மட்டக்களப்பு நிலைமைபோடிகள் (ஆளுநர்கள்) வன்னிச் சிற்றரசர் கொண்டிருந்த நெருக்கமான உறவு தெளிவாகின்றது. ஆங்கிலேயர் மட்டக்களப்பைக் கைப்பற்றித் தங்கள் ஆட்சியின் கீழ் கொண்டு வரும் வரை இந்நிலை நீடித்திருந்தது எனலாம்.

கி.பி.1803ல் ஆங்கிலேயர் மட்டக்களப்பைக் கைப்பற்றிய வேளையில் மட்டக்களப்பில் நிலைத்திருந்த சிற்றரசுகள் பாணகை, பொத்துவில், திருக்கோவில், அக்கரைப்பற்று, சம்மாந்துறை, மண்முனை, ஏறாவூர் என்பனவாகும்.[42] இவ்வேளையில் கல்முனை, கரவாகு, மீனோடைக்கட்டு (அட்டாளைச்சேனை) கருங்கொடித்தீவு (அக்கரைப்பற்று) ஆகிய பழந்தமிழ்க் கிராமங்களில் வாழ்ந்து வந்த தமிழ், முஸ்லீம் மக்கள் மதம், கலாசாரம், பண்பாடு ஆகியனவற்றால் வேறுபட்டிருப்பினும் மொழியால் ஒன்றுபட்ட ஓரினத்தவராகவே வாழ்ந்து வந்தனர். தமிழ்மொழியின் பால் மிகுந்த பற்றினைக் கொண்டிருந்த முஸ்லீம் மக்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சியிலும் ஆர்வங்கொண்டிருந்தனர்.[43]

ஆங்கிலேயர் மட்டக்களப்பைக் கைப்பற்றிய காலத்தில் காணிகள், வயல்நிலைங்கள் என்பன வன்னியர்களுக்கேயுரியனவாக விருந்தன எனலாம். இவ்வேளையில் சம்மாந்துறை பிரதேசத்தில் மட்டுமன்றி கல்முனை தொடக்கம், பொத்துவில் பாணகை வரையுமுள்ள கரையோரப் பிரதேசத்திலுள்ள பெரும்பாலான நிலங்கள், வயல்கள் ஆகியன வன்னியரின் உடமைகளாக விருந்தன. ஆங்கிலேயர் ஆட்சிக்கு வந்ததும் இவற்றில் பெரும்பாலானவற்றைப் பறித்து இவர்களது

42. மட்டக்களப்புப் பிரதேசத்தின் பாரம்பரிய நில உடமைமுறையும் அவற்றின் பொருளியில் வழக்காறும் (கட்டுரை) - திரு.குமாரவேல் தம்பையா , விரிவுரையாளர், கிழக்கு பல்கலைக்கழகம், தேரோட்டம் சிறப்புமலர் - 1998

43. இக்காலகட்டத்தில் இன்றைய நிந்தவூர் பிரதேசத்தில் தமிழர்களே தனிப்பெரும்பான்மை யினமாக வாழ்ந்து வந்தனர். பழந்தமிழ்க் கிராமமான நிந்தவூரில் தமிழும் சைவமும் செழித்திருந்தன. அத்துடன் சைவாலயங்களும் நிறைந்திருந்தன.

44. இக்காலத்தில் சம்மாந்துறை நிலைமைப் போடிகளான தமிழர்களது பரிபாலனத்தின் கீழ் நடுக்காடு என்ற வனப்பிராந்தியம் (அம்பாரைப் பிரதேசம் உள்ளிட்ட) இருந்து வந்தது. மேலும் இறக்காமம், தொட்டம், வரிப்பத்தான்சேனை, பகுதிகளும்



செல்வாக்கை (நிலவுடமை, பொருளாதாரவளம்) குறைக்க முயன்றபோதும் தொன்று தொட்டு நிலவிவந்த வன்னியர்களது செல்வாக்கை அவர்களால் குறைக்க முடியவில்லை. ஆதலால் வன்னியர்களது (இராசாக்கள்) சந்ததியினரைப் போடிகளாக நியமித்து மட்டக்களப்பை ஆங்கிலேயர் ஆட்சிபுரிந்து வந்தனர். இக்காலத்தில் திரு வைகாளிப்போடி , திரு வீமாப்போடி ஆகியோர் நிலைமைப் போடிகளாக விருந்து சம்மாந்துறை பிரதேசத்தை பரிபாலனம் செய்துள்ளனர் என அறிய முடிகின்றது.[44]

## 1827ல் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்களவர் இல்லை

இக்காலகட்டத்தில் கி.பி.1827ல் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட குடிசனக் கணக்கெடுப்பின் போது அவ்வேளை மட்டக்களப்பில் (அம்பாரையை உள்ளடக்கி யிருந்த மட்டக்களப்பு மாவட்டம்) சிங்களவர் எவரும் இருக்கவில்லை. பட்டிப்பளை என்ற கல்லோயாப் பிரதேசம் இவ்வேளையில் காடாகவிருந்தது. கி.பி.1833ல் அமுல் செய்யப்பட்ட கோல்புறூக் கமறூன் சீர்திருத்தங்கள் இலங்கை முழுவதையும் ஒரே நிர்வாக அமைப்பின் கீழ் கொண்டு வந்தது. இதற்கு முன்பு இலங்கை ஒரே நிர்வாகத்தின் கீழ் எக்காலத்திலும் இருந்ததில்லை. இது வரலாறு கூறும் உண்மையாகும். பிரிட்டிஸ் ஆட்சியாளர்களே இலங்கையில் ஒற்றையாட்சியை ஏற்படுத்தினர். இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பில் பிராந்திய நிர்வாகிகளாக சம்பளம் பெறும் வன்னிமைகள் (வன்னிய இராசாக்களின் சந்ததியினர்) நியமிக்கப் பட்டனர்.

ஆங்கிலேயரது ஆட்சிக் காலத்தில் கி.பி.1854ம் ஆண்டளவில் நாடுகாடுபற்று என்ற நடுக்காடு வனப்பகுதியை உள்ளடக்கியிருந்த சம்மாந்துறை பிரதேசத்தை எதிர்மன்ன சிங்கன் வன்னியன் நிர்வகித்து வந்துள்ளான். சம்மாந்துறை கிராமத்தைச் சேர்ந்த இவரிடம் வீரபத்திரச்செட்டி நாகமணி (1860) என்பவர் இலிகிதராகப் பணிபுரிந்து வந்தார். இவர் தமிழ்ப் புலமை மிக்கவராக விளங்கிவந்தார் என அறியமுடிகின்றது. தமிழும் சைவமும் செழித்திருந்த சம்மாந்துறைப் பிரதேசத்தில் (வீரமுனை, மல்லிகைத் தீவு, மல்வத்தை உள்ளிட்ட) அக்காலத்தில் வாழ்ந்து வந்த தமிழ்ப் புலவர்களில் திரு சோமசுந்தரதேசிகர் (1885) என்பவர் குறிப்பிடத் தக்கவராவர். பழம்பதியான வீரமுனையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றியபணி அளப்பரியதாகும்.

ஆங்கிலேயரது ஆட்சிக் காலத்தில் கடந்த நூற்றாண்டில் நியமிக்கப்பட்ட சம்பளம் பெறும் வன்னியர்கள் பற்றி அறியமுடிகின்றது. மட்டக்களப்பு தமிழகத்தில் பிராந்திய நிர்வாகிகளாகப் பணிபுரிந்த இவர்கள் ஏராளமான நிலபுலன்களைக் கொண்டிருந்ததுடன் அரச அதிகாரத்தையும் கொண்டிருந்தனர். அக்காலத்தில் (1920, 21களில்) சம்மாந்துறை, நடுக்காடு பற்றுகளை (வரையறுக்கப்பட்ட மாகாணப்பிரிவுகள்) உள்ளடக்கிய பிராந்தியத்தை சம்மாந்துறை கிராமத்தைச் சேர்ந்த திரு.சி.டி.கதிராமப்போடி வன்னியன் நிர்வகித்து வந்துள்ளார். இதேவேளையில் நிந்தவூர், பாணகை, அக்கரைப்பற்று ஆகிய பற்றுக்களை உள்ளடக்கிய பிராந்தியத்தை திரு.சின்னத்தம்பிச் செட்டி வன்னியன் நிர்வகித்து வந்தார். [45]

## சுப்பிரமணியமும் மாக்கான் மாக்காரும் சட்டசபையில்

1931ல் சட்டசபை (அரசசபை) உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெற்றது. இவ்வேளையில் கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு வடக்கு, மட்டக்களப்பு தெற்கு என இது தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுத் தேர்தல் நடத்தப் பட்டது. இத்தேர்தலில் மட்டக்களப்பு வடக்குத் தொகுதியிலிருந்து முதலியார் மயில்வாகனம் சுப்பிரமணியம் அவர்களும் தெற்குத் தொகுதியிலிருந்து சர்ஹாஜி முகமது மாக்கான் மாக்கார் அவர்களும் சட்ட சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். இதனைத் தொடர்ந்து 1936ம் ஆண்டு நடந்த சட்ட சபைத் தேர்தலில் மட்டக்களப்பு வடக்கு தொகுதியிலிருந்து ஈ.ஆர்.ரி.தம்பிமுத்து அவர்களும் தெற்கு தொகுதியிலிருந்து சின்னக்குட்டி உடையார் கனகரெட்ணம் அவர்களும் சட்டசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இதேவேளை வடக்கே கல்லடிப் பாலத்திலிருந்து ஆரம்பித்து முழு அம்பாரை மாவட்டத்தையும் சேர்த்திருந்த மட்டக்களப்பு தெற்கு தொகுதியின் சட்டசபை உறுப்பினரான சின்னக்குட்டி உடையார் கனகரெத்தினம் அவர்கள் மறைய இத்தொகுதியில் இடைத் தேர்தல் ஒன்று நடைபெற்றது. இதில் திரு.ச.தர்மரெட்ணம் வன்னியன் அவர்கள் வெற்றி பெற்றுச் சட்டசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். இவருக்கு தமிழ், முஸ்லீம், சிங்கள மக்கள் சேர்ந்து வாக்களித் திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். 1931, 36ம் ஆண்டுகளில் நடைபெற்ற சட்டசபைத்

45. மொனகிராபி ஒப் பற்றிக்கலோ - பக்.78, 79 எஸ்.ஓ.கனகரெட்ணம் - 1921



தேர்தல்கள் மூலமாக பல உண்மைகள் தெளிவாகின்றன. ஆங்கிலேய ஆட்சியின் இறுதிக் காலத்தில் மட்டக்களப்பில் (அம்பாரையை உள்ளடக்கிய) வாழ்ந்து வந்த தமிழ், முஸ்லீம் மக்களிடையே நெருக்கமான உறவுகள் நிலவியிருந்தன. தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருந்த இவர்கள் மொழி வழியில் ஓரினத்தவராகவே வாழ்ந்து வந்தனர் என்பதே மறக்கப்பட்ட அவ்வுண்மைகளாகும்.

ஆங்கிலேய ஆட்சியின் இறுதிக்காலமாகிய இக்காலத்தில் (1936-37களில்) பழந்தமிழ் கிராமமான சம்மாந்துறையில் முஸ்லீம் மக்களும் வாழ்ந்து வந்தனர் கி.பி.பதினாறாம் நூற்றாண்டளவில் தமிழ்ப் பெண்களைத் திருமணம் புரிந்து வாழ்ந்து வந்த தென்னிந்திய வர்த்தகர்களான முஸ்லீம்களின் சந்ததியினரும் கி.பி.1626ல் கண்டி மன்னன் செனரதன் காலத்தில் சம்மாந்துறை வன்னிய ராசாவால் கல்முனை, கல்முனைகுடி, சாய்ந்தமருது ஆகிய இடங்களில் குடியேற்றப்பட்ட முஸ்லீம்களின் சந்ததியினரும் இவர்களில் அடங்குவர். இவ்வேளையில் சம்மாந்துறைப் பிரதேசத்தைச் சேர்ந்த வீரமுனை, மல்லிகைத் தீவு ஆகிய பழந்தமிழ்க் கிராமங்களில் தமிழ் மக்களே நிறைந்திருந்தனர்.[46] இக்காலத்தில் இப்பிரதேசத்தைச் சேர்ந்த நிலங்கள் தமிழ் மக்களுக்கேயுரியனவாக இருந்தன.

## தமிழும் சைவமும் செழித்திருந்த காலம்

குறிப்பாக வன்னியராசாக்களின் சந்ததியனருக்கு ஏராளமான காணிகள் உடமைகளாகவிருந்தன. சைவமும் தமிழும் செழித்திருந்தன. சம்மாந்துறை காளிகோயில், பாடல்பெற்ற ஆலயங்களான வீரமுனை சிந்தாத்திரைப் பிள்ளையார் ஆலயம், கண்ணகையம்மன் ஆலயம் என்பன சிறப்புடன் விளங்கின. இவ்வேளையில் பட்டிப்பளைப் பிரதேசமானது அடர்ந்த காடாகவிருந்தது. இன்றைய அம்பாறைப் பிரதேசத்தில் அமைந்திருந்த நெற்காணிகள் அனைத்தும் சம்மாந்துறை, வீரமுனை, காரைதீவு, கல்முனை, நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு, நீலாவணை,

46. தமிழர் நாகரீகம் நிலைத்திருந்த சம்மாந்துறைப் பிரதேசத்தில் (சம்மாந்துறை, வீரமுனை, மல்லிகைத்தீவு, மல்வத்தை, வளத்தாப்பிட்டி, மணல்கல்புட்டி ஆகிய இடங்களை உள்ளடக்கிய) வாழ்ந்து வந்த தமிழ் மக்களில் பெரும் பாலானோர் காலத்துக்குக் காலம் இந்த இடங்களில் குடியேறியிருந்தனர். குறிப்பாக இவர்கள் மண்டூர், பாலமுனை, குருமண்வெளி, மகிளூர்முனை, துறைநீலாவணை ஆகிய இடங்களில் குடியேறி வாழ்ந்து வருகின்றனர் என அறியமுடிகின்றது.

சேனைக்குடியிருப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த தமிழ்மக்களுக்கே உரியனவாக விருந்தன. இவர்களால் தோற்றுவிக்கப்பட்டதே அம்பாரைப் பிள்ளையார் ஆலயமாகும். அம்பாரைப் பிரதேசத்தில் அக்காலத்தில் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வந்த தமிழர்களின் நம்பிக்கைக்குரிய தெய்வமாகத் திறந்த வெளிக் கோயிலில் இப்பிள்ளையார் வீற்றிருந்து அருள் புரிந்து வந்தார் என அறிய முடிகின்றது.

இக்காலத்தில் கரையோரப் பகுதிகளில் குறிப்பாக கல்முனை தொடக்கம், அக்கரைப்பற்று வரையுள்ள பிரதேசத்தில் தமிழ் மக்களும் முஸ்லீம் மக்களும் புட்டும் தேங்காயும் போல் இணைந்து வாழ்ந்து வந்தனர். கல்முனை, கரவாகு, நிந்தவூர், கருங்கொடித்தீவு ஆகிய இடங்களில் தமிழ் மக்களும் முஸ்லீம் மக்களும் அருகருகாய் வாழ்ந்து வந்தனர். பழந்தமிழ் கிராமங்களான இந்த இடங்களில் தமிழ், முஸ்லீம் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தனர். இதே காலத்தில் காரைதீவு, அட்டப்பள்ளம், திராய்க்கேணி, மீனோடைக்கட்டு ஆகிய பழந்தமிழ் கிராமங்களில் தமிழும் சைவமும் சிறப்புடன் விளங்கியிருந்தன. அட்டப்பள்ளம், திராய்க்கேணி, மீனோடைக்கட்டு, ஒலுவில் ஆகிய இடங்களை உள்ளடக்கிய பிரதேசத்தில் அமைந்திருந்த நெற்காணிகள் , தோட்டங்கள் ஆகியன பெரும்பாலும் தமிழருக்கேயுரியனவாக விருந்தன.

மேலும் மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயம் புகழ் பெற்றிருந்ததுடன் இவ்வாலயத்திற்குச் சொந்தமாக வயல்வெளிகளும் இருந்தன. இதேவேளை கல்முனை தொடக்கம் அக்கரைப்பற்று வரையுள்ள கிராமங்களை அண்மித்திருந்த தென்னந்தோட்டங்கள் , நிலங்கள் (தரிசு) வயல்கள் என்பன பெரும்பாலும் தமிழர்களது உடமைகளாகவே இருந்து வந்தன. குறிப்பாக நிந்தவூர், அட்டப்பள்ளம், காளியோடை, மீனோடைக்கட்டு, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று ஆகிய இடங்களில் தமிழர்களுக்குச் சொந்தமான ஏராளமான நிலங்கள் இருந்தன. சுருங்கக் கூறுமிடத்து ஆங்கிலேயர் ஆட்சியின் இறுதிக் காலமாகிய இக்காலத்தில் தற்போதைய அம்பாரை மாவட்டத்தில் நிலபுலன்களை உடையவர்களாகவிருந்தவர்கள் தமிழர்களேயாவர். 1950ம் ஆண்டு வரை இந்நிலை நிலைத்திருந்ததென்பது மறைக்கப்பட்ட வரலாற்றுண்மையாகும்.



## ஆதிக் குடியினர்

ஈழத்தின் ஆதிக்குடியினர் பற்றித் தொல்லியல் ரீதியாக நோக்குமிடத்து மிகப் பண்டைக் காலத்தில் இத்தீவில் வாழ்ந்திருந்த மக்கள் பற்றியும் இம்மக்கள் எங்கிருந்து வந்து இங்கு குடியேறினர் என்பது பற்றியும் அறியமுடிகின்றது. இலங்கையில் இதுவரை கிடைத்த தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் நோக்குமிடத்து கி.மு.28000 ஆண்டளவில் இருந்து இடைக்கற்காலப் பண்பாட்டைப் பின்பற்றிய மக்கள் இங்கு வாழ்ந்திருந்தனர் என அறிய முடிகின்றது.

இப்பண்பாட்டு மக்கள் காட்டுப் புற்களாகத் தோன்றிய பயிர்களிலிருந்து தானியங்களை அறுக்கவும் வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தவும் சிறிய பிளேட் போன்ற கல் அலகுகளைப் பயன்படுத்தியதால் அக்காலத்தினை குறுணிக் கற்காலம் எனவும் தொல்லியலாளர்கள் அழைப்பர். மேலும் பிந்திய கற்காலம் என்றும் இவ்விடைக்காலத்தை தொல்லியலாளர்கள் குறிப்பர். இலங்கையில் கிடைத்த இடைக் கற்காலத்துக்குரிய சான்றுகளை காலக் கணிப்புக்கு உட்படுத்திய போது இக்காலம் கி.மு.28000 ஆண்டளவில் இங்கு ஆரம்பித்திருக்கலாம் என்பது தெளிவாகின்றது.

இவ்வேளை தமிழகத்திலுள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்கொண்ட ஆய்வின் மூலமாக இடைக் கற்காலம் இப்பகுதியில் 30000ம் ஆண்டளவில் தோன்றியிருக்கலாம் என்பது தெரியவருகின்றது. இக்குறுணிக் கற்கால மக்கள்தான் தமிழகத்திலிருந்து இலங்கைக்கும் பரவினர். இப்பண்பாட்டில் தமிழகம், ஈழம் ஆகிய இரு நாடுகளுக்கும் இடையேயுள்ள நெருங்கிய ஒற்றுமையைக் கொண்டு இப்பண்பாட்டு மக்கள் ஏதோ ஒரு காலகட்டத்தில் தமிழ் நாட்டிலிருந்து புலம் பெயர்ந்திருக்கலாம் எனத் தொல்லியலாளர்கள் கருதுகின்றனர்.[1]

1. பூநகரி தொல்பொருளாய்வு - பக்.13, 14 ப.புஸ்பரட்ணம்

இவர்களின் ஈழம் நோக்கிய பரம்பலுக்கு அக்காலத்தில் இலங்கை தென்னிந்தியாவுடன் இணைந்திருந்தமை காரணமாகும். இம்மக்கள் இலங்கையில் தாழ்நிலம் தொட்டு மலைநாடு வரை வாழ்நதிருக்கலாம். மாதோட்டம், பூநகரி, மாங்குளம், பொம்பரிப்பு, அனுரதபுரம், இரத்தினபுரி, பலாங்கொடை போன்ற இடங்களில் கிடைத்த சான்றுகள் இதனை உறுதி செய்கின்றன.[2] இலங்கையில் இடைக் கற்கால மனிதனின் கருவிகள் முதற்கொண்டு அவனது அடக்கமுறைகள், ஈமச் சான்றுகள் கிடைத்துள்ளன.

இக்காலத்தில் இவர்கள் பேசிய மொழி ஒஸ்ரலோயிட் மொழியாகும். இன்றும் இலங்கையில் வாழும் வேடர் இவர்களின் சந்ததியினர் ஆவர். தமிழகத்துக்கு அருகிலுள்ள ஈழத்து இடைக் கற்கால கருவிகளுக்கும் தமிழகத்து இடைக் கற்கால கருவிகளுக்குமிடையே நெருங்கிய ஒற்றுமை காணப்படுகின்றது. ஈழத்தில் இக்கருவிகளுடன் தானியவகை, அவற்றைப் பதனிடப் பயன்படுத்தப்படும் அம்மி, குளவிகள் போன்றனவும் காணப்படுகின்றன. ஈழத்தில் மேலும் இக்காலத்தைய மனித சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இத்தகைய இடங்களில் ஈழத்தின் தென்பகுதியிலுள்ள பெலன்பண்டிபலாசா என்ற இடத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள் முக்கியமானவைகளாகும்.[3]

ஈழத்துக் குகைகளில் இடைக் கற்கால மக்கள் வடித்த குகை ஓவியங்கள் காணப்படுகின்றன. இன்றும் ஈழத்தில் வாழும் வேடர் தமிழகத்தில் வாழும் வேடர், இருளர், காடர், பழையர்,மு மலைப்பண்டாரம் போன்றோர் இவர்களின் சந்ததியினர் ஆவர். (கலாநிதி.சி.க.சிற்றம்பலம் - 1991) இடைக்கற்காலத்தில் இலங்கை தென்னிந்தியாவுடன் இணைந்திருந்தது. [4] இவ்வேளையில் ஈழத்திலும் தென்னிந்தியாவிலும் வாழ்ந்து வந்த மக்கள் பற்றி நூலாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

---

2. பண்டைய இலங்கையில் தமிழும் தமிழரும் - பக்.99 ப.புஸ்பரட்ணம் - 2001
3. பண்டைய தமிழகம் - பக்.20 - 25 கலாநிதி சி.க.சிற்றம்பலம் - 1991
4. கடல் கொண்ட லெமூரியாக் கண்டத்தில் இலங்கையும் தென்னிந்தியாவும் சேர்ந்திருந்தது. இது அவுஸ்திரேலியா வரை பரந்திருந்தது. இக்கண்டம் கடற்கோள் களினால் இந்து மா கடலில் மூழ்கியதென நிலநூலாரும் கடல் ஆராய்சியாளர்களும் கூறுகின்றனர். (இந்திய சரித்திரக் களஞ்சியம் : இரண்டாம் பகுதி பக்.187, ப.சிவனடி-1988)



வேடர் என்னும் சாதியார் தென்னிந்தியாவிலிருந்து வந்தார்கள். இவர்கள் சிங்களவர் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னா இலங்கையில் வந்து குடியேறினர். இன்று நீரினால் சூழப்பட்ட தீவாகக் காணப்படும் இலங்கை அக்காலத்தில் இந்தியாவுடன் இணைக்கப்பட்ட நிலப்பரப்பாக விருந்தது. ஆகவே தோணி , மரக்கலம் முதலியவற்றின் துணையின்றியே தென்னிந்தியாவிலிருந்து வேடர் நிலப் பாதை வழியாக ஈழத்திற்கு நடந்து வந்தனர். இவ்வாறு வரலாற்றாசிரியரான ஜி.ஸி.மெண்டிஸ் குறிப்பிடுகின்றார்.[5]

இலங்கையில் விஜயன் காலடி எடுத்து வைத்த வேளையில் இங்கு வாழ்ந்து வந்த பழங்குடி மக்கள் வெத்தர்கள், நாகர், இயக்கர். இம்மூவருள் வெத்தர்களே மிகப் பழமையானவர்கள். வேட்டையாடி வாழ்ந்த மக்கள் இவர்கள். சிறிய அளவில் வேளாண்மையை மேற்கொண்டிருந்தனர். வெத்தர்கள் பற்றி ஆராய்ந்த மானுடவியல் அறிஞர்கள் வெத்தர்கள் தனி இன மக்கள் அல்லர் என்றும் ஆஸ்திரலாய்த மக்கள் இனத்தோடு சார்ந்தவர்கள் ஆதல் வேண்டும் என்றும் கருதுவர்.

இவர்கள் தென்னிந்தியப் பழங்குடியினர் சிலரோடு ஒத்துள்ளனர் என்பது மிகப் பொருத்தமாக இருக்கும். சான்றாக தென்னிந்தியாவில் வாழும் மலைவேடர்கள், இருளர்கள், கோடகர்கள் ஆகியோரைக் குறிப்பிடலாம். இம்மக்களில் ஒருசில பழங்குடியினர் தென்னிந்தியாவை விட்டு மிகப் பழங்காலத்திலேயே ஈழத்திற்குக் குடியேறியிருக்கலாம். இவ்வாறு தமிழக அறிஞரான க.ப.அறவாணன் குறிப்பிடுகின்றார். [6] வெத்தர்கள் என்ற சொல் தமிழில் உள்ள வேடர் என்ற சொல்லை மூலச்சொல்லாகக் கொண்டது ஆகும். வேடர் என்னும் சொல்லுக்கு பொருள் வேட்டை ஆடுபவர் என்பதும் வெத்தர்களின் தொழிலும் வேட்டை ஆடுதல் என்பதும் பொருந்தி உள்ளன. இவ்வாறு அவர் மேலும் குறிப்பிடுகின்றார்.

இடைக்கற்காலத்தில் தென்னிந்தியாவிலும் ஈழத்திலும் வாழ்ந்திருந்த மக்களையே முண்டர் எனவும் இன்று தென்னிந்தியாவின் பல பாகங்களிலும் வாழ்ந்து வரும் முண்டர், குறும்பர், கானவர், சண்டாளர் ஆகியோர் இவர்களின்

---

5. நம்முன்னோரளித்த அருஞ்செல்வம் பாகம் I - பக்.3, 4 ஜி.சி.மென்டிஸ் - 1969
6. ஈழம் தமிழரின் தாயகம் - பக்.30, 31 திரு.க.ப.அறவாணன், துணைவேந்தர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் - திருநெல்வேலி -2000

சந்ததியினர் என்றும் பொ.சங்கரப்பிள்ளையவர்கள் குறிப்பிடுகின்றார். குறிப்பாக தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் இப்பண்பாட்டைப் (இடைக்கற்காலம்) பின்பற்றியிருந்த ஆதிஒஸ்ரலோயிட் மனித வர்க்கத்தைச் சேர்ந்தவர்களான இவர்களின் மொழியும் (ஒஸ்ரிக்) பண்பாடும் பிற்பட்ட திராவிட நாகரீகத்துடன் இணைந்தே இலங்கை நாகரீகம் தோன்றியது.[7]

புவியியல் ரீதியில் ஒரே கலாசார பிராந்தியமாக விளங்கி வந்த தென்னிந்தியா விலும் இலங்கையிலும் இடைக் கற்காலத்தை தொடர்ந்து புதிய கற்கால மக்கள் வாழ்ந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. தென்னிந்தியாவில் புதிய கற்காலக் குடியிருப்புக்கள் கி.மு.3000 ஆண்டு தொடக்கம் கி.மு.2500ம் ஆண்டு வரையிலான காலப் பகுதி என அறிஞர் கருதுகின்றனர். தென்னிந்திய புதிய கற்கால மையப் பிரதேசமாக கர்நாடகம் விளங்குகின்றது. தமிழகத்தில் புதிய கற்கால கலாசாரம் கி.மு.2000ம் ஆண்டளவில் ஆரம்பித்திருக்கலாம் என்பதை வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள பையம்பள்ளியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் உறுதி செய்கின்றன. இக்காலாசாரம் இங்கே கி.மு.1000ம் ஆண்டுவரை நிலைத்ததற்கான சான்றுகள் உள்ளன.[8]

இக்காலத்தில் தமிழகப் பிராந்தியத்தோடு கலாசார ரீதியில் நெருக்கமான வகையில் தொடர்பினைக் கொண்டிருந்த ஈழத்தில் புதிய கற்கால கருவிகள் கண்டு பிடிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இதேவேளை இலங்கையில் றம்புக்கணைக்கு மூன்று மைல் மேற்கேயுள்ள படிய கம்பளை என்னுமிடத்தில் புதிய கற்காலத்தைச் சேர்ந்த கற்சமாதி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.[9] ஆதலால் தமிழகத்தைப் போன்று ஈழத்திலும் புதிய கற்கால கலாசாரம் கி.மு.1000 ஆம் ஆண்டு வரை நிலவியிருந்ததை உறுதி செய்யலாம். தென்னிந்தியாவில் புதிய கற்கால கலாசாரம் நிலவியிருந்த காலத்தில் குறிப்பாக கி.மு.3000 - 1500 வரையுள்ள காலப் பகுதியில் சிந்துவெளியில் வாழ்ந்திருந்த புதிய கற்கால மக்கள் நாகரீக நிலையை அடைந்திருந்தனர்.[10]

இக்கால கட்டத்தில் (கி.மு.3000 - 1500) சிந்து வெளியில் வாழ்ந்த மக்களும் தென்னிந்திய புதிய கற்கால மக்களும் ஒரே வர்க்கத்தினராக விருந்தனர் என்பதை தொல்லியல் சான்றுகள் உறுதிசெய்கின்றன. ஆயினும் சிந்துவெளி மக்கள், நாகரீக நிலையை எட்டிப்பிடித்திருந்தனர். இதற்கான காரணம் அவர்கள் குடியிருந்த பிரதேசங்களில் வாய்ப்பு, வளம் மட்டுமன்றி வெளியுலகத்துடன் கொண்டிருந்த தொடர்புமேயாகும். புதிய கற்காலத்தில் இந்தியாவிலும் ஈழத்திலும் ஓரின மக்களே வாழ்ந்திருந்தனர் (எஸ்.இராமகிருஷ்ணன் - இந்தியப் பண்பாடும் தமிழரும் - பக்.17) மொகஞ்சதாரோவில் காணப்பட்டவை போன்று சில எழுத்துக்கள் இலங்கையில் கேகாலையிலுள்ள மலை ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ளதை ஹேரஸ் பாதிரியார் குறிப்பிட்டுள்ளார்.[11]

தென்னிந்தியாவில் இக்கலாசாரத்துக்குரிய மக்களின் எலும்புக் கூடுகளை ஆராய்ந்த மானிடவியலாளரான கென்னடி இவற்றிற்கும் தற்காலத் திராவிட மொழி பேசுவோருக்குமிடையே உள்ள ஒற்றுமையைக் கொண்டு இவை திராவிடரின் மூதாதையினரதே எனக் கூறியுள்ளார். (Kenedy.K.A.R.-1975) புதிய கற்காலத்தில் இலங்கையிலும் இந்தியாவிலும் வாழ்ந்து வந்த ஆஸ்திராலாயிடு இனத்தவரான இம்மக்களையே மகாவம்சம், இயக்கர், நாகர் என்று குறிப்பிடுகின்றது. விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் இலங்கையில் இவர்களே வாழ்ந்திருந்தனர் என்றும் இந்நூல் மேலும் கூறும். இவர்கள் ஆதித் திராவிடர்கள் ஆவர்.[12]

சிந்துவெளியில் வாழ்ந்திருந்த புதிய கற்கால மக்கள் நகர நாகரீகம் கண்டு சிறப்புடன் வாழ்ந்து வந்த வேளையில் ஆரியப் படையெடுப்பாளர்கள் அங்கு வாழ்ந்து வந்த இலிங்க வழிபாட்டைப் பேணியிருந்த தாசர்களுக்கு (திராவிடர்) தீங்குகள் பல புரிந்து வந்தனர். இதன் பயனாக இவர்களுட் பெரும் பாலானோர் தமது சிவ வழிபாட்டின் முக்கிய சின்னமாகிய இலிங்க வழிபாட்டினைத் தாம் குடிபெயர்ந்து சென்ற இடமெல்லாம் பேணியிருந்தனர் என அறிய முடிகின்றது. இக்காலத்தில் சிந்துவெளி , மத்திய இந்தியா, தென்னகம், ஈழம் ஆகிய பகுதிகளில்

7. பூநகரி தொல்பொருளாய்வு - பக்.14 ப.புஸ்பரட்ணம்
8. பண்டைய தமிழகம் - பக்.34, 35 கலாநிதி சி.க.சிற்றம்பலம் - 1991
9. நம்முன்னோரளித்த அருஞ்செல்வம் - பக்.8 ஜீ.ஸீ.மென்டிஸ் - 1969
10. சிந்துவெளியில் கி.மு.4500ம் ஆண்டளவில் புதிய கற்கால குடியிருப்புக்கள் தோற்றம் பெற்றிருந்தன. (கலாநிதி சி.க.சிற்றம்பலம் - 1991)



11. பழந்தமிழர் - பக்.18 ந.சி.கந்தையாபிளளை - 1957
புதிய கற்காலத்தில் தற்காலத் திராவிடரின் மூதாதையர் ஒரே வர்க்கத்தினராக சிந்து வெளியிலும் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் வாழ்ந்திருந்தனர்.
12. திராவிடர்கள் பற்றி ஆராயும் ஆர்.கனகசபைப்பிள்ளை தம்முடைய 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம் என்ற நாலில் நாகர்கள் திராவிடர்களின் மூலவர் என்று குறிப்பிடுகின்றார். ஆரியர்களால் அவர்கள் தென்னிந்தியாவிலிருந்து அவர்கள் இலங்கைக்கு நகர்ந்தனர் என்றும் கருதுவார். (ஈழம் தமிழரின் தாயகம் பக்.33 அறிஞர் க.ப.அறவாணன் - 2000)

ஆதித் திராவிடமொழியே பேசப்பட்டு வந்தது.

இவ்வேளையில் ஆரியப் படையெடுப்புக்களுக்கு முகம் கொடுக்க விரும்பாத சிந்துவெளி, ஹரபா மக்கள் தம் சிவவழிபாட்டுக் கூறுகளைத் தெற்கே துங்கபத்திரை, கிருஸ்ணாநதிப் பள்ளத்தாக்கு, கோதாவரி நதிக்கரையில் நிவேசா, டயமவாத் முதலான பகுதிகளிலும் இன்னும் தெற்கே மைசூரிற் பெல்லாரி மாவட்டத்தில் தெக்கலகோட முதலான பகுதிகளிலும் புதிய கற்காலத்தின் இறுதிக் கட்டத்தில் வாழ்ந்த மக்களுக்கு கி.மு.1700ம் ஆண்டளவில் அறிமுகப்படுத்தியிருந்தனர். இதனைத் தொல்லியலாய்வுகள் உணர்த்துகின்றன. [13] இதனைத் தொடர்ந்து தமிழகம் , ஈழம் ஆகிய பிராந்தியங்களில் வாழ்ந்து வந்த புதிய கற்கால மக்களிடையேயும் இலிங்க வழிபாடு அறிமுகமாகிப் பரவியிருந்தது.

கி.மு.1300 ம் ஆண்டளவில் ஈழத்தில் வாழ்ந்து வந்த புதிய கற்கால மக்களிடையே இலிங்க வழிபாடு சிறந்திருந்தது. இக்காலத்தில் ஈழத்தில் ஆட்சி புரிந்த இயக்கர் குலத்து இராவணன் அவனது தாய், அவனது மனைவியான நாகர்குலத்து மண்டோதரி ஆகியோர் வரலாறுகள், இராமரால் இராமேஸ்வரத்திலும் ஈழத்திலும் (மாமாங்கம்) சிவலிங்கங்கள் பிரதிஸ்டை செய்யப்பட்டமை போன்ற வரலாறுகள் இலங்கையின் சிவ (இலிங்க) வழிபாட்டு நிலைகளை கி.மு.1000-900 ஆண்டுகளுக்குப் பின் நகரவைக்கின்றன. குறிப்பாக புதிய கற்காலத்தின் முதிர்ச்சி நிலையிலேயே ஈழத்தில் இலிங்க வழிபாடு சிறந்திருந்தது என்பதை மேற்குறிப்பிட்ட சான்றுகள் உணர்த்துகின்றன.

## பெருங்கற்காலப் பண்பாடு

புதிய கற்காலப் பண்பாட்டைத் தொடர்ந்து கி.மு.1000ல் இருந்து திராவிடவியல் சார்ந்த பெருங்கற்காலப் பண்பாட்டைப் பின்பற்றிய திராவிடமக்கள் இலங்கையின் பல பகுதிகளிலும் வாழ்ந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. கி.மு.1000-கி.மு 300 வரை இத்தீவில் நிலைத்திருந்த பெருங்கற் கலாசாரகாலத்தில் புதிய கற்காலத்தில் வாழ்ந்திருந்த திராவிடர்களும் இவர்களுடன் தென்னிந்தியாவில் குறிப்பாக தமிழகத்திலிருந்து இக்காலகட்டத்தில் இங்கு குடியேறிய திராவிடக் குலங்களும் இங்கு வாழ்ந்திருந்து ஈழநாகரீகத்தை தோற்றுவித்தனர் என்பதை

13. சைவசித்தாந்தமும் விஞ்ஞான உலகமும் - பக்.12 தனபாக்கியம் குணபாலசிங்கம் எம்.ஏ. - 1990



இச்சான்றுகள் நன்கு தெளிவுறுத்துகின்றன.

பெருங்கற் கலாசாரம் என்பது இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கு பெரிய கற்களைப் பயன்படுத்தி ஈமச் சின்னங்களை அமைத்ததால் இக்காலம் பெருங்கற் காலக் கலாசாரம் எனப் பெயர் பெற்றது. இதனை வரலாற்றுதயக் காலம் எனவும் அழைப்பர். தமிழகத்தில் இது நிலவிய காலத்தை கி.மு.1000 ஆம் ஆண்டு தொடக்கம் ஏறக்குறைய கி.மு.300 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதி எனலாம். (கலாநிதி.சி.க.சிற்றம்பலம் - 1991) தமிழகத்தைப் பொறுத்த வரை இது தென்னகப் பெருங்கற் கலாசாரத்தின் ஓர் அங்கமாக விளங்கியது. ஈமக்குழிகளில் இடப்பட்டுள்ள பொருட்களில் இரும்பாயுதங்கள், கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள் ஆகியனவும் சங்கு, சிப்பி, கல், சுடுமண் ஆகியவற்றினால் செய்த பொருட்கள் இதற்குச் சான்றுகளாகும்.[14]

இப்பண்பாட்டை உருவாக்கியவர்கள் மந்தை மேய்ப்பு, விவசாயக் குளங்கள் மூலம் நீர்ப்பாசனம், இரும்பின் உபயோகம் ஆகியனவற்றைத் தமது கலாசார அம்சங்களாகப் பெற்றிருந்தனர். ஈழத்துப் பெருங்கற்காலப் பண்பாட்டை குறிப்பாக தமிழகத்தின் பெருங்கற்காலப் பண்பாட்டின் அம்சமாகவே கொள்ளக்கிடக்கின்றது. பார்கர் என்பவர் திசமாறகம பகுதியில் அகழ்வினை மேற்கொண்டபோது ஈமச் சின்னங்களைக் கண்டு பிடித்தார். (கலாநிதி.சி.க.சிற்றம்பலம்-1991) தமிழ் நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றுக்குத் தெற்குக் கரையில் ஆதிச்ச நல்லூரில் கிடைத்த ஈமத்தாழி அடக்கமுறைகளை நிகர்த்த ஈமத்தாழிகள் புத்தளம் மாவட்டத்தில் பழைய தம்பன்னியில் பொம்பரிப்பு என்னுமிடத்தில் செய்யப்பட்ட தொல்லியலாய்வின் போது கிடைக்கப்பெற்றன. (S.Paranvitan - 1956)1960ல் அனுரதபுரத்திலும் 1970ல் கந்தரோடையிலும் 1980ல் மாந்தையிலும் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த இடங்களிலெல்லாம் பெருங்கற்கலாசாரம் நிலவியிருந்ததை எடுத்துக்காட்டியுள்ளன.[15]

ஆதிச்ச நல்லூருக்கு எதிரே அமைந்த மாந்தையும் அரிக்கமேட்டிற்கு எதிரேயமைந்த பொம்பரிப்பும் ஒரே பிராந்தியம் எனக் கூறக் கூடிய அளவுக்கு இப்பெருங்கற் காலப் பண்பாட்டில் அதிக ஒற்றுமை இருப்பதாகத் தொல்லியலாளர்

14. பண்டைய தமிழகம் - பக்.69,70 கலாநிதி சி.க.சிற்றம்பலம் - 1991
15. ஈழத்தவர் வரலாறு - பக்.14 கலாநிதி க.குணராசா - 1996

கருதுகின்றனர் என திரு.சிற்றம்பலம் கூறுகின்றார். மேலும் இக்காலத்தை சேர்ந்த தாழிக்காடுகளும், கல்லறைகளும் புத்தளம், அனுரதபுரம், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாரை, திஸ்ஸமாறகம, மாத்தளை, கேகாலை ஆகிய மாவட்டங்களிலும் காணப்படுகின்றன. புத்தளம் மாவட்டத்திலுள்ள பொன்பரிப்பு என அழைக்கப்படும் தாழிக்காட்டில் அகழ்ந்தெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகளை ஆராய்ந்த அறிஞர் கென்னடி (Kennedy - 1975) இம்மக்கள் தென்னிந்தியாவில் தற்காலத் திரவிட மொழிகள் பேசும் மக்கட் கூட்டத்தினரின் மூதாதையினரே எனக் கருதினார். இவருக்கு முன்பு மாதோட்டத்தில் வெளிக் கொணரப்பட்ட எலும்புக்கூட்டை ஆராய்ந்தோர் (Chanmugam and Jayawardana - 1954) இதுவும் தென்னிந்திய வர்க்கத்தை யொத்தது என்றனர்.[16]

## ஆதிப்பிராமிக் கல்வெட்டுக்கள்

ஈழப் பெருங்கற்காலப் பண்பாட்டில் முக்கிய அம்சங்களிலொன்றாகக் கருதப் படுபவை தமிழ்ப் பிராமிச் சாசனங்களாகும். கி.மு.மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ்ப் பிராமிச் சாசனங்கள், ஈழத்தில் பெருங்கற் கலாசாரம் நிலவியிருந்த இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இத்தகைய சாசனங்கள் தென்னிந்தியாவிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தென்னிந்திய ஈழப் பிராமி எழுத்துக்கள் வரிவடிவு அமைப்பில் ஒன்றுடன் ஒன்று ஒத்துள்ளன. இவற்றை ஆராந்த ஆய்வாளர்கள் ஈ.பி.பெர்ணாட்டோ, சத்தமங்கல கருணரத்ன, ஆரிய அபயசிங்க போன்றோர் பௌத்த மதத்துடன் வடபிராமி எழுத்துக்கள் அறிமுகமாகுவதற்கு முன்னரே தமிழ் நாட்டிலிருந்து பரவிய தமிழ் பிராமி எழுத்துக்கள் இலங்கையில் உபயோகத்தில் இருந்துள்ளன என்கின்றார்.[17]

கி.மு.மூன்றாம் நூற்றாண்டிலிருந்து இலங்கையில் பயன்படுத்தப்பட்டு வந்த பிராமிச் சாசனங்களிலிருந்து தென்னிந்தியாவையொத்த அரசமுறைமை இங்கும் தோன்றியதை உறுதிப்படுத்தலாம். சாசனங்களில் காணப்படும் ஆய் (ஆய) வேள் (வேள) என்பன இலங்கையின் சிற்றரசர்கள் சூடிய பட்டங்களாகும். 'ள்' என்ற பிராமி எழுத்து தமிழ்மொழிக்கேயுரிய சிறப்பெழுத்தாகும். ஆய், வேள் என சிற்றரசர்களைக் குறிக்கும் 40இற்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள் அனுரதபுரம்,

16. பிராமிக் கல்வெட்டுக்களும் தமிழும் (கட்டுரை) சிந்தனை தொகுதிI இதழ்I பக்.57-58 சி.க.சிற்றம்பலம் - 1983 யாழ்பல்கலைக்கழக கலைப்பீட வெளியீடு
17. தமிழீழ நோக்கு - தொகுதிI பகுதி 2 ப.புஸ்பரட்ணம் 1992



களனி, வவுனியா, பெரியபுளியாலங்குளம், திருமலை, மட்டக்களப்பு, பூநகரி ஆகிய இடங்களில் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அனுரதபுரத்திற்கு தெற்கிலும் வடக்கிலும் பல தமிழ் சிற்றரசுகள் இருந்தன வெனக் கூறமுடியும் (ப.புஸ்பரெட்ணம்) [18]

பழைய பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படும் பருமக (பருமகன் / பெருமகன்) வேள், ஆய், பழையர், மாற (மாறன்) பரத (பரதவர்) போன்ற குறிப்புக்கள் அக்காலத்தில் தமிழகத்திற்கும் ஈழத்திற்குமிடையே நிலவியிருந்த தொடர்பினை வலியுறுத்துகின்றன. அம்பாரை மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டொன்று (Paranavitana.S. - 1970) மஜ்ஜிமகரஜ எனக் குறிக்கின்றது. மீனவர் என அழைக்கப்பட்டு மீன் சின்னம் படைத்திருந்த பாண்டியர் இந்நாட்டில் செல்வாக்குற்றிருந்தனர் என்பதைப் பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் மீன் இலச்சினைகளும் எடுத்துக்காட்டுகின்றன.[19] இக்குறியீடுகளுடன் கூடிய கல்வெட்டுக்களில் வருபவர்கள் தமிழகத்திலிருந்து குடியேறியவர்களாவர்.

தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் ஈழத்தில் பெருங்கற் கலாசாரம் நிலவியிருந்த கால கட்டத்தில் (கி.மு.1000 - 300) வாழ்ந்திருந்த மக்கள் பற்றி பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

(1) பெருங்கற்கலாசார தொடக்க காலத்தில் ஈழத்தில் வாழ்ந்து வந்தவர்கள் புதிய கற்காலத்தில் இந்தியாவிலிருந்து இங்கு வந்து குடியேறி வாழ்ந்திருந்த ஆதித் திராவிடர்களின் சந்ததியினர் ஆவர். விஜயன் இங்கு வருவதற்கு முன்னர் இங்கு வாழ்ந்து வந்தவர்கள் என்று மகாவம்சம் கூறும் நாகர், இயக்கர் குடியினர் இவர்களேயாவர்.

(2) தமிழகமும் ஈழமும் ஒரே கலாசாரப் பிராந்தியமாக விளங்கியிருந்து நாகரீக வளர்ச்சி கண்டிருந்த இக்காலத்தில் கி.மு.5ம் 4ம் நூற்றாண்டுகளில் தமிழகத்திலிருந்து தமிழ்க்குலங்கள் பல இங்கு குடியேறி வாழ்ந்து வந்ததுடன் அரசுகள் நிறுவி ஆட்சி புரிந்தும் வந்தனர். ஈழத்தில் கண்டு பிடிக்கப்பட்ட ஆதிப் பிராமிக் கல்வெட்டுக்கள் குறிப்பிடும் பருமக, வேள், பழையர், மாற, பரத

18. ஈழத்தவர் வரலாறு - பக்.17 க.குணராசா - 1996
19. பிராமிக் கல்வெட்டுக்களும் தமிழும் (கட்டுரை) - சிந்தனை தொகுதி I இதழ் Iகலாநிதி சி.க.சிற்றம்பலம் -1983

போன்ற குலங்கள் இவர்களின் சந்ததியினர் ஆவர். உறுகுணயில் அக்காலத்தில் தமிழ் அரசர்கள் ஆட்சி நிலவியிருந்ததை மீன் சின்னம் பொறிக்கப்பட்ட பிராமிச் சாசனங்கள் உறுதி செய்கின்றன. மகாவம்சம் குறிப்பிடும் கதிர்காம, சந்தனகாமத்து சத்திரியர்கள் இத்தமிழரசர்களின் சந்ததியினர் ஆவர்.

ஆதலால் பெருங்கற்கலாசாரம் நிலவியிருந்த காலத்தில் இத்தீவில் வாழ்ந்து வந்தவர்கள் ஆதித் திராவிடரான நாகர், இயக்கர் என்போரும் தமிழகத்திலிருந்து இக்காலத்தில் இங்கு குடியேறியிருந்த திராவிடக்குலங்களும் ஆகும் என்பதில் தவறில்லை.[20]

(3) பெருங்கற்கால பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் ஆதித்திராவிட அடிப்படையிலிருந்து தமிழ் மொழி செம்மை படுத்தப்பட்டு சங்க இலக்கியம் படைக்கும் அளவுக்கு வளர்ச்சியடைந்திருந்த காலத்தில் குறிப்பாக கி.மு.5ம் 4ம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் தமிழ்ப்பிராமி வரிவடிவம் தோற்றம் பெற்றிருந்தது. இவ்வேளையில் பெருங்கற்காலப் பண்பாடு நிலவியிருந்த ஈழத்திலும் திராவிடி என்ற தமிழ் பிராமி வடிவம் இங்கு குடியேறிய திராவிடக் குலங்களால் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.

(4) பெருங்கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் (கி.மு.4ம் 3ம் நூற்றாண்டு) இத்தீவில் வாழ்ந்து வந்த மக்களிடையே இந்துமத நம்பிக்கைகளே நிலைத்திருந்தன என்பதை தமிழ்ப் பிராமி சாசனங்கள் உணர்த்துகின்றன. இக்காலத்தில் ஈழமும் தமிழகமும் ஒரே வழிபாட்டு நெறிகளைக் கைக்கொண்டு ஒரே கலாசாரப் பிராந்தியமாக செழித்திருந்ததை தொல்லியலாய்வுகள் தெளிவுறுத்துகின்றன.

ஈமச்சின்னங்கள் திராவிடப் பிராமிக் கல்வெட்டுக்கள் ஆகியனவற்றின் வாயிலாக இலங்கையின் ஆதிக்குடியினர் திராவிடர் என்பது தெளிவாகின்றது. ஈழத்தின் நாகரீககர்த்தாக்கள் இந்த ஆதித் திராவிடரே என்பது தொல்லியல் ஆய்வாளர்களின் முடிவாகும்.

---

20. தொல்லியல் நோக்கில் ஈழவரலாற்றையும் மகாவம்சம் கூறும் விஜயன் கதையையும் ஆராய்ந்த சேனரத்தின (Senaratne - 1969) வடநாட்டிலிருந்து சிங்கள இனம் இங்கு குடிபெயர்ந்ததற்கு எவ்வித சான்றும் இல்லை என எடுத்துக் காட்டியுள்ளார். (சி.க.சிற்றம்பலம் - 1983)



## பின்னிணைப்பு - I

## இராஜசிங்கன் பள்ளு (ஸ்ரீ விஜயராஜசிங்கன் 1739-1747)

1. திருமேவும் புயசயிலச்
செல்வனென வரும் ராசசிங்கன்
அருமேவும் அரசோங்க
ஆதிபரனே யுதவிசெய்வாய்

2. ஆதியருள் பெற்றிராசசிங்கள்
அம்புவியோர்கள் மிகவாழ
வேதியர்சூழ் தென்கதிரை
வேலவர் நித்தந் துணையாமே

3. நித்த கல்யாண தேவேந்திரன்
நீதிபுரக்கு மகாராசன்
முத்துச் சிவிகை தனிலேறு
மோகனவீதி பவனிவந்தான்

4. வரமேவும் வாசவன்போல்
மாணிக்கரத்த முடிபுனைந்து
திரள் பொன்னின் வாளணிந்து
திசைகளெட்டும் அடலிசைகொள்ள

5. இசைவாணர் தமிழ்வாணர்
இங்கித ராகம் பாடிவர
திசைமாரும் வன்னியரும்
சேனைபடை மன்னர் சேசேயென

6. இங்கித நாடக சாலைகளும்
எண்ணவொண்ணாத படைத்திரளும்
பொங்கு கடலொலி போலதிர
பேரிகை கொம்பு மிக முழங்க

7. முழங்கிடிங் கென்னப் பீரங்கியும்
மூன்றுலகார வெடித்துவக்கும்
இளங்குரும்பைத் தனமடவார்
ரத்தப்பொனாலத்தி யேந்திவர

8. தானவர் வானவ ரானோர்
சந்திரசூரிய ரிந்திரரும்
வான்றிசை பாலக ரெண்மரும்
மங்களஞ் சொல்லி மலர்தூவ


9. ராசராசதெய் வேந்திரனே
ராசர் புகழ்ந்திடு மிந்திரனே
பூசுரர் பால நரேந்திரா
புண்ணியராச சிங்கபூபதியே

10. புரந்த புகழ் ராசசிங்க
புண்ணியன் வாழி புகழ்வாழி
வரந்தரும் பொன் மந்திரவாள்
மங்காமலே நிதம் வாழியவே. (பக்.46, 47)

இக்கவி கண்டியில் 1739 முதல் 1747 வரை அரசாண்ட இராஜசிங்கன் மேற்பாடியது. இவ்வரசனது முழுப்பெயர் ஸ்ரீ விஜயராசசிங்கன் என்பது . இவன் மதுரை நாயக்க வம்சத்தவன். ஸ்ரீ வீரநரேந்திரசிங்கனது பட்டத்து ராணியின் சகோதரன். அரசன் பல்லக்கில் ஏறிப் பவனிவரும் சிறப்பை வர்ணித்துக் கூறுவது. இக்கவியில் பீரங்கி முதலிய வெடிக்கருவிகள் பற்றிய செய்தி வருதலை காணலாம்.


மட்டக்களப்பு கவித்திரட்டு - பக்.47

பூசுரர் - பிராமணர்,
நரேந்திரன் - நர + இந்திரன் - பூவுலகஇந்திரன்




வரலாற்றுப் புகழ் மிக்க ஸ்ரீ மடத்தடி மீனாட்சியம்மன் தலத்தில் தற்போது காணப்படும் மீனாட்சியம்மன் ஆலயம் (நிந்தவூர்)





வரலாற்றுச் சிறப்பினைக் கொண்ட அட்டப்பள்ளம் சிங்காரபுர மாரியம்மன் ஆலயம். (அட்டப்பள்ளம்)



பழமை வாய்ந்த சிங்காரபுர மாரியம்மன் ஆலயத்தின் முன்பக்கத் தோற்றம். (அட்டப்பள்ளம்)



நூலாசிரியர்
நா.நவநாயகமூர்த்தி

ஆசிரியர் எழுதி வெளிவந்த நூல்கள் :

1. தமிழரும் முருகவழிபாடும்
2. தொல்லியல் சிந்தனைகள்
3. பண்டைத்தமிழர் பண்பாட்டுக் கோலங்கள்
4. பண்டைய ஈழத்தமிழர்
5. தம்பிலுவில் கண்ணகி வழிபாடு

மல்டி ஒப்செற் அச்சகம், அக்கரைப்பற்று